கத்தோலிக்க மாதாந்த சஞ்சிகை

# ஆசீர்வாதம்

## ASIRVATHAM

August 2012

Rs.50/=



இத்தாலியின் ஜூபிலி தேவாலயம்

விசுவாசமே கிறிஸ்தவ வாழ்க்கை !

மனிதம் மலரும்போது புனிதம் புலர்கின்றது

இன்றும் வாழ்கிறார் இயேசு

அமல உற்பவ மறையுண்மை

தேவத்தை பேராலயத்தில் அருள்பாலிக்கும் தேவதாய்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Home Builder a complete guide for an outstanding house*



**Gardening & Landscaping**






**Interior Decorating**





**Construction & Architecture**

& Many more interesting Topics to turn your house a home

Available at Cargills & Keells Supermarket

for more information please contact

Praveen - 077 4080038

*A Home Improvement Companion* **An Express Publication**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசீர்வாதம்



## அன்பும் அருளும் நட்புறவும் நம்மைச் சூழ்ந்திருக்கட்டும்!

உலகின் மீட்பராம் இயேசுவின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தார் திருத்துவராஜ். குடும்பத்தில் ஏழ்மை இருந்தபோதிலும், தனக்கு ஆரோக்கியமின்மை தொடர்ந்த போதிலும், எல்லாவற்றுக்கம் தீர்வாக ஆண்டவரின் கருணையும் ஆசியும் தனக்குக் கிட்டுமென்ற முழு விசுவாசத்தில் காத்திருந்தார் திருத்துவராஜ். கிறிஸ்துவை நெஞ்சில் நிறுத்தி கண்களில் கண்ணீர் பெருக முழு இரவு ஜெபத்திலும், குணமளிப்புக்காக மன்றாடும் கூட்டங்களிலும் தவறாது கலந்து கொண்டார். என்ன ஆச்சரியம், அவரைப் பல வருடங்களாகத் துன்பப் படுத்தி வந்த ஆஸ்துமா நோய் காணாமலே போய் விட்டது. ஒரே மகளுக்கு வெளிநாட்டில் பணிபுரியும் இன்ஜினியர் வரன் அமைந்தது. இளைய மகன் பள்ளிப்படிப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்தார். கர்த்தரில் நம்பிக்கை கொண்டோர் நலம் பெறுகின்றனர் என்பதற்கு திருத்துவராஜின் வாழ்க்கை ஒரு உதாரணமாயிற்று. பிணியாளர்களுக்கு அற்புத சுகமளிக்கும் மருத்துவராகவும், பாடுகளிலிருந்து விடுதலை அளிக்கும் மீட்பராகவும், நம்மீது பிறர் அக்கறையும் அன்பும் செலுத்தும்படியான அருளைப் பொழியும் கருணைக் கடலாகவும் இயேசுபிரான் இறையரசின் வாயிலாகத் திகழ்கின்றார்.

ஒன்றிப்பின் அடையாளமாகத் திகழும் ஆண்டவரிடம் அன்பும், அருளும், நட்புறவும் மக்களிடையே தழைத்திடவும், சமாதானம் நிலைத்திடவும் மன்றாடுவோம்!

இம்மாத இதழில் புதியனவாக உங்களை மகிழ்விக்க வருவது அருமையான சிறப்புக் கட்டுரைகளும், சிறுவர் படக்கதையும் கூடுதல் சிறுவர் பகுதிகளும் ஆகும்.

- ஆசிரியர்



**Publisher :**
Express Newspapers (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14. Srilanka
Tel: +94-117-322700 (30 Lines)
Fax: +94-112-439987 website: www.virakesari.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலியின் ஜூபிலி தேவாலயம் - 32

கிறிஸ்தவ வாழ்க்கை - 28

அன்பின் மலராய் பரிணமித்த ஒன்பதாம் போப் பயஸ் - 26

தேவத்தை பேராலயத்தில் அருள்பாலிக்கும் தேவதாய் - 14

இன்றும் வாழ்கிறார் இயேசு - 48

ஞானத்தின் ஆவியே அன்பெனும் கொடையைத் தந்தருளும் - 22

சிறுவர் படக்கதை: ஆண்டவர் எவ்விதம் உலகை படைத்தார் - 36





அரிதாகி வரும் குடும்ப உறவுகள் - 10

மனக்காயங்களை ஆற்றுகின்ற மன்னிப்பு - 66

வீரப்பெண்மணி ஜோன் ஆஃப் ஆர்க் - 53

கொழும்பு செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் ஆலயம் - 56

ஆண்டவர் நம் இதயத்தில் பதியப்படுவார் - 9




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்திலிருந்த போது ஆண்டவர் அவர்களுக்காக ஒரு கூடாரம் அமைக்க சொன்னார். தேவன் இறங்கி ஜனங்களோடும், மோசேயோடும் பேசும்படிக்கு அது தேவன் வாசம் பண்ணும் வாசஸ்தலமாய் இருந்தது. சாலொமோன் காலத்தில் தேவன் வாசம் பண்ணுவதற்கு எருசலேம் தேவாலயத்தைக் கட்டினார். ஆனால் இன்றோ, ஆலயமாய் இருக்கிற நம்முடைய சரீரத்தில் தேவன் வாசம் பண்ணு கிறார். நம்மோடு நித்தம் உறவாட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மோசே தேவனுடைய கூடாரத்துக்கு அடிக்கடி போய் தேவனிடம் பேசுவார்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது வாரத்துக்கு நெருங்கிய உறவு கொள்ள வேண்டுமென்று Bettyயிடம் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். அதனால் இயேசுவைப் பார்க்க வாஞ்சித்த தனது படுக்கை அருகில் ஒரு நாற்காலியைப் போட்டு இயேசு அதில் அமர்ந்து பேசும்படியாக ஜெபித்தாள். அதேப்போல இயேசு அந்த அறைக்குள் வந்து, நாற்காலியில் அமர்ந்து தினமும் Bettyயிடம் பேசுவார். இயேசுவினிடம் ஒருநாள், ''என்னை எப்பொழுது சுகமாக்குவீர்'' என்று கேட்டபொழுது தேவன் ஒருநாளை குறிப்பிட்டு, அன்று மதியம் 3 மணியளவில் சுகமாக்குவேன் என்று துல்லியமாகத் தெரிவித்தார்.

Betty இதை தன் தாயாரிடம் அறிவிக்கச் சென்ற போது, தாயார் ''நீ சுகமாகப் போகிறாய்'' என்று சொன்னதும் Betty அதிர்ச்சி அடைந்தாள்.

# தேவனுடைய உறவில் நெருக்கமாயிரு!



ஒருநாள் ஆலயம் சென்று அவரை ஆராதித்து விட்டு வந்துவிடுவது அல்ல. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும் தேவனோடு உலாவி, நடந்து தேவனுடைய சத்தத்தை கேட்பதாகும். பெட்டி பாக்ஸ்டர் (Betty Baxter) என்ற வாலிப பெண்ணின் தேவ உறவை குறித்த தான, உண்மை சரிதையை புத்தகத்தில் வாசித் தேன். அவள் குழந்தையாய் பிறந்த போது அவளுடைய முதுகெலும்பு ஒன்றோடொன்று பின்னி இருந்ததால் அவள் கூனி, குறுகி, வளைந்து காணப்பட்டாள். மருத்துவர் யாராலும் எதுவும் செய்ய முடியாது என்று கைவிட்ட நிலையில் 14 ஆண்டுகளாக கூனி குறுகினவளாக படுத்தப் படுக்கையாகவே இருந்தாள்.

ஆனால் அவளுடைய தாயார் தேவனிடம் ''உன்னிடம் பேசின தேவன் என்னிடமும் பேசினார்'' என்றாள். Bettyயும் அவளது தாயாரும் தேவனுடைய உறவில் அத்தனை நெருக்கமாக காணப்பட்டனர். சரியாக இயேசு சொன்ன அதே நாளில் 3 மணிக்கு Bettyயை அவளது தாயார் ஒரு நாற்காலியில் தூக்கி வைத்து சில நண்பர்களோடு இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தார். இயேசு அந்த அறையில் வந்து அவளது முதுகெலும்பைத் தொட்டு, அற்புத சுகம் பெறும்படி செய்தார். நாமும் Bettyயைப் போல தேவனோடு உறவாட வாஞ்சிக்கும்போது அவர் நம்மோடு பேசி, தம்மை வெளிப்படுத்தி பல அற்புதங்களை நம் வாழ்வில் செய்ய வல்லவராயிருக்கிறார்.

– சகோ. மோகன் சி. லாசரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு மனிதரின் இதயங்களை குணப்படுத்த வந்தார்

**நாம்** நமது அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து விடுபட வேண்டுமென்றே இறைவனிடம் செபிக்கின்றோம், அது சரியானதே, ஆயினும் நாம் விசுவாசத்தில் உறுதியாய் இருக்குமாறு இறைவனிடம் விரும்பிக் கேட்கவேண்டும் என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் கூறினார்.

நாம் விசுவாசத்தில் உறுதியாய் இருப்பதற்காகச் செபிக்கும்போது நமதாண்டவர் நமது வாழ்வைப் புதுப்பிக்கிறார் என்றுரைத்த திருத்தந்தை, அவர் நம்மைக் கைவிடமாட்டார் என்பதிலும், அவரது அன்பிலும் பராமரிப்பிலும் உறுதியான நம்பிக்கை வைக்கவும் இது உதவுகின்றது என்று கூறினார்.

யாயிர் என்பவரது மகள், இரத்தப்போக்கினால் வருந்திய பெண் ஆகிய இரண்டு பெண்களையும் இயேசு குணமாக்கிய நிகழ்ச்சி குறித்து ஞாயிறு மூவேளை செப உரையில் விளக்கிய திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

மனிதத் துன்பங்களையும் உடல் நோய்களையும் இயேசு குணமாக்கியதோடு, மனித இதயங்களையும் குணமாக்கி அவற்றுக்கு மீட்பளிக்க வந்தார் என்பதையும் இவ்விரு புதுமைகளும் விவரிக்கின்றன என்றும் திருத்தந்தை கூறினார்.

நலவாழ்வுப் பணியாளர்கள் மனிதரின் ஒருங்கிணைந்த நலவாழ்வில் அக்கறை காட்டுவதற்கு இவ்விரு புதுமைகளும் தூண்டுகின்றன என்றும் உரைத்த திருத்தந்தை, இந்த விலைமதிப்பில்லா நலப்பணியில் தொழில் ரீதியாகத் தேர்ச்சி பெற்றிருப்பதும் மட்டும் போதாது, அத்துடன் நல்ல இதயம் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

நமது விசுவாசப் பயணத்திலும், அன்பை நடைமுறைப்படுத்துவதற்கான நமது அர்ப்பணத்திலும் அன்னை மரியாவின் உதவியை நாடுவோம் என்று அழைப்பு விடுத்து மூவேளை செப உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர்.


*********************

## மட்டக்களப்பு தனி மறைமாவட்டம் ஆனது

**பேரருட்திரு ஜோசப் பொன்னய்யா முதல் ஆயர் - திருத்தந்தை நியமனம்**

இம்மாத முதல் வாரத்தில், திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர், மட்டக்களப்பை புதிய மறைமாவட்டமாக உருவாக்கி, ஆயர் ஜோசப் பொன்னய்யா ஆண்டகையை அம்மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமித்தார்.



திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து, தனியாகப் பிரிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அடங்கும்.

11 இலட்சத்துக்கும் அதிகமான மக்களைக் கொண்ட இந்த மறைமாவட்டப் பகுதியில் 55 225 கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். 24 பங்குத் தலங்களை உள்ளடக்கிய இப்புதிய மறைமாவட்டத்தில் 35 மறைமாவட்ட குருக்களும், 97 இருபால் துறவியரும் பணி செய்கின்றனர்.

இப்புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகப் பொறுப்பேற்கும் ஆயர் ஜோசப் பொன்னய்யா, 1952ஆம் ஆண்டு தன்னாமுனையில் பிறந்தார். 1980ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், 2008ஆம் ஆண்டு ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு, திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் அவர்களால் நியமிக்கப்பட்டவர்.

********************

## 'சுதந்திரத்தின் 15 நாட்கள்' இறுதித் திருப்பலியில் பிலடெல்பியா பேராயரின் மறையுரை

இறைவனுக்குக் கீழ்ப்படிவது என்ற அடிப்படைச் சுதந்திரத்தை எந்த ஓர் அரசும் தரவோ, பெறவோ முடியாது என்று அமெரிக்கப் பேராயர் ஒருவர் கூறினார்.

ஜூன் 21ஆம் திகதி முதல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இரு வாரங்களாக நடைபெற்ற 'சுதந்திரத்தின் 15 நாட்கள்' என்ற போராட்டத்தின் இறுதி நாள் இம்மாதம் 4ஆம் திகதி புதன்று கொண்டாடப்பட்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் சுதந்திர நாளன்று முடிவடைந்தது.

இந்தப் போராட்டத்தின் இறுதித் திருப்பலி வொஷிங்டன் நகரில் உள்ள அமல அன்னை தேசியத் திருத்தலத்தில் நடைபெற்றது. இத்திருப்பலியில் மறையுரையாற்றிய பிலடெல்பியா பேராயர் சார்ள்ஸ் சார்பட், உண்மையானச் சுதந்திரத்தை அடைய செல்வம், புகழ், இன்பம் என்ற பல வாழ்க்கைக் கூறுகளையும் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கும் என்று கூறினார்.

"சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" என்ற விவிலிய வார்த்தைகளின் அடிப்படையில் தன் மறையுரையை வழங்கிய பேராயர் Chaput, மனிதர்களால் படைக்கப்பட்ட உலக அரசுகள் மனசாட்சிக்கும், இறைவனின் விருப்பத்துக்கும் எதிராகச் செயல்படுவதை நாம் சகித்துக்கொள்ளத் தேவையில்லை என்று கூறினார்.

மனசாட்சிக்கு எதிராக இயற்றப்படும் அரசு



ஆணைகளுக்கு பணியாமல், இறைவனுக்கு உகந்ததை இறைவனுக்கே வழங்க வேண்டும் என்று பேராயர் அழைப்பு விடுத்தார்.

********************

## 2011ஆம் ஆண்டில் திருப்பீட நிதி நிலை

திருப்பீடத்தின் 2011ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கோடியே 48 இலட்சத்து 90 ஆயிரத்து 34 யூரோக்கள் நிதிப்பற்றாக் குறை இருந்ததாக திருப்பீடம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை கூறுகின்றது.

திருப்பீடத்தின் நிர்வாகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கான கர்தினால்கள் அவை திருப்பீடச் செயலர்



கர்தினால் தர்ச்சிசியோ பெர்த்தோனே தலைமையில் நடத்திய கூட்டத்தின் இறுதியில் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய நிதிச்சந்தையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும், கடந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியோடு திருப்பீடத்தில் 2832 பேர் ஊதியம் பெறுபவர்களாய் இருந்ததும், திருப்பீட ஊடகத் துறைகளின் செலவினங்களும் இந்தப் பற்றாக் குறைக்குக் காரணங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும், நிர்வாகத்தில் தனித்தியங்கும் வத்திக்கான் நகரத்தில் 2011ஆம் ஆண்டின் வரவு செலவுப் பட்டியலில் 21 கோடியே 84 இலட்சத்து 3,851 யூரோக்கள் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் திருப்பீட அறிக்கை தெரிவிக்கிறது.

2011ஆம் ஆண்டு டிசம்பரில் வத்திக்கான் நகரத்தில் 1887 பேர் பணியில் இருந்ததாகவும், வத்திக்கான் அருங்காட்சியகம், திருத்தந்தையின் பிறரன்புப் பணிகளுக்கென வழங்கப்படும் இராயப்பர் காசு என்ற நன்கொடை, IOR என்ற சமயப்பணிகள் நிறுவனம் என்பவற்றாலும் கிடைத்த நிதி ஆகியவற்றாலும் வத்திக்கான் நகர வரவு செலவுக் கணக்கில் வரவைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவு குறைவாக இருந்ததாகக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் வத்திக்கான் அருங்காட்சியகத்தை 50 இலட்சத்துக்கு மேற்பட்டோர் பார்வையிட்டனர் எனவும், அதனால் கிடைத்த வருமானம் 9 கோடியே 13 இலட்சம் யூரோக்கள் எனவும், இத்தொகை, அதற்கு முந்தைய ஆண்டைவிட 89 இலட்சம் அதிகம் எனவும் அவ்வறிக்கை கூறுகிறது.

திருத்தந்தையின் பிறரன்புப் பணிகளுக்கென 2010ஆம் ஆண்டில் 6,77,04,41,641.41 கிடைத்த நிதி 2011ஆம் ஆண்டில் 6,97,11,72,276 டொலராக அதிகரித்திருந்தது என்றும், IOR என்ற சமயப்பணிகள் நிறுவனம் 2011ஆம் நிதி ஆண்டில் 4 கோடியே 90 இலட்சம் யூரோக்களை திருத்தந்தைக்கு வழங்கியது என்றும் அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் திருப்பீடத்துக்கு உதவும் விசுவாசிகள் மற்றும் திருஅவை நிறுவனங்களுக்கு நன்றியும் தெரிவித்துள்ளது கர்தினால்கள் அவை.

*********************

## அமேசன் மழைக்காடுகளில்கூட காலனி ஆதிக்கப் போக்கு

**- பிரேசில் ஆயர்கள் புகார்**

**தெ**ன் அமெரிக்காவில் அமேசன் பருவ மழைக் காடுகளைச் சுரண்டுவதில்கூட காலனி ஆதிக்கப் போக்கைத் தாங்கள் பார்ப்பதாக பிரேசில் ஆயர்கள் குறை கூறினர்.



அமேசன் பகுதியில் வெளிநாட்டவர் நுழைந்து வளங்களைச் சுரண்டி அப்பகுதி மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து எந்தக் கவலையுமின்றி அப்பகுதியை விட்டுச் செல்வதற்கு பிரேசில் அரசு அனுமதியளிக்கின்றது என்று கெமிடா ஆயர் ஜீசஸ் மரியா பெர்டொன்சஸ் கூறினார்.

அமேசன் பகுதியில் இடம்பெறும் கனிமவளச் சுரங்கங்கள் மற்றும் வேளாண்மையால் கிடைக்கும் இலாபங்கள் அப்பகுதியிலேயே முதலீடு செய்யப்பட வேண்டும் என்றும், இதில் அப்பகுதி மக்களும் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்றும் பிரேசில் ஆயர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தென் அமெரிக்காவில் 170 கோடி ஏக்கர் நிலபரப்பைக் கொண்ட அமேசான் பகுதியில் 140 கோடி ஏக்கர், பருவமழைக் காடுகளைக் கொண்டது. இதில் 60 விழுக்காட்டுப் பகுதி பிரேசில் நாட்டைச் சேர்ந்தது. 13 விழுக்காட்டுப் பகுதி பெரு நாட்டையும், 10 விழுக்காட்டுப் பகுதி கொல்ம்பியாவையும், வெனிசுவெலா, ஈக்வடோர், பொலிவியா, கயானா, சுரிநாம் மற்றும் ஃப்ரென்ச் கயானா நாடுகள் இதில் சிறிய பகுதியையும் கொண்டுள்ளன.

*********************

## எமது முயற்சிகள் அனைத்தும் சிரியாவில் போரை நிறுத்தும்

**- திருப்பீடத் தூதர்**

**சி**ரியா மக்களின் அமைதி மற்றும் ஒப்புரவுக்காக எடுக்கப்பட்டு வரும் அனைத்து



முயற்சிகளுக்கும் அனைத்துலக சமுதாயம் ஆதரவு வழங்க வேண்டுமென்று அந்நாட்டுக்கானத் திருப்பீடத் தூதர் பேராயர் மரியோ ஸெனாரி கேட்டுக் கொண்டார்.

அன்பு வாசகர்களே! உங்கள் கதைகள், கட்டுரைகள் மற்றும் சபை நிகழ்ச்சிகளை எங்களுக்கு அனுப்புங்கள்.

**'ஆசீர்வாதம்'** பற்றிய தங்களின் எண்ணங்களையும் எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

முகவரி:

**ஆசீர்வாதம்**

**12-1/1, செள். செபஸ்தியன் மாவத்தை, வத்தளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மையப்படுத்தும் செபமுறை ஆதிகாலத்தில் இருந்தே கிறிஸ்துவ மரபில் இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக - புனித அவிலா தெரசா, புனித சிலுவை யோவான், இச்செபமுறைக்கு முன்னோடியாக இருந்து வந்துள்ளனர்.

அண்மையில் அமெரிக்காவிலுள்ள சில சிஸ்டர்சிய துறவு தந்தையர்கள் இம்முறையை வளர்த்து பொதுமக்கள் மத்தியில் பரப்பியுள்ளனர். இம்முறையானது, காட்சி தியான கிறிஸ்துவ மரபில் ஊன்றியுள்ளது. மேலும் இச்செபமுறை கிறிஸ்தவ சென், கிறிஸ்தவ யோகா ஆகிய முறைகளோடு தொடர்பு உடையது. மையப்படுத்தும் இச்செப முறை இயேசுவின் நாம செபத்தை ஒத்துள்ளது.

இத்தகைய தியானமுறை பெனடிக்ட் சபையை சார்ந்த துறவி ஜான் மெய்ன் என்பவரால் சமீப காலத்தில் அதிகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது இம்முறை மிகவும் எளிதானது. நாம் இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தில் ஊன்றியுள்ளது.



# ஆண்டவர் நம் இதயத்தில் பதியப்படுவார்!



அமைதியாக உட்கார்ந்து மூச்சு பயிற்சி தொடங்கலாம். உள் அமைதியில் ஒரு சிறிய செபத்தை எடுத்துக் கொள்ளலாம். இச்செபத்தை நம்பிக்கையோடும், முழு கவனத்தோடும், அன்போடும் மீண்டும், மீண்டும் உச்சரிக்க வேண்டும்.

இச்செபத்தின் உட்பொருளை உணர்ந்து அதில் அடங்கி யுள்ள உண்மையோடு ஐக்கியமாக முயல வேண் டும்.

பராக்குகளுக்கு உள்ளாகும் போது மீண்டும் மந்திரத்துக்கு திரும்பி வரவேண்டும். மற்ற முறைகளைப் போலவே வார்த்தைகளிலிருந்து மௌனத்துக்கும், மௌனத்திலிருந்து வார்த்தைக்கும் பயணம் செய்ய வேண்டும்.

நாம் எடுத்துக்கொண்ட புனித செபத்தை யேசுவை மையப்படுத்தி சொல்லும்போது நம்மை புது மனிதர்களாக மாற்றும் சக்தி பிறக்கிறது. இந்த மாற்றம் நிகழ, நம்மில் உறையும் தூய ஆவியார் நம் தியானத்தில் உள்மூச்சாக உள்ளார்.

புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றில் புனித ஆன்ட்டியாக் இஞ்ஞாசியார் இதயத்தில் இயேசுவின் நாமம் பதியப்பட்டுள்ளதாக வாசிக்கின்றோம். இவ்விதம் இச்செபத்தின் வழியாக இயேசு நம் இதயத்தில் பதியப்படுவார். இதுவே இச்செபமுறையில் சிறந்த அனுபவம்.

- சேவியர் இருதயராஜ் சே.ச.

## பொன்மொழிகள்

★ பிறர் அன்புக்கு அடையாளம் என்ன? அன்பு செய்யப்படுபவரின் உடல், உள்ள நன்மைக்காகவே செயல்படுவதாகும்.

- *புனித பெரிய பேசில்*

★ பேசுவதற்குப் பேசியே கற்கின்றோம்; படிப்பதற்குப் படித்தே கற்கின்றோம்; வேலை செய்வதற்குச் செய்தே பழகிக் கொள்கிறோம். அதுபோல, அன்பு செய்தே அன்பைக் கற்றுக்கொள்.

- *புனித பிரான்சிஸ் தே சேல்ஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரிதாகி வரும் குடும்ப உறவுகள்

நான்கு வயது பையன் தனது தந்தையைப் பார்க்க வேண்டும், அவருடன் நீண்டநேரம் பேச வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால் அவனது தந்தையோ வாரத்தில் 6 நாட்கள் அவன் உறங்கிய பிறகுதான் வீட்டுக்கே வருவார். அப்படிப்பட்ட அலுவல் அவருக்கு. 7ஆவது நாளும் நண்பர்கள், சொந்தம் என்று ஏதோ ஒன்றைச் சொல்லி வீட்டில் இருப்பதில்லை. ஒரு நாள் பையன் எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை, அப்பாவை பார்த்து விட்டுத்தான் தூங்க வேண்டும் என்று எண்ணி அவருக்காக காத்திருந்தான். அப்பாவும் வந்தார். பையன் விழித்திருப்பதைப் பார்த்து ஒருபுறம் மகிழ்ச்சி மறுபுறம் ஆச்சரியம். அவனுடன் சிறிது நேரம் விளையாடியபின் போய் தூங்கு என்று பையனிடம் சொல்ல பையன் கேட்டான். ''அப்பா உங்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு எவ்வளவு சம்பளம்?'' என்று. அப்பாவுக்கு கோபம். என்றைக்குமில்லாம இன்றைக்கு இவ்வளவு நேரம் விழித்திருந்தது இதற்குத்தானா என்று கோபப்பட்டுத் திட்டி அவனைத் தூங்க அனுப்பினார். அவனும் சென்று படுக்கையில் படுத்து புரண்டு கொண்டிருந்தான். அதிகமாகத் திட்டிவிட்டோமோ என்று மனம் உதைக்க மகனுடைய படுக்கையறைக்குச் சென்று அவனது தலையைக்கோதி விட்டபடி ''எனக்கு ஒருமணி நேரத்துக்கு 200 ரூபாய் சம்பளம்'' என்று சொன்னார். பையன் 100 ரூபாய் கடன் கிடைக்குமா என்று கேட்க கடன் வாங்கி என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப் போகிறாய் எனச் சொல்லிக்கொண்டே 100 ரூபாவை அவனிடம் கொடுக்க தலையணைக்கடியிலிருந்து இன்னொரு நூறு ரூபாவை எடுத்து நீட்டி, "நாளைக் காலை எனக்காக ஒருமணி நேரம் உங்களால் செலவிட முடியுமா?" என்று கேட்டானாம்.

இன்றைய அசுரவேக உலகத்தில் வேலை அல்லது பணிநிர்ப்பந்தம் மற்றும் பிற அலுவல் காரணங்களால் கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள் ஒருவரையொருவர் நேருக்கு நேராகப் பார்ப்பது பேசுவது கூட அரிதாகி வருகிறது என்பதைக் காட்டவே இந்த நிகழ்வைக் குறிப்பிட்டேன். நவீன முறையில் காட்சிப் பேழை வழியாகப் பார்ப்பது பேசுவது அலைபேசி வழியாக செய்திகளைப் பரிமாறிக் கொள்வது என உறவுப் பரிமாற்றமே இன்று புதிய பரிணாம வளர்ச்சியில் பயணிப்பதைப் பார்க்கின்றோம். இப்படி அரிதாகி வரும் குடும்ப உறவுகளைப் புதுப்பிக்க குடும்பமாக எல்லோரும் நெருங்கி வர மிகச்சிறந்த காலம் கோடை விடுமுறைக் காலம் எனலாம்.

விடுமுறை எப்பொழுது வரும் என குடும்பமே காத்திருப்பதை பார்க்கின்றோம். நாடு விட்டு நாடு சென்று பணிபுரிபவர்களுக்கு விடுமுறை என்ற வார்த்தையிலுள்ள அர்த்தம் உள்ளூரிலேயே உள்ள ஒருவருக்கு இருக்காது. விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவன் பருவத் தேர்வு விடுமுறைக்கான நாள், நேரம், நிமிடம் என நொடிகளைக்கூட கணக்கீட்டு அந்த நாளுக்காக காத்திருக்கும் அந்தத் தவிப்பு. இவற்றுக்கெல்லாம் கார ணம் விடுமுறையை 84 சதவீத மக்கள் குடும்பத்தோடு செலவழிக்க விரும்புகிறார்கள் என்று ஓர் ஆய்வு சொல்கிறது.

சுற்றுலாத் தலங்கள் வழிபாட்டுத்தலங்கள் நீர் வீழ்ச்சிகள் என்று எங்கு பார்த்தாலும் அலை மோதும் கூட்டம். பேருந்து தொடர்வண்டி இன்ப ஊர்திகள் என அனைத்து வகையான போக்குவரத்து அமைப்புகளும் கோடைகால சிறப்பு ஏற்பாடுகளால்கூட சமாளிக்க முடியாத அளவு சனக்கூட்டம். வெயில் வெட்கை வியர்வை என்று சிரமங்களைக்கூட பொருட்படுத்தாத தியாகம் என்று விடுமுறையை குடும்பத்தோடு செலவிடுவதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆண்டு முழுவதும் நடக்காதது அப்படி என்ன நான்குநாள் விடுமுறையில் நடந்து விடப் போகிறது என்று யதார்த்தமான கேள்வி எழுந்தாலும் நான்கே நாட்களானாலும் குடும்பமாக பயணம் செய்து புதிய இடம் புதிய மனிதர்கள் என மாறுபட்ட ஒரு சூழலில் இருப்பது பல நன்மைகள் உருவாக காரணமாய் அமைகிறது. பத்து பைசா செலவு செய்தாலும் ஆயிரம் கேள்வி கேட்கும் அப்பா கேட்பதையெல்லாம் வாங்கித் தருவதைப் பார்க்கும் பையனுக்கு பயங்கர ஆச்சரியம். கணவன் இப்படி சிரித்துப் பார்த்து வருடமானதை மனைவி நினைத்து உள் ளூர அடையும் மகிழ்ச்சி. சின்ன சின்னதாய் இருந்த மனக்கசப்புகள் மறைந்து பாசத்தை, புது விதமாய் அனுபவிக்க கிடைத்த வாய்ப்பு. பாத்திரம் பண்டம் சதாசமையல் என்ற செக்குத்தன மான வீட்டிலிருந்து வெளியேறிய ஒரு விடுதலை உணர்வு. இந்த நிமிடம் இப்படியே நிலைக்காதா என்ற ஏக்கம். மாமனார்-மாமியார் ஏனைய குடும்ப உறவுகளின் மூச்சுக்காற்று இல்லாத இடம் தரும் சுக உணர்வு என அடுக்கிக் கொண்டே போகலாம். விடுமுறை காலத்தை நன்கு சரியாக பயன்படுத்தினால் அதுவும் குடும்பமாகப் பயன்படுத்தினால் வாடிய உறவில் வசந்தம் வீசவும் சந்தேகங்கள் மறைந்து சந்தோஷங்கள் பெருகவும் வாய்ப்புகள் அதிகம். மேலை நாடுகளில் விடுமுறை வரை சில நேரங்களில் காத்திருப்பதில்லை. இடையிலேயே கணவன் - மனைவி மட்டும் தனியாக கேம்ப், திடல்கள் என ஒதுக்கப்பட்ட காடுகளுக்கு தனியாகச் சென்று தங்களது உறவில் வரும் விரிசல்களைச் சரிசெய்ய எடுக்கும் முயற்சிகளில் நமக்கு வழிகாட்டிகளாக அமைகின்றனர். குடும்பமாக செலவிடும் விடுமுறையில் நன்மைகள் மட்டும் தான் நடக்கின்றனவா என்றால் அது கேள்விக்குரியதே. வீட்டிலே இருக்கும்போது சண்டையே இல்லாமல் இருந்த ஒரு குடும்பம் விடுமுறைக்கு போய் நான்கு நாட்களும் சண்டை நாறி திசைக்குகொரு ஆளாய் திரும்பி வந்த வரலாறும் உண்டு. பயணம், புதிய சூழல் இவை ஏற்படுத்திய நெருக்கடிகளுக்கு பழக்கமின்மை மற்றும் இதனால் ஏற்பட்ட மன அழுத்தம் குழப்பம் மற்றும் படபடப்பு சண்டையாக உருமாற வாய்ப்புகள் அதிகம்.

- அருட்தந்தை அந்தோனி ராஜா

## ஆண்டவரே உம்மை புகழ்கின்றேன்!

★ எகிப்து நாட்டிலிருந்து எங்களை அழைத்து வந்த கடவுளே,

*உம்மைப் புகழ்கின்றேன்!*

★ நெருக்கடி வேளையில் ஆண்டவரே நீர் எமக்குப் பதில் அளிப்பீர்,

*உம்மைப் புகழ்கின்றேன்!*

★ வெற்றியளிக்கும் உம் வலக்கையின் ஆற்றலைக் காட்டுகிறவரே,

*உம்மைப் புகழ்கின்றேன்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்க – கிறிஸ்தவ திருமணம்



**ரத்த உறவு (தி.ச. 1091)**

இ

கிறிஸ்தவ குடும்பத்தின் ஆரோக்கியம் கருதி, மேலும் வளமையான சந்ததியை முன்னிறுத்தி, தி.ச. 1901 ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் படி, கிறிஸ்தவர் தன்னுடைய வழித்தோன்றல்களையோ, (மகன், மகள், பேரன், பேத்தி) அதேபோல மகன், மகள், பேரன், பேத்தி போன்றோர் தங்களை ஈன்றவர்களையோ திருமணம் செய்ய முடியாது. இரண்டாவதாக கிறிஸ்தவர் ஒருவர் தன்னுடைய அண்ணன் மகனையோ அல்லது அக்காள் மகளையோ திருமணம் செய்ய முடியாது. மூன்றாவதாக கிறிஸ்தவர் ஒருவர் தன்னுடைய அத்தை மகளையோ அல்லது மாமன் மகனையோ திருமணம் புரிய முடியாது. இவையெல்லாம் இரத்த உறவு சம்பந்தப்பட்ட முறியல் தடைகள். இவற்றை விளக்கமாகக் காண்போம்.

தி.ச. 208 இரத்த உறவுகளை (Consanguinit) நேர்வழி (Direct line) என்றும் கிளைவழி (Collateral Line) என்றும் பிரிக்கின்றது.

நேர்வழியில் ABC இந்த மூவரும், மூவரில் யாருடனும் திருமணம் செய்து கொள்ள திருச்சபை தடை விதிக்கின்றது.

தி.ச. 1901இன் படி திருச்சபையில் நேர் வழியில் உள்ள உறவினர்களிடையே திருமணம் முழுமையாக தடை செய்யப்படுகின்றது. அது இயற்கையாக (Natural) இருக்கலாம் அல்லது சட்டப்பூர்வமானதாகவும் (Legitimate) இருக்கலாம். உதாரணமாக மகன்/மகள் என்று தத்து எடுத்து வளர்த்தவர்கள், தத்து எடுத்த நபர்களுக்குப் பெற்றோர் ஆதலால், அவர்களுக்கிடையே திருமணத்தை திருச்சபை தடைசெய் கின்றது. பிரிவு 3இன்படி கிளைவழியில் நான்காம் கால் இரத்த உறவு வரை திருமணத்துக்கு தடை உள்ளது. அதாவது அத்தை மகன் - மாமா மகள் உறவில் உள்ள இருவரும் திருமணம் புரிய முடியாது. அதற்கு முறியல் தடைகள் உள்ளன. இந்த இரத்த கால் உறவுகளை எப்படிக் கணிப்பது?

தி.ச.108இன்படி இருவருக்கும் நடக்கவிருக்கும் திருமணத்தில் இரத்த உறவுகளால் வரும் நபர்களைக் கணக்கிட வேண்டும். அதில் குல முது வரை கழித்துவிட்டால், மீதமிருக்கும் எண்கள் தான் இரத்த உறவு முறைகள் A என்ற மாமாவுக்கும் E என்ற தன் அக்கா மகளுக்கும் உள்ள உறவு 2ஆம் கால் இரத்த உறவு. அதில் குலமுதுவர் A அவரை நீக்கினால் வருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B.E.C. என்னும் 3 உறவுமுறைகள். ஆகவே Bக்கும், Eக்கும் உள்ள இரத்தக்கால் முறை, மூன்றாம் கால் உறவு முறை. ஆகவே, கிறிஸ்தவ ரான ஒருவர், தன் அக்காள் மகளைத் திருமணம் செய்ய தடையுள்ளது. அதேபோல E என்ற மறுமகள் தன் மாமாவை B திருமணம் புரிய தடை உள்ளது. ஏனென்றால் 3ஆம் கால் இரத்த உறவால் இவை தடை செய்யப்பட்டுள் ளன.

**4ஆம் கால் இரத்த உறவு:**

Dயும் Eயும் திருமணம் புரிய நான்காம் கால் இரத்த உறவு தடை உள்ளது. இவ்வுறவில் வரும் பந்தங்கள் முறையே A,B,D,EC ஆகும். இதில் 5 உறவுகள் உள்ளன. குலமுதுவர் (Common Ancestor) I, அதாவது A-வை நீக்கினால் மீதமுள்ள உறவு நிலைகள் (BDEC) 4. ஆகவே D க்கும் E க்கும் உள்ள உறவு 4-ஆம் கால் இரத்த உறவு மாமா மகளும் அத்தை மகனும் திருமணம் செய்ய முடியாது. ஆனால் நமது தமிழ் கலாசாரத்தில் இவ்வகைத் திரு மணங்கள் வழிவழியாகக் கடைபிடிக்கப்படுவ



அன்னை மேரி ஆலயம் மாசின் சிட்டி

தால், தமிழ் கிறிஸ்தவர்கள் என்ன செய்வார் கள்?

திருச்சபை பொதுவாக இந்த திருமண பந்தங்களைத் தடை செய்கிறது. ஆனால் தகுந்த காரணங்கள் இருப்பின் அந்த அந்த மறை மாவட்ட ஆயர் 3-ஆம் மற்றும் 4-ஆம் கால் இரத்த உறவுகளுக்கு விலக்கீடு (Dispensation) தர முடியும். கிளை வழியில் தரும் 3ஆம், 4ஆம் கால் இரத்த உறவுகளுக்கு மட்டுமே (அண்ணன் மகள்; மாமா மகன்) ஆயர் விலக்கீடு தரலாம். ஆனால் நேர்வழியில் (அப்பா/அம்மா/மகன்/ மகள்/பேரன்) என்று வரும் எந்த இரத்த உறவு களுக்கும் திருமணம் புரிய தடைவிதிக்கப்பட் டுள்ளது. அதுபோல கிளை வழியில் (Colleateral Line) 2-ஆம் இரத்தக்கால் உறவு (2nd Degree Consanguinity) வரை திருமணம் புரிய தடை விதிக்கப்பட்டுள்ளது. 2-ஆம் கால் இரத்த உறவு என்பது அண்ணன், தங்கை மேலும் அக்கா, தம்பி உறவு முறைகள்.

பிரிவு 3 (3) கூறுகின்றது. ஒரு திருமணத்தில் நேர்வழியில் (Direct Line) எந்தக் காலிலாவது (Degree) அல்லது கிளைவழி இரத்த உறவில் இரண்டாம் காலில் (In the Second Degree of Collateral Line) இரத்த உறவினர்களாக உள்ள னரா என்ற ஐயம் எழுந்தால், அந்த ஐயம் நீக் கப்படும் வரை அத்திருமணம் திருச்சபையால் தடை செய்யப்பட்டுள்ளது.

II. திருமணவழி உறவு (தி.ச. 1092)

மேலே நாம் பார்த்தது இரத்த வழி உறவு (consanguinity). இப்போது பார்க்கப் போவது திருமண வழி (Affinity) என்பது என்ன? தி.ச. 109இன்படி ஒரு செல்லத்தக்க திருமணத்தின் வழி யாக அத்திருமணம் தாம்பத்திய உறவால் முழுமை பெறவில்லை என்றாலும், திருமண வழி உறவு ஏற்படுகின்றது. இவ்வுறவு ஆணுக் கும் பெண்ணின் இரத்த உறவினருக்குமிடையி லும், அவ்வாறே பெண்ணுக்கும் ஆணின் இரத்த உறவினருக்குமிடையே எழுகின்றது. திருமண சட்டம் 1092 திருமணவழி உறவை, நேர்வழி யில் உள்ள எல்லா கால்களிலும் (Aall Degrees of Direct Line) தடை செய்யப்பட்டதாக அறிவிக் கின்றது. இத்திருமண உறவை (Affinity) எவ் வாறு கணிப்பது? தி.ச. 109-2இன்படி, தன்னு டைய கணவரின் இரத்த உறவினர்கள், அவ ருக்கு எந்த வழியில் (Line), எந்த காலில் (Degree) இரத்த உறவினர்களோ, அதே வழியில் அதே காலில், மனைவிக்கும் திருமண உற வினர்கள் ஆகின்றனர். இம்முறை கணவருக்கும் அதேபோல் பொருந்தும்.

ஆகவே திருமண உறவு, நேர்வழியில் எல்லாக் கால்களிலும் திருமணத்தை செல்லாத தாக ஆக்குகின்றது. ஆனால் கிளைவழியில் (Collateral Line) இதற்கு முறியல்தடை இல்லை. ஆகவே தன்னுடைய மனைவி இறந்தபின்னர் மனைவியின் சகோதரி (Sister in Law)யையோ, அதேபோல தன்னுடைய கணவர் இறந்தபின், கணவரின் சகோதரரையோ (Brother in law) ஒருவர் திருமணம் புரிய தடையில்லை.

இறுதியாக, திருச்சபை எதற்காக இந்த இரு வகை திருமணங்களை தடை செய்கின்றது என் றால், இரண்டு காரணங்களுக்காக அப்படி செய்கின்றது. (1) குடும்ப உறவுகளான சகோ தரன் - சகோதரி, பெற்றோர் - பிள்ளைகள், மாமனார் - மருமகள் போன்ற புனித உறவு நிலை களைப் பாதுகாப்பதற்காக (2) மிக நெருக்கமாக உள்ள இரத்த உறவுகளால் ஏற்படுத் தப்படும் திருமணங்களில், வளமையான மக்கட்பேறு கிடைப்பது அரிது. ஆகவே திருமணம் புரிவோர் அந்நியத்தில் திருமணம் செய்து கொள்ள ஆவல் கொள்வார்களாக.

– அருட்தந்தை ஜான் திரவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவத்தை பேராலயத்தில் அருள்பாலிக்கும் தேவதாய்!



(சென்ற மாதத் தொடர்ச்சி...)

**1940** மே 25ஆம் திகதி பேரருட்திரு மெசோன் ஆண்டகை அன்னையிடம் நேர்த்தி வைத்தார் என வரலாற்றுக் குறிப்பு கூறுகின்றது. 1942ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் குழுக்களாக வந்து அன்னையிடம் மன்றாடுமாறு அழைத்தார் என்றும் 1948ஆம் ஆண்டில் இருந்து அதிவந்தனைக்குரிய கர்தினால் தோமஸ் கூறே தலைமையில் சிறுவர் தின வழிபாடு ஆரம்பமானது என்றும் வரலாறு கூறுகின்றது.

சிறுவர் தினம் வருடாந்தம் கொண்டாடப் பட்டு, 1998ஆம் ஆண்டில் சிறுவர் தின பொன் விழாவும் கோலாகலமாக நடந்தேறியது என்பதையும் நாம் அறிகின்றோம்.

அதுமட்டுமல்ல, தவக்காலத்தில், தமிழில் திருச்சிலுவைப்பதை மிக பிரமாண்டமாக அன்னையின் ஆலயத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. சிலுவைப் பாதையில் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர். சிலுவைப்பாதையைத் தொடர்ந்து திருப்பலியும், பிற்பகலில் திருமணி ஆராதனையும் நடைபெற்று வருகின்றது. கொழும்பிலிருந்து ஏராளமானோர் இதில் கலந்து கொள்வர்.

ஆசியக் கண்டத்திலே சிறந்த உயர்ந்த தேவாலயமாகக் கருதப்படும் இத் தேவாலயத்திலே ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை அன்னைத் திருவிழா மற்றும் நற்கருணைப் பெருவிழா, சிறுவர் தினம், நோயாளர் தினம் என்பன சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இன்றும் எந்த ஒரு திருவிழாவானாலும், இத் தேவாலயத்தில் வந்து கூடும் பக்தர்களின் எண்ணிக்கைக்கோ குறைவே இருப்பதில்லை. ஏனைய நாட்களிலும், குறிப்பாக மாதத்தின் முதல் சனிக்கிழமை தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அன்னையைத் தரிசித்துச் செல்வதுண்டு. அங்குள்ள புதுமைக் கிணற்று நீர் அலாதி சுவையானது. கிணற்று நீரில் குளித்தால் நோய் நீங்கி நலம் கிடைக்கும் என்பது இங்கு வரும் அனைத்து பக்தர்களின் ஏகோபித்த நம்பிக்கையாக இருக்கின்றது.

இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன், இந் நாட்டு மக்களைக் காப்பாற்றி அருள்பாலித்த தேவதாயாரை, 'இலங்கை அன்னை' என அழைக்கும் வரத்தை நாம் பெற்றிருக்கின்றோம்.

தேவதாயாரை இலங்கை அன்னையாக ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையை பேரருட்திரு ஜே.எம்.மெசோன் ஆண்டகை அப்பொழுது திருத்தந்தையாக இருந்த 12ஆம் பத்திநாதரிடம் அனுமதி பெற்றுக் கொண்டார். 1947 பெப்ரவரி 15,16ஆம் திகதிகளில் றாகமை, தேவத்தையில் நடைபெற்ற விழாவின்போது ஆயிரக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மத்தியில், மரியன்னையை இலங்கை அன்னையாக அதிகாரபூர்வமாக பிரகடனப்படுத்தினார்.

இன்றும் இவ்வாலயம் நெடிதுயர்ந்து நிற்கிறது. கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்கள், நோய் நொடிகள் என்று மன வேதனையோடு, தன்னை நாடி ஓடி வரும் அனைவரையும் இன, மத, பேதமின்றி அன்னை அன்புடன் அரவணைக்கின்றார், அருள்பாலிக்கின்றார்.

அன்னைக்குக் கரம் குவிப்போம், அவள் அன்பைப் பாடிடுவோம்!





# ஜெபம் என்றால் என்ன?

கடவுளோடு உரையாடுவது ஜெபம். ஒரு நல்ல நண்பர் நமக்கு இருந்தால் நம் எல்லா விஷயங்களையும் மனம் விட்டு பகிர்ந்து கொள்வது நட்புக்கான இலக்கணம். கடவுளிடம் நாம் நம் வாழ்க்கையை பற்றி பேசுவதே ஜெபம். நாம் கடவுளிடம் நமது இதயத்தை திறந்து பேசுவதும், நம்மோடு பேசும் கடவுளின் வார்த்தைக்கு திறந்த மனத்துடன் செவிமடுப்பதுமே ஜெபம்.

எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் "கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்" - (பிலிப் 4:6-7).

**எதற்காக ஜெபம் செய்ய வேண்டும்?**

கடவுளின் அருகில் நாம் நெருங்கிவர ஜெபம் நமக்குத் துணைசெய்கிறது. கடவுளிடம் நாம் பெற்ற நன்மைகளுக்கு நன்றி சொல்லும் போதும், அவர் புகழ் பாடும் போதும், நமது பாவங்களுக்காக மனம் வருந்தும் போதும், நமது பலகீனத்தில் அவரது உதவியை நாடும் போதும், அவர் சித்தத்தை நிறைவேற்றும் போதும், கடவுள் நம்மோடு பேசுகிறார். கடவுள் நமது சிந்தனைகளையும் எண்ணங்களையும் மாற்றி நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அதைச் செய்யத் தூண்டுகிறார்.

நாம் ஜெபம் செய்வதன் மூலம் கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற அதிக வாய்ப்பை நமக்குக் கொடுக்கின்றார். இதன் மூலம் நாம் கடவுளில் இணைந்து வாழும் பேற்றைப் பெறுகிறோம். முத்திப்பேறு பெற்ற அன்னைத் தெரேசாவும் மற்ற புனிதர்களும் இப்பேற்றைப் பெற்றவர்களே.

'கேளுங்கள்' பெற்றுக் கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும்' - (யோவான் 16:24).

யாரிடம் ஜெபம் செய்ய வேண்டும்? கடவுளிடமா? யேசுவிடமா? தூய ஆவியிடமா? புனிதர்களிடமா?

நாம் கடவுளிடமோ அல்லது யேசுவிடமோ அல்லது தூய ஆவியிடமோ ஜெபம் செய்யலாம். இந்த மூவரிடமும் எழுப்பப்படும் ஜெபங்கள் விவிலியத்தில் அனேக இடங்களில் காணப்படுகின்றன. கடவுள் ஒருவர்தான். இயேசுவிடம் ஜெபம் செய்யும் போது இறைத் தந்தையிடமும் நாம் ஜெபம் செய்கிறோம். நாம் ஜெபம் செய்யும் வார்த்தைகளையும் கடந்து கடவுள் நம் உள்ளத்தையும் எண்ணங்களையும் அறியக்கூடியவர்.

புனிதர்கள் கடவுள் அல்லர். அவர்கள் கடவுளின் விருப்பத்தின்படி இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்கள். தங்களின் தூய வாழ்வால் விண்ணகத்தைச் சுதந்தரித்துக் கொண்டவர்கள். அவர்கள் இறைவனின் அருகில் அமர்ந்திருக்கிறார்கள், நமக்காக கடவுளிடம் பரிந்து பேசுகிறார்கள், நாம் செய்யும் வேண்டுதல்களைக் கடவுளிடம் மன்றாடி நமக்குப் பெற்றுத் தருகிறார்கள் என்பதே நமது விசுவாசம்.

"சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டும் தூய ஆவி நம் உள்ளத்தில் பொழிந்துள்ள அன்பை முன்னிட்டும் நான் உங்களைக் கேட்டுக் கொள்வது எனக்காகக் கடவுளிடம் வேண்டி, என் போராட்டத்தில் எனக்குத் துணை செய்யுங்கள்" - (உரோ 15:30).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபத்தில் உயர்ந்தது செபமாலை

"தாய்க்கு அஞ்சி நடப்பாயாக" (லேவி 19:3).

செபமாலை தீயவர்களுக்கும், நல்லவர்களுக்கும் வேறுபாடு காட்டாமல் நன்மை அளிக்கிறது. தந்தை பியோ 'அனைத்து செபங்களிலும் செபமாலையே உயர்ந்தது'' என்கிறார்.

அகந்தையும், ஆணவமும் பெருகி வரும் காலச்சூழலில் வாழும் இன்றைய மனிதன் கடவுள் தரும் சிறு ஆசீர்வாதங்களால் தன் நிலையை மறக்கிறான்.

'எனக்கு நிகர் யார்?' என அகந்தையில் அலறுகிறான். வாழ்வில் தான் உயர அருள் புரிந்த இறைவனையும் உதவிக் கரம் நீட்டிய சக மனிதர்களையும் மறந்து விடுகிறான்.

நன்மையும், உயர்வும் வரும் போது இது என்னால் வந்தது என மார்தட்டும் மனிதன், சோதனைகள், வேதனைகள், கலக்கம் வரும் போது கடவுளின் மேல் சீறிப் பாய்கிறான். இது அறிவின்மையின் அடையாளம்.

தெய்வ பயமும், செபமும் மனிதனை அறிவில் முதிர்ச்சியடையச் செய்கிறது. ஆன்மீகத்தில் வளர்ச்சியடைய உதவுகிறது. செப மாலை மனிதன் வாழ்வில் முன்னேற உதவுகிறது. செபமாலை செபிக்கும் மனிதன் வாழக் கற்றுக் கொள்கிறான். அவன் தாழ்ச்சியுடன் பேச செபமாலை கற்றுக்கொடுக்கிறது.

தாழ்ச்சி நிறைந்த மரியன்னை ''இதோ, நான் ஆண்டவருடைய அடிமை'' என்கிறார். மரியன்னையின் இந்தத் தாழ்ச்சி எனும் நற்பண்பு நமக்கும் வரவேண்டும், வாழ்வில் சிறப்பான மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். மனிதனின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாக இருப்பது தாழ்ச்சியின்மையாகும்.

கணவனும், மனைவியுமாக இல்லற வாழ்வில் நுழையும்போது, இனி நீங்கள் ஈருடல், ஓர் உயிர் என இணைந்து வாழ அறிவுறுத்தப் படுகின்றனர். எத்தனை இல்லங்களில் இந்தத் தாழ்ச்சி எனும் நற்பண்பு இடம்பெறுகிறது?

'நான் பெரியவன்', 'நான்தான் உயர்ந்தவன்' என்கிற ஆணவப் பண்பு தலைதூக்கும் இல்லங்களில் அமைதி கெடுகிறது. இந்தப் போட்டியைக் காணும் பிஞ்சு உள்ளங்களில் மகிழ்வு காணாமல் போகிறது மட்டுமல்ல, அந்த இளம் நெஞ்சங்களில் போட்டி எனும் தீய குணம் விதைக்கப் படுகிறது. நாம் எந்த விதையை விதைக்கின்றோமோ அதற்கான பயிரைத்தான் அறுவடை செய்ய முடியும்.

நெல்லை விதைத்து விட்டுக் கோதுமையை எதிர்பார்ப்பவன் ஏமாளி. குடும்ப வாழ்வில் கோபத்தை அடக்காமல் கொக்கரித்துக் கொண்டு அமைதியைத் தேடுவது ஏமாளித்தனம். மனிதன் நலமாக வாழ நமக்குக் கிடைத்திருக்கும் வரப் பிரசாதம் செபமாலை. தினமும் செப்மாலையை பக்தியுடன் செபிக்கும்போது இறை அனுபவம் நம்மை ஆட்கொள்கிறது என்பதே உண்மை.

## ஆண்டவரே உம்மை புகழ்கின்றேன்!

★ ஆண்டவரே, நீர் எமக்குக் காட்டும் அன்பு மிகப்பெரியது,

**உம்மைப் புகழ்கின்றேன்!**

★ ஆண்டவரே, உமக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்,

**உம்மைப் புகழ்கின்றேன்!**

★ ஆண்டவரே, நேர்மையுள்ளோரின் தலைமுறை ஆசிபெறும்,

**உம்மைப் புகழ்கின்றேன்!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமனித செபம் அவனுக்குள் அமைதியை உருவாக்குகிறது. குடும்பமே கூடிச் செபிக்கும்போது கோடி நன்மை பிறக்கிறது. செபிக்கும் உள்ளங்களில் அமைதி பிறக்கும். தொடர்ந்து பெறும் மன அமைதியால் நோய்கள் மறையும். பாவக்கட்டுகளை அறுத்து எறியும் வல்லமைமிக்கது செபம்.

தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்று செப வேளைகளை விழுங்கி வருகிறது. குடும்பங்களிலே மனப்பாரங்களைப் பகிர்ந்து கொள்ள நேரமில்லை, வாய்ப்புகளில்லை. வலைத்தளங்களின் இரும்புப் பிடிக்குள் இன்றைய சமூகம் கட்டுண்டு கிடக்கிறது. அவற்றுடன் மட்டுமே மனிதன் பேசிக்கொண்டிருக்கிறான்.

தன் அருகே இருக்கும் மனைவி, மக்கள், நண்பர்கள், உறவினர்களுடன் மகிழ்வைப் பகிர்ந்து கொள்ள, மனச்சுமைகளை இறக்கி வைக்க மறந்து, பாசமுள்ளவனைப் போல வேடமணிந்து நடிக்கிறான். இயல்பான குடும்ப வாழ்வில் விரிசல்கள் ஏற்படுகின்றன.

அப்பாவிடம் பேசி மகிழ ஆசைப்படுகிறது குழந்தை... தன்னோடு அப்பா சிரித்துப் பேச வேண்டும், கொஞ்சி மகிழ வேண்டும் என ஏங்குகிறது. 'இதோ வர்றேன்' என்று சொல்லி வேலைத் தளத்தைக் கட்டியழுகிற தந்தை, பிஞ்சு மனதைக் காயப்படுத்து கிறான். அப்பாவின் பரிவும், பாச மும் கிடைக்காத குழந்தை பிற் காலத்தில் சிடுசிடுப்பும், கோபமும் கொண்ட இளைஞனாக மாறுகிறான்.

அன்பு, பாசம், பரிவு, தாழ்ச்சி போன்ற நற்குணம் கொண்டவர்களாக வளர ஒவ்வொருவருக்கும் தேவைப்படுவது செபம். தின செபத்தைத் தள்ளிப்போடும் ஆன்மா பசியால் வாடும். ஆன்மப் பசிதீர்க்கும் நிறைவான உணவு, ஊட்டச்சத்து மிக்க உணவு என்ற ஒன்று உண்டு என்றால், அது செபமாலைதான்.

**– அருட்தந்தை ஜஸ்டின் ஜேம்ஸ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தினசரி நாள்காட்டி நேரத்தோடு இணைந்து நம்மைப் பார்த்துக் கேட்கிறது. ஒவ்வொரு நாளின் கால நிகழ்வை சரியாகச் சுட்டிக்காட்டி வருகிறேன். நீயும் வாழ்வின் வழிகாட்டியாய் வளர்ந்து வருகிறாயா? காரணம்! நீயும் ஒரு சிற்பி. மின்மினிப் பூச்சிகள் கூடப் பறக்கும்போதுதான் பிரகாசிக்கின்றன. சிற்பியே! நீ சிற்பமாக உருவாகும் போதுதான் கலங்கரை விளக்காக ஒளிர்கின்றாய். தலைமீது மகுடமும், மட்குடமும் அமைவது அவரவர் செயலாற்றும் திறனைப் பொறுத்துதான் அமைகின்றன.

கூனல் விழுந்த முதியவர் ஒருவர் ஊன்றுகோல் கொண்டு குனிந்தபடி நடந்து வருகிறார். அவருக்கு எதிரில் வந்த இளைஞன் ''என்ன பெரிசு... எதைத் தேடிக் கொண்டு போகிறீர்கள்'' என்று கிண்டலாகக் கேட்டான். அதற்குச் சாட்டையடியாக பதில்மொழி தந்தார் பெரியவர். ஆம், தொலைந்து போன எனது இளமையைத் தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன்.''

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் எதில் நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்து வருகின்றானோ, அந்த நம்பிக்கையை நங்கூரமாகக் கொண்டு உதயமாகும் இளஞ்சூரியனாக உயர்வைக் காண்கிறான். ''தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்கு பதிலாக தலையால் நடப்பதைப் போன்றது'' என்கிறார் எமர்சன். ''ஒரு செயலை உன்னால் செய்ய முடியுமென்று உறுதியாய் நம்பும் போது, அது எவ்வளவு துன்பமாயினும் அதை நீ செய்து முடிப்பாய்'' என்று எமிலிகோ கூறுகிறார்.


எளிய காரியமாக இருந்தாலும் செய்ய முடியாது என்று நினைக்கும் பொழுது சிறு குப்பை மேட்டைக்கூட தாண்ட இயலாது. பாஸ்டர் என்பவர் கூறுவார், ''புயலாக பிரச்சினை வரும்பொழுது இது இயல்பு என நாணல் போல வளைந்து கொடுத்துச் செல்லும் மனிதர் மீண்டும் தம் எண்ணங்களில் உறுதியாய் வாழ்ந்து வருவார். அவர் சிகரம் காணும் சிற்பியாய் உருமாறுவார்.''

வாழ்வென்னும் போரில் பலம் நிறைந்தவனுக்கும், வேகமாக செயற்படுபவனுக்கும் வெற்றி சாதகமாக அமைவதில்லை. மாறாக விரைவாகவோ அல்லது தாமதித்தோ எப்படியும் வெற்றி பெறுபவன் யாரெனில் ''என்னால் முடியும்'' என்று இறைவனில் சரணாகதி அடைந்தவர் மட்டுமே.

காலம் என்ற சிற்பி நம்மை செதுக்குகிறான். இதில் நாம் சிற்பமா? அல்லது சிதறி விழும் சில்லுகளா? சாதனை படைத்தால் அரிய சிற்பம் என்னும் சரித்திர நாயகன். இல்லாவிட்டால் சில்லுகளாக காட்சியளிப்போம். ஆயிரம் முறை தோற்றாலும் மீண்டும் ஒருமுறை அதை சரியாக செய்வதற்கு முயற்சி செய்வதில் தவறில்லை. நாம் இப்போது இருக்கும் நிலைக்கு நாமே பொறுப்பு. நம்மை உயர்வான நிலைக்கு கொண்டு செல்லும் ஆற்றல் இறைவன் அருளிலும், நம் முயற்சியில் மட்டுமே உண்டு. வயல்களில் களைகள் களையப்படுவது போல், மனிதன் கவலைகளையும் களைய வேண்டும். பழி வாங்கும் எண்ணத்தை விட மன்னிப்பது மனிதனின் தெய்வீக குணம்.

இன்று என்பது காலத்தின் எட்டிய கனி. தோல்வி என்பது வெற்றி அடைவதற்கு உங்களுக்கு ஏற்படும் தாமதம் தான். தற்காலிக தடைதான் அது. சாவி நம் கைகளில் இருக்கும் பொழுது பூட்டைப் பார்த்து பயப்படத் தேவையில்லை. வெற்றி மாளிகையின் கதவைத் தட்டிக்கொண்டே இருப்போம். நமக்குத் திறக்கப்படும்!


- அருட்தந்தை ஐ. சகாய அம்புரோஸ் ராஜா



# இறைவனில் சரணாகதி அடைந்து வெற்றி மாளிகையின் கதவைத் தட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்ணரசு எங்கே?



## சிறுவர் பகுதி

மோட்சத்தின் மகிமையையும், நரகத்தின் கொடுமையையும் அரை மணி நேரம் விளக்கிய பின், ''உங்களில் மோட்சம் செல்ல விரும்புவோர் கை தூக்குங்கள்'' என்றார் மறைக்கல்வி ஆசிரியர். ஒருவனைத் தவிர மற்றவர்கள் கை தூக்கினர்.

ஆசிரியர் அவனை அழைத்தார், ''எல்லோரும் மோட்சம் செல்ல ஆசைப்படும்போது நீ மட்டும் நரகம் செல்ல ஆசைப்படுவது ஏன்?'' என்று கேட்டார்.

''நான் நரகத்திற்குப் போக ஆசைப்படுவதாகச் சொல்லவில்லையே?'' என்றான்.

''நீ கை உயர்த்தவில்லையே? அப்படியானால் எங்கு செல்கிறாய்?'' ஆசிரியர் கேட்டார்.

''நான் இப்போது இருப்பதே மோட்சத்தில் தான்'' என்றான்.

''எல்லோருக்கும் விளக்கமாகச் சொல்'' என்றார் ஆசிரியர்.

''நேற்று மாலையில் திரு இருதய ஆண்டவர் படத்தைப் புதுப்பிக்க நம் குருவானவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். அப்போது தினமும் ஆண்டவரை நோக்கி செபிக்க வேண்டும். எப்போதும் ஆண்டவருக்கேற்ற பிள்ளைகளாக நடக்க வேண்டும். அப்போது ஆண்டவர் நம்மோடு இருப்பார் என்றார். ஆண்டவர் இருக்கும் இடம் மோட்சம் தானே?'' என்றான் மாணவன்.

### பொன்மொழிகள்

★ ஒப்புரவு அருள்சாதனம் நிறைவு அடைய சிறந்த வழியாகும். இழந்த சக்தியை மீண்டும் அளிக்கிறது. புதிய பாதைக்கு ஒளி வழங்குகிறது. இறைவனிடம் செல்லும் பயணத்தில் அது தெய்வீக ஆசீர்வாதமாகும்.

- முத். ஜேம்ஸ் அல்பரின்

★ பரிசுத்த நற்கருணையே விண்ணுலகுக்கு பாதுகாப்பான, சுருக்கமான வழி.

- புனித 10ஆம் பத்திநாதர்

★ உண்மையை நாம் விரும்புவதே ஜெபமாகும்.

- புனித தெரசா பெனடிக்ட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்சணிய யாத்திரிகம் இயற்றிய
# எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை



ளையங்கோட்டைக்குத் தென் கிழக்கே யுள்ள ரெட்டியார்பட்டி என்னும் கிராமத்தில் சங்கரநாராயணப்பிள்ளை வசித்து வந்தார். இவர் சிறந்த தமிழ்ப் பண்டிதர். இவரது மனைவியின் பெயர் தெய்வநாயகி. இவர்கள் வைணவ சமயத்தினர், இவர்களுக்கு குழந்தைச் செல்வம் இல்லாததால் பல புண்ணிய ஸ்தலங்கள் சென்று குழந்தை பாக்கியத்துக்காகப் பிரார்த்தனை ஏறெடுத்தனர்.

இத்தம்பதியினர் வேலையின் காரணமாக திருநெல்வேலி அருகிலுள்ள கரையிருப்பு என் னும் கிராமத்தில் குடியேறினர். இவர்களுக்கு 1827ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை மிகவும் அழகாக இருந்ததால் கிருஷ்ணன் என்று பெய ரிட்டனர். பின் 7 ஆண்டுகள் கழித்து இரண்டா வது குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு முத் தையா என்று பெயரிட்டனர். சங்கர நாராயணப் பிள்ளை தம் இரு ஆண் மக்களுக்கும் வைணவ சமய நூல்களை மனனம் செய்யக் கற்றுக் கொடுத்திருந்தார். கிருஷ்ணன் 14 வயதிலே கம்பராமாயணம் பாடல்களை மனப்பாடமாய் சொல்வதுமல்லாமல் அதன் பொருளைக் கூறும் திறமையும் பெற்றிருந்தார். இவர் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து இலக்கண மும் கற்றுக் கொண்டார்.

சங்கரநாராயணப்பிள்ளை, தமக்கு உடல்நலம் குன்றியதால் கிருஷ்ணனுக்கு இளமையிலே திருமணம் செய்ய விரும்பினார். ஆகவே இவருக்கும் திருச்செந்தூரைச் சேர்ந்த 9 வயது நிரம்பிய முத்தம்மாளுக்கும் 1824ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் திகதி திருமணம் நடைபெற்றது. பின்பு இவரது தந்தை மரித்துப் போனதால் குடும்பப் பொறுப்பு முழுவதும் இவரே ஏற்க வேண்டியதாயிற்று. இக்காலத்தில் கிறிஸ்தவ மதம் திருநெல்வேலியில் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. கிருஷ்ணன் கிறிஸ்தவ மதத்தை விரும்பாததால் நற்செய்தி எதிர்ப்புக் கழகத்தில் சேர்ந்து, அந்நிய நாட்டு மதம் இங்கே பரவவிடக் கூடாது என்ற வைராக்கியத்துடன் நல்லூரிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இடையூறுகள் செய்ய ஆரம்பித்தார்.

இதே வேளையில் பாளையங்கோட்டையிலி ருந்த குரூப்ஷேங்ஸ் என்ற அருட்பணியாளர் பாடசாலைத் தலைவராக இருந்தார். இவர் மூலம் அநேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு வர ஆரம்பித்தார்கள். இவர்களின் முக்கிய மானோர், தனக்கோடி ராஜூ மற்றும் கிருஷ்ணப்பிள்ளையின் தம்பியான முத்தையா பிள்ளை ஆவார்கள். இது இவருக்குப் பெரிய அதிர்ச்சி யைக் கொடுத்தது. கிருஷ்ணப்பிள்ளை யும் பாளையங்கோட்டைக்கு வரும்போதெல் லாம் தனக்கோடி ராஜூவிடம் தனது சந்தேகங் களைக் கேட்டு கிறிஸ்துவைப் பற்றி நன்கு அறிந்து கொண்டார். அவர் ஆத்தும விசாரம் தீர்த்தல், இருதயக் காவல், இளமை பக்தி, மோட் சப் பிரயாணம் ஆகிய நூல்களைக் கொடுத்து கிருஷ்ணப் பிள்ளையை நன்கு வாசிக்கச் சொன் னார். அவரின் ஆலோசனைப்படியே நான்கு நற்செய்தி நூல்களையும் ஒழுங்காக வாசித்து வந்தார். இவரை அதிகமாகக் கவர்ந்த புத்தகம் ஜான் பனியன் எழுதிய மோட்சப் பிரயாணம் ஆகும்.

கிருஷ்ணப்பிள்ளைக்கு இன்னும் கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்து சந்தேகங்கள் இருந்தமை யால், ஒரு நாள் இரவில் பாளையங்கோட்டை யில் தனக்கோடி ராஜூவுடன் அதிக நேரம் தம் சந்தேகங்களையெல்லாம் கேட்டுத் தெளிவு பெற்றுக் கொண்டார். அன்று இரவிலே கிறிஸ்து வுக்குத் தம்மை அர்ப்பணித்துத் தம் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையை இயற்றினார்.

கருணையங் கடலே, அந்தகாரமாம்
வினையைப் போக்கும் அருணனே,
அடியேற்காக ஆருயிர் விடுத்த தேவே
பொருணயந்தெரியாத் தீய
புல்லியனெனையாட்கொள்ளத்
தருணமென்னிதய நிற்கே
சமர்ப்பணம் - தரும மூர்த்தி

இப்பாடலைப் பாடியதும் "கடவுள் என்னிருதயத்தைத் திறந்தார். நான் அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன்" என்றார்.

கிருஷ்ணப்பிள்ளை தாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதை மனைவிக்குத் தெரியப் படுத்தவில்லை. குடும்பத்தில் ஏதாவது குழப் பம் வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தாம் சென்னை சென்று திருமுழுக்குப் பெற்றுக் கொள் ளலாம் என்று தீர்மானித்து, மனைவியையும், பிள்ளைகளையும் பாளையங்கோட்டைக்கு அனுப்பி விட்டு அவர் சென்னை சென்று விட் டார். அங்கு பெர்சிவேல் குருவானவர் மூலம் ஒரு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் வேலையில் அமர்ந்தார்.

அந்தக் குருவானவர் வெளியிட்ட வார இத ழான 'தினவர்த்தமானி'யின் துணை ஆசிரியராக வும் பணியாற்றினார். அவர் தம் மனைவி பிள் ளைகளுக்குச் சென்னை வரும்படி கடிதம் எழுதி



எஸ்.டி.எஸ். பீட்டர் - பவுல் தேவாலயம், கோரெட்டோ

னார். ஆனால் அவர்கள் தங்களையும் கிறிஸ் தவர்களாக்கி விடுவார் எனப் பயந்ததினால் சென்னை செல்லவில்லை. கிருஷ்ணப்பிள்ளை திருவல்லிக்கேணிப் பகுதியில் தங்கி, குருவான வருக்கு வேதாகமத்தைத் தமிழ் மொழியாக்கம் செய்வதில் பெரிதும் உதவினார்.



இவர் 1858ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் திகதி மயிலாப்பூரிலுள்ள தூய தோமா ஆலயத் தில் ஹென்றி ஆல்பிரட் என்றப் பெயரில் திரு முழுக்குப் பெற்றதும், தம் குடும்பத்தையும் ஆதாயம் செய்யும் நோக்கத்தோடு பாளையங் கோட்டைக்கு வந்தார். ஆனால் அவரது மனைவி கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள விரும்பாததால் பிள்ளைகளையும் விட்டு விட் டுத் தாய் வீட்டுக்குச் சென்று விட்டார். ஒன்றரை ஆண்டுகள் கழித்துப் பிள்ளைகளின் பிரிவைத் தாங்க முடியாமல் மீண்டும் பாளையங்கோட் டைக்கு வந்து தனியே ஒரு வீட்டில் வசித்தார். தாம் கிறிஸ்தவனானதால் தம் மனைவியும் தாயும் இகழ்வதைத் தாங்காமல் பின்வரும் கீர்த் தனையை இயற்றினார்.

ஏயே என்றிகழும் உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே உன்னையல்லால் எனக்கார்துணையாருறவே?
(கீர்த்தனை 1)

கிருஷ்ணப்பிள்ளையின் நிலைமையை அறிந்த சார்ஜென் குருவானவர், அவருக்குப் பாளயைங்கோட்டையில் உள்ள கல்விச் சாலை யில் தமிழாசிரியர் பதவி கொடுத்துத் தம் மனை விக்கும் தமிழ் கற்பிக்கும்படி கேட்டுக் கொண் டார். சார்ஜென்ட் அம்மையாரின் உயர் பண்பு கள் கிருஷ்ணப்பிள்ளையின் ஆத்மீக வளர்ச் சிக்கு உதவியாக இருந்தது. தனக்கோடி ராஜூ வின் போதனையினால் கிருஷ்ணப்பிள்ளை யின் தாய் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்.

பின்னர் முத்தம்மாளும் தாமாகவே கணவரோடு சேர்ந்து கொண்டார். இம்மாதிரியான மகிழ்ச்சிச் சூழலில் 'இரட்சண்ய யாத்திரிகம்' என்ற சிறந்த புத்தகத்தையும் எழுதி முடித்தார்.

– ம. ஜெயச்சந்திரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானத்தின் ஆவியே அன்பெனும் கொடையைத் தந்தருளும்!

தூய ஆவியே, வாரும். உம் அன்புத் தீயினால் என்னை ஆட்கொள்ளும். என்னால் இயன்ற அளவு சரணடைந்துள்ளேன். இப்பொழுது என்னை உம்முடைய ஆவியால் நிரப்பவேண்டுமென விரும்புகிறேன். என் வாழ்க்கையில் உம் வல்லமை தேவை. இப்பொழுதே வந்து என்னை நிரப்பியருளும். நான் உம்மிடம் சரணடைந்த பொழுது, ஆண்டவரே, நாம் இருவரும் ஒன்றானோம் என்று விசுவசிக்கிறேன். நீர் திராட்சைக் கொடி, நான் அதன் ஒரு கிளை, நீர் முழுமையாக என்னுள் உள்ளீர். உம்மிடம் இருந்தே எனக்கு வாழ்வு வருகிறது. நான் இணங்கிக் கேட்கும்பொழுது நீர் உமது வல்லமையையும், ஞானத்தையும், நலனையும் திறந்துவிடுவீர் என்று விசுவசிக்கிறேன். இதெல்லாம் எனக்குத் தேவை. உம்முடைய அர்ச்சிப்பின் வரங்களை (எசா 11:2) ஞானம், புத்தி, ஆலோசனை, வல்லமை, அறிவு, தெய்வ பயம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள இதோ இணங்குகிறேன். நான் ஒரு கிறிஸ்தவராக வளர்வதற்கு இவை தேவை. பணிகளுக்கு அவசியமான உம் வெளிப்பாடு வரங்களை (1 கொரி 12) ஞானம், அறிவு, விசுவாசம், குண மளித்தல் புதுமைகள், இறைவாக்கு, தேர்ந்து தெளிதல், அயல்மொழிகள் விளக்கம் கூறுதல் ஆகியவற்றைத் திறந்துவிடுமாறு இணங்கு கிறேன். துன்புறும் உலகுச் சாட்சியாய் இருக்க இவை தேவை. உம்முடைய வல்லமையில் வழி நடத்தப்படும் பொழுதே என் வாழ்க்கை பலன் உள்ளதாய் அமையும். தூய ஆவியே, வாரும். இதெல்லாம், இதற்கும் மேலாக ஒட்டுமொத்தமாக அன்பு என்னும் மாபெரும் கொடை எனக்கு வேண்டும் (1 கொரி 13:13). என்னை உருக்கும்; உருவாக்கும்; நிரப்பும்; பயன்படுத்தும். உமது அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்த உம் கொடைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பைத் தாரும். உம் கொடைகளை எனக்குத் தெரிந்த முறைகளில் மட்டும் பயன்படுத்த மாட்டேன். தூய ஆவியே, என் திறமையை வளர்த்தருளும். வல்லமையான முறையில் என்னுள் செயலாற்றும். என் வாழ்க்கையில் இறைவனின் ஒவ்வொரு திட்டமும் நிறைவேற வேண்டும். அதை நீர்தான் செய்து முடிக்க வேண்டும். வாரும் பரிசுத்த ஆவியே வாரும். பிறருக்கு நான் பணி செய்ய நீர் என்னை நடத்தும் பொழுது நீர் என் வாழ்க்கையையும் குணப்படுத்துகிறீர் என்று அறிவேன். என் வாழ்க்கையின் அடிமட்டங்களை உமது அன்புக் கொடையால் நிரப்பியருளும்!

– இ. சாலமோன் ராஜ்

### ஆண்டவரே உம்மை புகழ்கின்றேன்!

★ எங்கள் தோளின் சுமையை அகற்றிய ஆண்டவரே,

*– உம்மைப் புகழ்கின்றேன்!*

★ துன்பவேளையில் எங்களை விடுவித்த ஆண்டவரே,

*– உம்மைப் புகழ்கின்றேன்!*

★ மக்கட்பேறு நீர் அளிக்கும் பரிசில்,

*– உம்மைப் புகழ்கின்றேன்!*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏஞ்சல்

சிறுவர் பகுதி



ஏஞ்சல் ஒரு சராசரி மாணவி தான்; வகுப்பில் அவள் இருக்கும் இடமே தெரியாது, அவ்வளவு அமைதியானவள். அவளது அப்பா அரசாங்க அலுவலகத்தில் ஒரு சாதாரண எழுத்தர்; அதனால் யாரும் அவளை அவ்வளவாக கண்டு கொள் வதில்லை. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப் பட்டது. அவளது பகுதியில் குடியிருந்த ஓர் அதிகாரியின் மகன் ரீகன் ஏறக் குறைய 80% மதிப்பெண் பெற்றிருந்தான். இதற் காக அந்தக் குடியிருப்பில் தடபுடலான ஒரு சாதனை விழா நடத்தப்பட்டது. ஏஞ்சலுக்கு இது ஒரு சவாலாக அமைந்தது. 'பன்னிரண்டாம் வகுப்பில் இதைவிட உயர்ந்த விழுக்காடு பெற்றுக் காட்டுவேன்' என்ற வெறி, அவளது மனதில் ஒரு பொறியாக வந்து விழுந்தது. பதினொன்றாம் வகுப்பில் நுழைந்தவுடன் அவளது வகுப்பு ஆசிரியையிடம் இதைக் கூறினாள். வகுப்பாசிரியைக்கு மிகவும் மகிழ்ச்சி. எல்லா விதங்களிலும் ஏஞ்சலுக்கு உதவத் தொடங் கினார்.

அவளது வீட்டுக்கே சில சமயங் களில் ஆசிரியை நேரிடையாகச் சென்று ஏஞ்சலின் ஐயங்களைப் போக்குவார்; உற்சாகப் படுத்துவார்; இதன் விளைவாக ஏஞ்சல் பன்னிரண்டாம் வகுப்பு இறுதித் தேர்வில் ஏறக்குறைய 95% பெற்றாள். அதனால் அவளுக்கு மேல் படிப்புக்கு வசமான வாய்ப்புகள் வந்தன; தொடர்ந்து, படிப்பை முடித்தவுடன், நல்ல வேலையும் கிடைத்தது.

**உவமை:** கிளமி ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவ பெண் தான். ஆனால் வியாதியை இயேசு குணமாக்கு கிறவர் என்று மட்டும் நம்பமாட்டாள். ஒருநாள் அவள் வீட்டின் அருகில் ஆராதனை ஒன்று நடந்தது. அதில் அவள் கலந்து கொண்டாள். அப்போது மூச்சுவாங்குதல் நோய் உள்ள ஒரு சகோதரிக்கு ஆராதனை வேளையில் செபிக்கும் போது ஆண்டவராகிய இயேசு சுகத்தை தந்தார். அந்தச் சகோதரியும் நோயிலிருந்து விடுதலை

## உம்மை அணிந்து நேசிக்க வரந்தாரும்!

பெற்றாள். ஆண்டவரை போற்றினாள். இது கிளமிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அன்று முதல் ஆண்டவரை நம்பத் தொடங்கினாள்.

**அருள்மொழி:** "இயேசு அன்பு செய்த சீடர் அவர் ஆண்டவர்தாமே என பேதுருவுக்கு சொன்னார். அவர் ஆண்டவர்தாம் என்று சீமோன் பேதுரு கேட்டவுடன் தம் ஆடையைக் களைந்து விட்டிருந்ததால் மேலாடையைக் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார்" (யோவா 21:7).

**வார்த்தை வாழ்வாக:** மூன்று முறை தம்மை மறுதலித்த இராயப்பரை ஆண்டவர் மன்னிக்கிறார். திருச்சபைக்கே அவரை தலைவராக்குகிறார். உன்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் என்று வாக்கு கொடுக்கிறார். தமக்குத் தீமை செய்தவர்களுக்கு ஆண்டவராகிய இயேசு நன்மை செய்கிறார். நாமும் அதுபோல் நமக்குத் தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்வோம். அப்போது கடவுளின் மக்களாய் இருப்போம். சிலுவையில் மூன்று மணி நேரம் தொங்கிய பொழுதுகூட அருகில் உள்ள கள்வர்களில் ஒருவரின் விண்ணப்பத்தைக் கேட்டு உதவி செய்கிறார் இயேசு. எனவே, அந்த மன்னிக்கும் தெய்வமாகிய இயேசுவைப்போல நாமும் வாழ்வோம். அவரால் மாத்திரமே நமக்கு மீட்பு உண்டு. இயேசு எத்தகைய பிணிகளையும் போக்க வல்லவர் என்று நம்பு வோம்.

**சுய ஆய்வு:**

★ இயேசுவே ஆண்டவர் என்பதை நம்புகிறேனா?

★ ஆண்டவரைப்போல எனக்குத் தீமை செய்கிறவர்களை மன்னிக்கிறேனா?

இறை வேண்டல்: வானத்திலும் பூமியிலும் நாங்கள் மீட்பு அடைய உம் நாமம் அல்லாது வேறு நாமம் இல்லை. உம்மை அறிந்து உம்மை நேசிக்க வரம் தாரும்.

– டோனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த பக்தியும் செபவாழ்வும் கொண்டிருந்த பரி. ஜெரோம்



கி.பி.420

ஆதித் திருச்சபை வேத அறிஞரில் பரி. ஜெரோம் மிகச்சிறந்தவர். இவர் இத்தாலியா நாட்டில் ஸ்டிரிடோனியம் என்ற ஒரு பட்டணத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் ஈசுபியஸ் ஒரு செல்வந்தர். ஜெரோம் இவருக்கு மூத்த புதல்வர். இரண்டாவது புதல்வரான பர்லியனுக்கும் இவருக்கும் வயதில் வித்தியாசம் அதிகம். ஜெரோமின் புத்திக் கூர்மையைக் கண்ட இவர் தந்தையார் இவர் சிறந்த கல்வி அறிஞரிடம் கல்வி கற்க வேண்டுமென்று விரும்பி, இலக்கிய நிபுணரான டோனாடஸ் என்பவரிடம் அனுப்பினார். இலத்தீன், கிரேக்கு மொழிகளில் ஜெரோம் புலமைப் பெற்று சொற் பொழிவாற்றுவதிலும் புகழ்பெற்று வழக்கறிஞராகச் சிறிது காலம் பணியாற்றினார். இளமையில் கிறிஸ்துவை அறிந்த சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட போதிலும், தாம் நடத்தி வந்த தொழிலின் காரணமாக, இவர் உலகியலில் சிந்தனை செலுத்தினாரே யொழிய, கடவுளுக்கு அடுத்த காரியங்களைக் குறித்துக் கவலைப்படவில்லை.

தம் அறிவை வளர்க்கும் பொருட்டு பரி. ஜெரோம் பல நாடுகளைப் பார்வையிடத் திட்டமிட்டு, முதலில் தற்காலத்தில் பிரான்சு என்று சொல்லப்படும் கால் நாட்டிற்குச் சென்றார். இவருடைய பிற்கால வாழ்வை நாம் பார்க்கும் பொழுது, இவரைக் காட்டிலும் அதிகமாகப் பல நாடுகளைப் பார்வையிட்ட கிறிஸ்தவப் பக்தர் அக்காலத்தில் இல்லை என்றும், அப்பிரயாணங்களே இவர் சிறந்த கிறிஸ்தவ அறிஞராவதற்கு ஒரு சாதகமாயிருந்ததென்றும் அறிகிறோம்.

கால் நாட்டில் முக்கிய நகரங்களிலுள்ள கல்வி நிலையங்களில் சில காலம் செலவிட்ட பின்னர், ரோமாபுரிக்குச் சென்றார். பிரபல ஆசிரியர்கள் எழுதிய நூல்களை வெகு ஆவலுடன் ஊண் உறக்கமின்றிக் கற்றார். அந்நகரில் ஒரு புத்தக நிலையமும் நிறுவினார். முக்கியமான நூல்களை விலைக்கு வாங்குவதிலும் நண்பர்களைக் கொண்டு சிலவற்றுக்கு நகல்கள் எடுப்பதிலும் இவர் முனைந்தார். அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டதன் பயனாக சுமார் கி.பி. 360இல் தம் நண்பர் போனசஸ் என்பவருடன் டிரியர்ஸ் நகரம் வந்தபொழுது, இளமைப் பருவத்தில் இவரில் காணப்பட்ட கிறிஸ்தவ பக்தி அனல்விட்டெழுந்து வேத அறிவை பெருக்குவதில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் உலகின் இன்ப துன்பங்களையும் பிற பற்றுக்களையும் முற்றிலும் துறந்தாலன்றித் தாம் கிறிஸ்துவின் தொண்டனாக முடியாதென்ற எண்ணம் இவர் மனதில் எழுந்தது. தம் எண்ணம் நிறைவேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமாபுரி தகுதியான இடமில்லை என்று நினைத்துச் சில காலம் அந்தியோகியாவில் செல விட்டுப் பின்னர் சிரியாவிற்கும் அரேபியாவுக் கும் மத்தியிலுள்ள பாலைவனத்தில் துறவியாக நான்கு வருடம் செலவிட்டார். உபவாசத்தால் உடலை ஒடுக்கி ஜெபத்தில் நிலைத்திருந்து தம் வாழ்க்கைக்குக் கடவுள் சித்தத்தை வெளிப்படுத் துமாறு ஊக்கமாய் வேண்டினார். உலக ஞானக் கலைகளில் வல்லுனரான சிசேரோவின் நூல் களால் கவரப்பெற்று அவற்றில் ஈடுபட்டிருப் பதை இவர் விட்டு, வேத அறிவைப் பெருக்கு வதில் ஊக்கம் காண்பிக்க வேண்டுமென்பதைக் கடவுள் இவருக்கு வெளிப்படுத்தினார்.

கி.பி. 377இல் பரி. ஜெரோம் அந்தியாகுவில்



பிலிப்பைன்ஸ் ஆலயத்தில் உள்ள தேவ மாதா!

குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். மறுவரு டமே இவர் பாலஸ்தீனத்தைச் சென்று நமதாண் டவர் இவ்வுலக வாழ்க்கை நடத்திய புனித ஸ்தலங்களைப் பார்வையிட்டார். பெத்லகேமை தம் தலைமையகமாகக் கொண்டு, அங்குள்ள யூதகுல கல்விமான்களுடன் அளவளாவி, எபிரெய மொழியறிவை வளர்த்துக் கொண்டார். லத்தீன் கிரேக்கு மொழிகளில் புலமைப் பெற் றார். கி.பி. 380இல் பரி. ஜெரோம் கான்ஸ்டாண் டிநோபிள் சென்று அந்நகரின் அத்தியட்சகரான பரி. கிராகரி நாசியன்சனிடம் வேதாகமம் படிப் பதில் முனைந்தார். மறுவருடம் அவ்வத்தியட் சகர் அந்நகரை விட்டுச் செல்ல நேர்ந்தபொழுது பரி.ஜெரோம் பாலஸ்தீனம் திரும்பினார்.

பரி. ஜெரோமின் வேத அறிவைப்பற்றியும் தூய வாழ்க்கையைப் பற்றியும் குருக்களும் சபையோரும் கேள்விப்பட்டுப் பலர் இவரிடம் போதனையைக் கேட்க விரும்பினார்கள். இவர் ரோமாபுரிக்கு வந்து அங்கு மூன்று வருடம் தங்கி அநேக கிறிஸ்தவ மக்கள் மனந்திருந்து வதற்கும், நன்நடத்தைக்கும் காரணமா யிருந்தார். பெண்மணிகளில் மார்செல்லா, பைலாபிலெசில்லா, இஸ்டோசியம் என்பவர்கள் கிறிஸ்துவின் அடியாராக மாறினர்.

மூன்று வருடம் சென்றபின் ரோமாபுரியை விட்டுப் புறப்பட்டு சீப்புரு சென்று, அங்கிருந்த அந்தியோகியா சபையைச் சந்தித்து கி.பி. 385இன் இறுதியில் மறுபடியும் எருசலேம் வந்து சேர்ந்தார். பாலஸ்தீன நாட்டிலிருந்து கொண்டு பரிசுத்த வேதாகமத்தை ஆழ்ந்து கற்பது சிறந்தது என இவருக்குப் புலப்பட்டது. பெத்லகேமில் பிரயாணமாக வரும் பக்தர்களின் தேவைக்காக ஒரு மருத்துவமனையையும் கட்டுவித்தார். பின்னர் அங்கிருந்து எகிப்து தேசத்தின் பல பாகங்களிலும் அலெக்சாண்டிரியாவிலும் சில காலம் செலவிட்டார்.

இவர் கிறிஸ்தவ உலகத்திற்குச் செய்த சேவைகளில் வேதாகமத்தின் மொழிபெயர்ப்பே மிக முக்கியமானதாகும். கிரேக்க, எபிரெய, இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றிருந்த பரி. ஜெரோம் இவ்வேலையில் மிகவும் ஊக்கம் காண பித்தார். பக்தியும் சிறந்த ஜெப ஜீவியமும் உள்ள அறிஞரே இவ்வேலையைச் செவ்வனே செய்யக்கூடும். பரி. ஜெரோம் அத்தகைய அறி ஞராவார். சிறந்த கல்வியாளருமான பரி. ஜெரோம், கடவுளால் இவ்வேலைக்கென்றே தெரிந்தெடுக்கப்பட்டவரென்று சொல்லலாம்.

பழைய ஏற்பாட்டு நூல்களை மூலமொழி யிலிருந்து எபிரெய மொழியில் வெகு அழகாக மொழிபெயர்த்தார். கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழியில் ஆக்கப்பட்டிருந்த சுவி சேஷங்களைச் சரிவரத் திருத்தும் வேலையிலும் இவர் ஈடுபட்டு, யாவருக்கும் திருப்திகரமாக அதைச் செய்து முடித்தார். அவ்வாறே புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்களையும் திருத்தம் செய் தார். இவ்வேலைகளைத்தவிர, அநேக வேத விளக்கவுரை நூல்களையும் நிருபங்களையும் எழுதினார். அங்கங்கே ஏற்படுத்தப்பட்ட கட்சி களையும் வேதப் புரட்சியினரையும் கண்டித்துத் தம் வேத அறிவைக் கொண்டும் தம் தூய வாழ்க்கையினாலும் அவர்களை நல்வழிப்படுத் தினார். இவரது இறுதிக் காலத்தில் ஒரு கொள் ளைக் கூட்டத்தார் எகிப்து நாட்டை கடந்து, பாலஸ்தீனத்துக்குள் புகுந்து அங்குள்ள மடங் களைச் சுட்டெரித்துப் பக்தர்களைக் கொலை செய்தார்கள். பரி. ஜெரோம் அவர்களிடம் அகப்படாமல் தப்பி, தாம் எடுத்துக் கொண்ட வேலைகளைத் தம் வாழ்நாள் முடிவுறும்வரை பயபக்தி யோடும், உண்மையோடும் செய்தார். நல்ல முதிர்ந்த வயதில் தம் உலக வாழ்க்கையை முடித்து, கி.பி. 420இல் செப்டம்பர் 30ஆம் நாள் உயிர் துறந்தார்.

- ஏ.ஆர்.இராஜரத்தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ன்பதாம் போப் பயஸாக விளங்கியவரும் மிக அதிகமான காலம் போப் பாண்டவராக பதவி வகித்தவருமான இவரது இயற்பெயர் ஜியாவன்னி மரியா மஸ்தாய் பெரட்டி என்பதாகும். இவர் 1792ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி இத்தாலியின் செனிகல்லியா என்னுமிடத்தில் பிறந்தார். போப் பயஸ் இளகிய நெஞ்சமும் இணக்கமான நல்லுணர்வும் கொண்டே எப்போதும் தமது பணிகளை ஆற்றினார். அடிப்படைக் கல்வியை பியரிஸ்ட் கல்லூரியில் 1802ஆம் ஆண்டு முதல் 1809ஆம் ஆண்டு வரை முடித்தபின், தத்துவப் பாடத்தையும் இறையியல் கல்வியையும் கற்பதற் காக ரோம் சென்றார். ஆனால் அப்போதிருந்த அரசியல் பிரச்சினைகளால் அவரால் அது முடியவில்லை. 1814ஆம் ஆண்டு முதல் 1812ஆம் ஆண்டு வரை ரோம் நகரத் துறவியர் பயிற்சிக் கூடத்தில் இறையியலைக் கற்று முடித்தார். 1819 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பயஸ் அதிகாரபூர்வமாக பாதிரியாராக அங்கீகரிக்கப் பட்டார். இவரது இணக்கமான பழக்க வழக்கத்தினாலும், அன்பான அணுகு முறைகளினாலும் முக்கியமான பதவிகள் இவரைத் தேடி வந்து கொண்டிருந்தன. ஏழாம் பயஸ், இவரது தன்னலமற்ற அயராத சேவையைக் கருத்தில் கொண்டு ஆன்மீக இயக்குனராக 'டாட்டா ஜியோவன்னி' எனப்படும் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு நியமித்தார். 1825ஆம் ஆண்டில் சாண்டா மரியாவின் 'கனன்' ஆகவும். சான் மிச்சிலி மருத்துவமனையின் இயக்குனராகவும் அடுத்தடுத்து நியமிக்கப்பட்டார். பின்னர் அப்போதைய போப்பாண்டவரால் ஸ்பாலிட் டோவின் ஆர்ச் பிஷப்பாக 1827 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி பதவியில் அமர்த்தப்பட்டார்.

## பொன்மொழிகள்

★ பாவம் இல்லாதவரே செபித்தார் என்றால் பாவிகள் அதிகம் செபிக்க வேண்டாமோ?

*- புனித சிப்ரியன்*

★ நீ கோவிலில் செபிக்கும்போது என்ன விரும்புகிறாய்? எதற்காக வேண்டுகிறாய்? கடவுளின் இரக்கத்துக்குத்தான்! அப்படியானால் நீயும் இரக்கம் காட்ட வேண்டுமே?

*- புனித ஆலன்*

# அன்பின் மலராய் பரிணமித்த ஒன்பதாம் போப் பயஸ்


போப் ஆண்டவர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதினாறாம் கிரிகோரியின் மரணத்துக்குப்பின் இரண்டு வாரங்கள் கழித்து ஐம்பது கார்டினல்களின் கூட்டம் நடைபெற்றது. இறுதியில் 1846ஆம் ஆண்டு ஜூன் பதினாறாம் திகதியில் பயஸ் போப் பாண்டவராகப் பதவியேற்றுக் கொண்டார். போப்பாண்டவரின் ஆளுமைக்குட்பட்ட பகுதியில் கிட்டத்தட்ட ஒரு புரட்சியே வெடிக்குமளவுக்கு அரசியல் குழப்பங்கள் அப்போது உச்சத்தில் இருந்தன. இதற்கு முக்கிய காரணமாக முன்னாள் போப் பாண்டவரின் விட்டுக்கொடுக்காத குணமும், அவருடைய செயலாளர் கார்டினல் லாம் ருச்சினியின் அணுகுமுறையுமே என்று சொல்லப்பட்டது. புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒன்பதாம் போப் பயஸ் ஒரு அரசியல் சீர்திருத்தத்துக்கு முற்றிலும் தயாராகவேயிருந்தார். இவருடைய முதல் அரசியல் நடவடிக்கையும் அவ்வாறே அமைந்தது. போப்பாண்டவராகப் பதவியேற்ற தினத்தன்றே அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பளித்து உத்தர விட்டார். இந்த அன்பு தேய்ந்த நடவடிக்கை மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. பல அரசியில் எதிர்ப்புகளுக்கு இடையேயும் போப் பயஸ் பல அரசியல் சீர்திருத்தங்களை அமுல்படுத்தினார். அதேபோல கத்தோலிக்க சமூகத்துக்கும் தன்னாலான அரும்பணிகளை ஆற்றினார். இறையியல் தொடர்பான முக்கியமான பதவிகளுக்கு பணிவுடையோரையும், இறைப்பற்று உடையவர்களையும் தேர்வு செய்தார். இவ்வாறாக வைஸ்மேன் மற்றும் மேனிங் ஆகியோரை இங்கிலாந்துக்கும், அயர்லாந்துக்கு குள்ளேனையும், அமெரிக்காவிற்கு மெக்லோஸ்கியையும், ஜெர்மனிக்கு ராய்சர், ஆஸ்திரியாவுக்கு பிரான்ஸ்லின் ஆகியோரையும் கார்டினல்களாகத் தேர்வு செய்து பணியமர்த்தினார். 1850ஆம் ஆண்டில் கத்தோலிக்கப் பாரம்பரியத்தை சில நாடுகளிலும், சில நகரங்களிலும் நிலை நிறுத்தினார்.

1831ஆம் ஆண்டில் நான்காயிரம் இத்தாலியப் புரட்சிக்காரர்களிடம் அன்பின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி செய்து, ஆஸ்திரியத் தளபதி, அவர்களை அவர்களின் தேசத்துரோகக் குற்றங்களுக்காக மன்னிக்கும்படி செய்து, அவர்கள் பாதுகாப்புடன் தத்தமது வீடுகளுககுச் சென்றடைய போதிய பணமும் கொடுத்தனுப்பினார். கருணையின் அடிப்படையிலும், பரோபகார சிந்தனையுடனும் இவர் செய்த இச்செயல் இவருக்கு ''விடுதலைக்கு வித்திட்டவர்'' என்ற பெருமையினைத் தேடித் தந்தது. கிரகோரி, பயஸை 1832ஆம் ஆண்டில் 'இமோலா'வின் டயோசிஸ்ஸாகவும் பின்பு 1840ஆம் ஆண்டில் சாண்டி பியட்ரோ மார்சில்லினோவின் கார்டினலாகவும் பணியில் அமர்த்தினார்.

பயஸுக்கு முந்திய போப்பாக இருந்த

பல முக்கிய பொறுப்புக்களில் சிறந்து விளங்கிய போப் பயஸ் ஏழைகளிடத்தில் அன்பையும், அரசியல் கைதிகளிடத்தில் ஆதரவையும், பொதுமக்களிடம் நல்லுணர்வையும், நகைச்சுவை உணர்வையும் வெளிப்படுத்தி நற்பெயர் பெற்றார். 1878ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரை எய்தினார்.

- அ.அ.ஆல்பர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ வாழ்க்கை விசுவாசமே!

விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்று கலா. 3:9இல் கூறப்பட்டுள்ளது. யோவான் 1:12இல் அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என்றும் கூறப்பட்டுள்ளது, முதலாவது நாம் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டும். தேவனுடைய பிள்ளையாக மாற ஆண்டவர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். யோவான் 3:16 கூறுகிறது. தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வள வாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். ஆண்டவர் இயேசு உங்கள் பாவங்கள் உங்கள் அக்கிரமங்களுக்காக இரத்தம் சிந்தி, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து மீண்டும் விரைவில் வர இருக்கிறார், என்பதையும் நீங்கள் விசுவாசித்து ஆண்டவரே என் பாவங்களை மன்னியும், உம்மையே விசுவாசிக்கிறேன் என்று அறிக்கையிட்டு அவரை இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து அவரை விசுவாசிக்கிறவர்களாக வாழ வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை விசுவாச வாழ்க்கையே. வேதம் கூறுகிறது: விசுவாசமில்லாமல் தேவனுக்கும் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். (எபி. 11:6)

எபிரெயர் 11ஆம் அதிகாரத்தில் 31ஆம் வசனத்தில் ராகாப் என்னும் விலை மாதைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவள் செய்தது என்ன? அவள் எரிகோ என்ற பட்டணத்திற்குள் வாழ்ந்து வந்தாள். மோசமான ஜீவியம் செய்து வந்தாள். இஸ்ரவேல் ஜனங்கள் பல இடங் களில் வெற்றிபெற்று வந்ததைக் கேள்விப்பட்டாள். எரிகோ பட்டணத்தை வேவு பார்ப்பதற்காக இரண்டு பேர் எரிகோ பட்டணத்திற்குள் வந்தனர். அந்த விலை மாதின் வீட்டுக்குள் பிரவேசித்து அங்கே தங்கினார்கள். தேசத்தை வேவு பார்க்கும்படி வந்த மனுஷர் ராகாப் வீட்டில் தங்கியுள் ளனர் என்று ராஜாவுக்கு செய்தி போனது. ராஜா ஆள் அனுப்பி ''உன்னிடத்தில் தங்க வந்த மனிதரை வெளியே அனுப்பு அவர்கள் தேசத்தை வேவு பார்க்க வந்தவர்கள்'' என்றார்கள். ஆனால் அந்த ஸ்திரீயோ அவர்களை ஒளித்து வைத்திருந்தாள். அவர்களிடம் அவள் ''அவர்கள் என்னிடத்தில் வந்தது மெய்தான். அவர்கள் எவ்விட த்தாரோ எனக்குத் தெரியாது. வாசலை அடைக் கும் நேரத்தில் இருட்டு வேளையில் அவர்கள் போய்விட்டார்கள். சீக்கிரமாய் போய்த் தேடுங்கள்!'' என்று கூறி அவர்களை அனுப்பி விட்டாள்.

பின்பு திரும்ப அவர்களிடம் அவள் சென்று கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்



### ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே, என் எதிரியின் கையில் நீர் என்னை விட்டு விடவில்லை

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, நீர் என் நெறிகேட்டையும் பாவத்தையும் போக்கினீர்

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, நீர் சொல்லி உலகம் உண்டானது

உமக்கு நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தாரென்றும், உங்களைப் பற்றி எங்களுக்கு திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து தேசத்துக் குடிகளெல்லோரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்தி லிருந்து புறப்பட்ட போது, கர்த்தர் உங்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப் போகப் பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம், கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று, உங்களாலே எல்லோருடைய தைரிய மும் அற்றுப் போயிற்று, உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர் என்றும், நான் உங்களுக்கு உதவி செய்தது போல என் தகப்பன் குடும்பத்துக்கும் உதவி செய்யுங்கள் என்று வேண்டினாள். (யோகவா. 2.2-13)

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து வந்ததை ராகாப் மட்டுமல்ல அந்த பட்டணத்தி லுள்ள ராஜா முதல் யாவருமே அறிந்திருந்தனர். நடந்த சங்கதிகளையும் யாவரும் அறிந்திருந்தனர். ஆனால் அந்த வல்லமையுள்ள தேவனை விசுவாசிக்கவேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வரவில்லை.

ராகப்போ 'உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்' என்று அறிக்கை செய்தாள். அவள் செய்தது அவ்வளவே, கர்த்தரே தேவன் என்பதை விசுவாசித்தாள். அவளும் அவள் குடும்பமும் அந்த அழிவிலிருந்து காக்கப்பட்டனர்.

எரிகோ பட்டணம் முழுவதும் அழிக்கப்பட்டது. இவளுடைய வீடு, வயல்கள், பொருட்கள் எல்லாம் போய் அவளும், அவள் குடும்பமும் ஏதுமின்றி அந்த இஸ்ரவேல் ஜனங்களோடே சேர்ந்து கொண்டனர்.

அவர்கள் எல்லாவற்றையும் விட்டு வந்தாலும் அவர்களை தேவன் விட்டு விடவில்லை. அவர்களை ஆசீர்வதித்தார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது விசுவாசமே அன்றி வேறொன்றுமில்லை.

– எஸ்.டி.தினகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மோட்ச பயணம்
- தொடர்

# மாளிகை வாசலில் சிங்கங்கள்!

நடந்து சென்ற கிறிஸ்தியான் சுருளில் கூறப்பட்டிருக்கும் ஆறுதலான வார்த்தைகளைப் படிக்கலாம் என்ற எண்ணத்துடன் பையினுள் கையை விட்டான். திடுக்கிட்டு நின்றான். சுருளைக் காணாது கலவரமடைந்தான். தான் உறங்கும்போது தான் அதைத் தவற விட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். முழங்காற்படியிட்டு ஆண்டவரிடம் தனது கவனக் குறைவுக்காக மன்னிப்புக் கேட்டான்.

கண்ணீர் விட்டபடியே சுருளைத் தேடி ஓடினான் கிறிஸ்தியான். ''ஆண்டவர் அந்த இளைப்பாறும் தலத்தைக் கட்டியிருந்தது சற்று இளைப்பாறுவதற்காகத்தானே? ஆனால் கடமையை மறந்து உறங்கிவிட்டது என்னுடைய தவறு தானே...'' என்று எண்ணி வருந்தினான்.

இளைப்பாறும் தலத்தை அடைந்தவுடன் சுற்றிலும் தேடினான். சுருளைக் கண்டவுடன் அதை எடுத்துப் பத்திரமாகப் பையினுள் வைத்துக் கொண்டான். அப்போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

வேகவேகமாக மீண்டும் மலைமீது ஏறினான் கிறிஸ்தியான். ஆனால் அவன் மலையுச்சியை அடைவதற்குள் இருட்டி விட் டது. கோழையும், அவநம்பிக்கையும் சிங்கங்களைப் பற்றிச் சொல்லியிருந்தது அவன் நினைவில் எழுந்தது.

'இந்த இருட்டு வேளையில் சிங்கங்கள் என் மீது பாய்ந்து என்னைக் கொன்று போடுமே' என்று பயந்தான் கிறிஸ்தி யான். உடன்தானே தனது தவறை உணர்ந்தான் அவன். தனது அவநம்பிக்கைக்காக ஆண்டவரை நோக்கி மன்னிப்புக் கேட்டான்.

'கோழையும், அவநம்பிக்கையும் இந்தச் சிங்கங்களைக் கண்டுதான் பயந்து ஓடினார்கள் போலும்!' என்று நினைத்தான் கிறிஸ்தியான்.

கிறிஸ்தியான் தயங்கி நிற்பதைக் கண்ட விழித் திருப்போன் என்ற காவல்காரன் ''ஏன் கோழையைப்போல அங்கேயே நின்றுவிட்டாய்? சிங்கங்களைப் பற்றிப் பயப்படாதே, அவை சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றன. உன்னுடைய விசுவாசத்தைச் சோதிக்கவே அவை இங்கே இருக்கின்றன. நீ பாதையின் நடுவே நடந்து வந்தால் அவை உன்னை ஒன்றும் செய்யாது'' என்று அவனை நோக்கிக் கூறினான்.

நடுக்கத்துடனே கிறிஸ்தியான் மெதுவாக முன்னேறிச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். சிங்கங்கள் கர்ஜித்தன. ஆனால் கிறிஸ்தியானை ஒன்றும் செய்யவில்லை.

காவல்காரனிடம் சென்ற கிறிஸ்தியான் ''ஐயா, நான் இன்றிரவு இங்கே தங்கலாமா?'' என்று கேட்டான்.

''பயணிகள் பாதுகாப்பாகத் தங்குவதற்காகத்தான் இந்த மலையின் எஜமானர் இந்த மாளிகையைக் கட்டி வைத்திருக்கிறார். நீ எங்கேயிருந்து வருகிறாய், எங்கே போகிறாய்?'' என்று கேட்டான் காவல்காரன்.

''அழிநகரத்திலிருந்து வருகிறேன். நித்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரமான மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன்'' என்றான் கிறிஸ்தியான்.

''உன் பெயர் என்ன? ஏன் இவ்வளவு இருட்டிய பிறகு வருகிறாய்?'' என்று கேட்டான் காவல்காரன்.

''முன்பு என் பெயர் கிருபையற்றோன், ஐயா. இப்போதோ என் பெயர் கிறிஸ்தியான்'' என்று கூறிய அவன் தான் இளைப்பாறும் தலத்தில் சுருளைத் தொலைத்துவிட்டது பற்றியும், அதைத் தேடி வருவதற்காக இவ்வளவு காலதாமதமாகிவிட்டது என்பதையும் எடுத்துரைத்தான்.

இதைக் கேட்டவுடன் விழித்திருப்போன் ஒரு மணியை அடித்தான். விவேகம் என்ற பெயரையுடைய ஓர் அழகிய பெண்மணி கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

### ஆண்டவரே உமக்கு நன்றி!

★ ஆண்டவரே, எல்லா வகையான அச்சத்தினின்றும் என்னை விடுவித்தீர்

உமக்கு நன்றி

★ இந்த ஏழை கூவி அழைத்தேன்; ஆண்டவரே நீர் எனக்குச் செவிசாய்த்தீர்

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, நீர் உயர்ந்த உள்ளத்தார்க்கு அருகில் இருக்கின்றீர்

உமக்கு நன்றி

காவல்காரன் கிறிஸ்தியானை அவளுக்கு அறிமுகம் செய்து விட்டு ''இவன் இங்கே இரவு தங்க அனுமதி கிடைக்குமா?'' என்று கேட்டான்.

விவேகம் கிறிஸ்தியானைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்டாள். கிறிஸ்தியான் தான் பயணம் புறப்பட்டதன் காரணத்தையும், வழியில் தான் அனுபவித்த சோதனைகளையும் எடுத்துக் கூறினான்.

இதைக் கேட்ட விவேகம் கண்ணீர்விட்டாள். ''இங்கே வருவதற்குள் எவ்வளவு துன்பங்களைச் சகித்திருக்கிறீர். வாரும், வீட்டிலுள்ள மற்றவர்களை அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று கூறிய விவேகம் கிறிஸ்தியானை உள்ளே அழைத் துச் சென்றாள்.

முன்யோசனை, பக்தி, கருணை என்ற தன்னுடைய சகோதரிகளையும், மற்றவர்களையும் அவள் கிறிஸ்தியானுக்கு அறிமுகம் செய்து வைத் தாள். அவர்கள் அனைவரும் ''கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, வாரும்!'' என்று வாழ்த்துக் கூறி அவனை வரவேற்றார்கள்.

விவேகமும் அவளுடைய சகோதரிகளும் நீண்டநேரம் கிறிஸ்தியானோடு ஆண்டவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். உணவருந்திய பின் அவரவர் அறைக்கு ஓய்வெடுக்கச் சென் றார்கள்.

சமாதானம் என்ற மேலறை கிறிஸ்தியானுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. விடியும்வரை மன அமைதியுடன் உறங்கினான் கிறிஸ்தியான்.

மறுநாள் அந்தச் சகோதரிகள் மறுபடியுமாக அவனுக்கு ஆண்டவரைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்றும், அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறவர்களை அவர் மன்னிக்கச் சித்தமாயிருக்கிறார் என்றும், அவரைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேறின என்றும் விளக்கமாகச் சொன்னார்கள். கிறிஸ்தியான் அனைத்தையும் ஆவலோடு கேட்டு மனதில் பதிய வைத்துக் கொண்டான்.

அதன் பின்பு அந்த மாளிகையின் ஆயுதசாலைக்கு அவனை அழைத்துச் சென்றார்கள். கச்சைகள், தலைக்கவசம், கேடயம், தலைச்சீரா, பட்டயம் (எபே. 6:11-18) இவையனைத்தையும் கண்டு மகிழ்ச்சியடைந்தான் கிறிஸ்தியான்.

''நீர் போகும் வழியில் பல விரோதிகளையும் ஆபத்துக்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே நீர் இந்த ஆயுதங்களை எடுத்துக் கொள்ளும்'' என்று சகோதரிகள் கேட்டுக் கொண்டார்கள்.

உற்சாகத்தோடு கச்சை, மார்க்கவசம், தலைச்சீரா, காலில் போடும் பாதரட்சை இவைகளை அணிந்து கொண்டான் கிறிஸ்தியான். பட்டயத்தையும் கேடயத்தையும் கையில் பிடித்துக் கொண்டான். இவ்வாறு கவசம் அணிந்தவனாக அவர்களுடன் புறப்பட்டு, மீண்டும் வாசலண்டை வந்தான் கிறிஸ்தியான்.

''ஐயா, யாராவது இந்த வழியாகச் சென்றார்களா?'' என்று காவல்காரனிடம் கேட்டான்.

''ஆமாம், உண்மையானவன் என்பவர் இந்த வழியே சென்றார். இதற்குள் மலையின் மறுபக்கம் இறங்கி விட்டிருப்பார்'' என்றான் காவல் காரன்.

''உண்மையானவனா? அவன் என்னுடைய வீட்டுக்கு அருகில் வசித்தவன்தான். நான் துரிதமாகச் சென்றால் அவனைப் பிடித்து விடலாம்'' என்று கூறிய கிறிஸ்தியான் உடனே வேகமாக நடக்கத் தொடங்கினான்.

**- தொடரும்**

- எச்.பி. ராஜ்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியின் ஜூபிலி தேவாலயம்

இத்தாலியின் ஜூபிலி தேவாலயம் அதன் மிகச்சிறந்த கட்டிடக்கலை நுணுக்கத்தை முன்னிட்டு மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றது. ரோம் நகரத்தில் டோர் ட்ரீ டெஸ்டே என்னுமிடத்தில் பழைமை வாய்ந்த இத் தேவாலயம் அமையப் பெற்றுள்ளது.

இத்தாலி தேசத்தில் இந்த தேவாலயத்துக்கு வழங்கப்பட்டுள்ள பாரம்பரிய பெயர் 'சீசா டிடியோ பட்ரே மெசேரிகார்டியோசா' என்பதாகும். இங்கு தேவாலயமும் சமுதாய மையமும் ஒன்றாக இணைந்து இருக்கின்றன.

இவை மிகுந்த அழகுடன் நேர்த்தியாக தோற்றமளிப்பதற்கு இதனை வடிவமைத்த இத்தாலியக் கட்டிடக் கலை நிபுணர் ரிச்சர்ட் மெய்யர் முக்கிய காரணமாவார். இக்கட்டிடங் களைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''தாமே புளகாங்கிதப் பட்டுக் கொள்கின்ற விதத்தில் ரோம் நகர கிரீடாபரணமாகத் திகழ்கின்றது'' எனக்குறிப்பிட்டுள்ளார்.

ஜூபிலி தேவாலயம் காண்போர் கண்களை கவர்கின்ற வகையில் எழுப்பப் பட்டிருப்பதால் தேவாலய வளாகத்தை 'மில்லேனியம் புரொஜக்ட்' எனப் போற்றுகின்றார் ரோம் நகர ஆர்ச்டயோசிஸ். டார்ட்டெஸ் டே பகுதியில் வசிக்கின்ற எட்டாயிரம் கிறிஸ்தவப் பெருமக்களுக்கு ஜூபிலி தேவாலயம் ஓர் ஆன்மீக வரப்பிரசாதமாகத் திகழ்கின்றது.

மேலும் இப்பகுதியில் வசிக்கின்ற மக்களின் சமுதாய ரீதியிலான வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற வகையிலும் இத்தேவாலயம் பெரும்பங்கு வகிக்கின்றது. ஜூபிலி தேவாலய வளாகம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக தேவாலயமும் அதனைச் சார்ந்த சமுதாய மையமும், இரண்டாவதாக வடகிழக்கின் மேல்தளம், மூன்றாவதாக வடமேற்கில் அமைந்திருக்கின்ற மனமகிழ்கூடம், நான்காவதாக மேற்குப்புறத்தில் மிகப்பெரிய வாகனம் நிறுத்துமிடம் ஆகியவை ஆகும்.

ஜூபிலி தேவாலய தென்புறத்தில் கலவையால் குழைத்துப் பூசி உருவாக்கப்பட்ட மூன்று வ ளை வு டை ய மதிற்சுவர்கள் இடம் பெற்றுள்ளன, இவை தடுப்புகளைப் போன்றும் பிரிவுகளைப் போன்றும் செயல்படு

## ஆண்டவரே உமக்கு நன்றி!

★ ஆண்டவரே, எனக்கு இரங்குமாறு நான் எழுப்பிய குரலைக் கேட்டருளினீர்.

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, நான் மன்றாடிய நாளில் நீர் செவிசாய்த்தீர்.

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, உமது கருணை என் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, என் செவிகள் திறக்கும்படி செய்தீர்.

உமக்கு நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. கட்டிடக் கலை நிபுணர் ரிச்சர்ட் மெய்யர் வெளி உஷ்ணத்தின் தாக்கம் தேவாலயத்தின் உள்ளே உணரப்படாதிருக்கின்ற வகையில் கட்டிடக்கலை நுணுக்கம் கையாளப் பட்டுள்ளது எனத் தெரிவித் திருக்கின்றார்.


கான்கிரீட் கலவைகளைப் பெரிதும் பயன் படுத்திச் செய்யப்பட்டுள்ள சுவர்கள் உட்புறத்தில் வெப்பத்தை அனுமதிக்காது. இதன் காரணமாக தேவாலயத்தில் தட்ப வெப்ப நிலை மாற்றங்களுக்கு உட்படுவதில்லை. சுவர்கள் 'டைட்டானியம் ஆக்ஸைட்' என்பதை உட் கொண்டிருப்பதால் ஆலயத்தின் வெண்மை நிறம் தக்க வைக்கப்படுகின்றது.

இத்தேவாலயத்தில் உபயோகப்படுத்தப் பட்டுள்ள சிமெண்ட் கலவை தேவாலயத் தினுள் காற்று மாசுபடுவதை முற்றிலுமாகத் தடுத்து வரு கின்றது என்று சிமெண்ட் தயாரித்த நிறுவனத் தின் இயக்குனர் என்ரிக்கோ போர் காரெல்லோ பெருமையுடன் கூறுகின்றார்.

வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் விஷத் தன்மையுள்ள வாயுக்களையும் சுவற்றில் இருக்கும் டைட்டானியம் ஆக்ஸைட் எதிர்த்துப் போராடுகின்றது என்றும் போர்கோரெல்லோ தெரிவித்திருக்கின்றார்.


ஜுபிலி தேவாலயம் கட்டிட அமைப்பானது விஞ்ஞான ரீதியாக நீண்ட நாட்கள் எவ்வித உள்வெளி பாதிப்புக்கும் ஆட்படாத வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் பிரார்த்தனைக்கு வருவோர் எல்லா வசதிகளுடனும் அமர்ந்து மன அமைதியுடன் பிரசங்கத்தைக் கேட்கவும், வழிபடவும் இயலும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

**- ஜோசப் லியோ மனோகரன்**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மனிதம் மலரும்போது புனிதம் புலர்கின்றது!



ஆடின உழைப்பாளி முன் கடவுளின் தூதர் வந்து சொன்னார்: ''கடவுள் என்னை உன்னிடம் அனுப்பி விண்ணரசில் உனக்கு ஒதுக்கப்பட்ட இடத்துக்குக் கூட்டி வரச் சொன்னார்... வாரும்.''

உழைப்பாளியோ தூதரிடம் ''என்னை நினைத்த இறைவனுக்கு நன்றி. எனக்கு அங்கு வர ஆசைதான். ஆனால், விவசாயம் செய்யும் நேரம் வருகிறது, பல வேலைகள் உள்ளன. வேலைகளை முடித்து விட்டு வரட்டுமா?''

தூதரும், ''சரி, கடவுளிடம் சொல்கிறேன்'' என்றார்.

அறுவடைக் காலத்தில் உழைப்பாளியின் பக்கத்து வீட்டுக்காரர் நோயில் படுத்துவிட்டார். மீண்டும் வந்த தூதர் அழைத்தார்: ''இப்போது வாரும்.'' பணிவாக உழைப்பாளி சொன்னார்: ''புறப்பட ஆசைதான். ஆனால் அண்டை வீட்டுக்காரரின் அறுவடைக்கு உதவ ஆளில்லை. அவர் நோயில் படுத்திருக்கிறார். அவரது அறுவடை முடிந்தபின் வருகிறேன்...''

தூதர் சிரித்துவிட்டுச் சென்றுவிட்டார். ஒவ்வொரு முறை தூதர் வரும்போதும் அடுத்தவருக்கு உதவ வேண்டியிருப்பதால் 'அது முடிந்ததும் வருகி றேன்' என்றார்.

காலம் கடந்தது. முதுமை வந்தது. உடல் வலிமை குன்றியது.

உழைப்பாளி வேண்டினார்: ''கடவுளே, உம் தூதரை அனுப்பும், மோட்சத்துக்கு நான் வருகிறேன்.''

தூதர் தோன்றினார். இப்படிச் சொன்னார்: ''இந்நாள்வரை நீர் எங்கு இருந்ததாக நினைத்துக்கொண்டிருக்கிறீர்? மோட்சத்தில்தானே இருக்கின்றீர்?''

'முக்தி' என்றும், 'மோட்சம்' என்றும் திக்கெட்டும் தேடியலைய வேண்டாம். தேவையில் உதவி செய்து மனிதம் மலரச் செய்யும்போது புனிதம் புலரச் செய்கிறோம் என்பதை அன்னை மரியின் வாழ்வு வெளிப்படுத்துகிறது.

அன்னை மரியாவுக்கு அடைக்கல அன்னை, ஆரோக்கிய அன்னை, சகாய அன்னை என்றெல்லாம் பல பெயர்கள் இருந்தாலும், 'மனித நேயத்தின் தாய்' என்பதே சிறப்பான பெயராகும். சிதைந்துபோன மனிதத்தை தம் மரணத்தின் மூலம் வார்த்தெடுத்த இறைமகனைப் பெற்றெடுத்ததால் மனிதநேயத்தின் தாயாகிறார் மரியா.

''மனிதனுக்கும், மாட்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?'' என்று கிரேக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு மேதை சாக்ரெட்டீசிடம் கேட்டபோது, ''ஒரு மாடு மற்றொரு மாட்டைப் பற்றி அக்கறை கொள்ளாது, ஒரு மனிதன் மற்றொரு மனித னைப் பற்றி அக்கறை கொள்வான். அடுத்தவ னைப் பற்றி அக்கறை கொள்ளாதவன் சுயநலம் பிடித்த பன்றி'' என்றார்.

'அறிவினன் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை'

என்றார் வள்ளுவர். பிறருடைய துன்பத்தைத் தன்னுடைய துன்பமாகக் கருதாவிட்டால் அறி வினால் என்ன பயன்? என்பது இதன் பொருள்.

'உடுக்கை இழந்தான் கைபோல ஆங்கு
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

'அன்பான நண்பனை ஆபத்தில் அறி' என் பது பழமொழி. துன்பத்தில் துணை நிற்பவனே மனிதநேயத்துக்குச் சொந்தக்காரன் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் அன்னை மரியா.

ஆறு மாத கர்ப்பிணியாக இருந்த எலிசபெத் அம்மாவுக்கு உதவிட ஓடோடிச் சென்ற மனித நேயப் பண்பு மரியாவின் மாண்பினை விளக்கு கிறது. 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ' என்று திருவாசகம் இறைவனின் பெருமையைச் சொல்கிறது. பசியால் பாலுக்கு அழாவிட்டாலும், குழந்தையின் பசி நேரத்தை உணர்ந்து பாலூட்டும் பண்புடையவள் தாய். வீட்டை விட்டு வெளியே சென்ற தாய் எங் கிருந்தாலும் அவள் நினைவெல்லாம் குழந்தை யைச் சுற்றியே இருக்கும். அந்தத் தாயின் தனிப் பெரும் உணர்வு மரியாவுக்கு இருந்ததை கானாவூர்த் திருமண நிகழ்வு வெளிப்படுத்துகிறது.

திருமண வீட்டில் திராட்சை ரசம் தீர்ந்து விட்டதைக் குறிப்பறிந்து உணர்ந்து, அக் குறையை நீக்க உடனே செயல்படுகிறார் மரியா.

பிறருடைய குறைகளைப் பெரிதுபடுத்துவது நமது பண்பு. பிறருடைய குறைகளை நீக்குவது மரியாவின் பண்பு. காரணம், மரியா மனித நேயப் பண்புகளான மென்மையான உணர்வு, புரிந்து கொள்ளும் மனநிலை, பிறர் கேளாம லேயே அவர்களுக்கு உதவும் பண்பு ஆகிய நற்குணங்கள் அமைந்தவர். தாய்மை என்பது மனிதநேயத்தின் தலையாய பண்பு. பிள்ளையைப் பெற்றெடுப்பது மட்டும் தாய்மை அன்று. அதற்கு அன்பு காட்டி, அமுதூட்டி, வளர்த்து ஆளாக்கு வதில்தான் தாய்மை முழுமை பெறுகிறது.

மரியா இயேசுவைப் பெற்றார், பேணி வளர்த்தார், அன்பும் அறிவும் ஊட்டினார். உண்ணக் கொடுத்த உணவுடன் உயர்ந்த எண்ணங்களை யும், இலட்சியங்களையும் அவருக்கு அளித்தார்.

இயேசுவிடம் காணப்பட்ட அன்பு ணர்வு, அறநோக்கு, இறையுணர்வு, பிறர்மேல் கனிவு, ஏழை எளியோர், ஒடுக்கப்பட்டோர் மேல் காட்டிய விடு தலைத் துடிப்பு, உயிரையே அர்ப் பணிக்கும் தியாக உணர்வு போன்ற உயர் பண்புகள் அமைந்திருந்ததில் மரியாவின் பங்கும் இருந்தது.

இயேசுவின் மனித உடலுக்கும் உயிருக்கும் மட்டுமன்று, அவரின் வீர விசுவாசத்துக்குமே ஒரு வகையில் மரியா தாய் ஆவார்.

''இறைவார்த்தையைக் கேட்டு, அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும், என் சகோதரர் களும் ஆவார்கள்' என்றார் இயேசு (லூக் 8:21).

மறைந்து கொண்டிருக்கும் மனிதாபி மானத்தை மீண்டும் மலரச் செய்யத் துடிப்ப வர்களுக்கு முன்னுதாரணம் தாய் மரியா.

மரியாவின் மனிதநேயப் பண்பை நம் மனதில் நிறுத்துவோம், வாழ்வில் செயல் படுத்துவோம், வாழ்வில் நாமும் உயர்ந்து, பிறரையும் உயர்த்திட முன்வருவோம்.

- மகிழ்நன்

## ஆண்டவரே உமக்கு நன்றி கூறுகிறேன்!

★ ஆண்டவரே, நீர் நலிந்தோரைக் கண்ணோக்குகின்றீர்

உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, நீர் உம் வலக்கையால் என்னைக் காப்பாற்றுகின்றீர்

உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர்

உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, என் தாயின் கருவில் எனக்கு உருத் தந்தவர் நீரே

உமக்கு நன்றி கூறுகிறேன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவர் எவ்விதம் உலகை படைத்தார்?

சிறுவர் படக்கதை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்து கடவுள் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் படைத்து அவற்றை வானத்தில் வைத்தார். கடவுள் தான் செய்தவற்றையெல்லாம் கண்டு பின் அவை எவ்வளவு சிறப்பாக இருக்கின்றன என்று எண்ணினார்.

கடவுள் நமக்கு அழகான பரிசுகளைத் தருகிறார்.

பிறகு கடவுள் எல்லாவிதமான மீன்கள், பறவைகள் மற்றும் விலங்குகளை தண்ணீரிலும் நிலத்திலும் வாழ்வதற்காகப் படைத்தார். அவை யாவும் அவற்றின் குழந்தைகளைப் பெற்று இந்த அற்புத உலகை நிரம்பவும் செய்தார் அவர்.

கடவுள் அவர் உருவாக்கியவற்றைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து அழகான அந்தப்படைப்புகளையும் அன்பையும் அவரைப்போன்ற மற்றொருவருடன் பகிர்ந்துகொள்ள விரும்பினார். ஆகவே அவருடைய அன்பை பகிர்ந்துகொள்ளும் விதமாக முதல் மனிதனையும், முதல் பெண்ணையும் அவருடைய பூமியில் வாழ்வதற்காகப் படைத்தார். அவர் முதல் மனிதனை ஆதாம் என்றும் முதல் பெண்ணை ஏவாள் என்றும் அழைத்தார். அவர்களைத் திருமணம் செய்துகொண்டு, குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு அவர் படைத்தவற்றை அனுபவிக்கும்படியும் சொன்னார்.

கடைசியாக கடவுள் எல்லாவற்றையும் முடித்தார். அவர் படைத்தவற்றைப் பார்த்தார். அவை மிகவும் நன்றாகவே இருந்தன. எனவே ஏழாம் நாளன்று அவர் ஓய்வெடுத்தார். ஏழாம் நாளை கடவுள் ஆசிர்வதிக்கவும் செய்தார். அத்தினத்தை ஓய்வு கொள்ளும் புனித தினமாகவும், அவர் கொடுத்த அனைத்தையும் அனுபவிக்கும் தினமாகவும் ஆக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கோதுமை மணி”
## - புனிதை அல்போன்சா



புனிதை அல்போன்சா
வாழ்க்கை வரலாறு
- தொடர்

“உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன். கோதுமை மணி நிலத்தில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது'' (யோவான் 12:24) என்பது இயேசுவின் அருள்வாக்கு. அதன்படியே, அல்போன்சா ஆன்மீகத்தின் மண்ணில் விழுந்து மடிந்து, அன்பு, சகிப்புத்தன்மை எனும் நீரும், உரமும் உட்கொண்டு, அதிக பலன் தரும் கோதுமைச் செடியாக வளர வேண்டியிருந்தது. இயேசு கிறிஸ்துவின் மணமகளாக அநேக அக்கினிப் பரீட்சைகளை இதற்குள் வென்றார். இன்னும் நிறைய சோதனைகளை அவர் சந்திக்க வேண்டியிருந்தது.

கிளாரம்மாள் மடத்தின் கன்னியர்கள் நவதுறவறம் ஆரம்பிக்க 1934இல் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அந்த வருடம் நவதுறவறம் ஆரம்பிக்க அல்போன்சா தீவிரமாக ஆசைப்பட்டார். விண்ணப்பம் அனுப்பினார். ஆனால் நவதுறவறக் காலத்தில் பின்பற்றவேண்டிய கடினமான கடமைகளைக் கடைபிடிக்க உடல்நிலை சீராக இல்லாத காரணத்தால், அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர், 1935 ஆகஸ்ட் 12ஆம் நாள் புனித கிளாரம்மாளின் திருநாளன்று சேர்க்கப் பட்டார்.

நவதுறவற காலம் அல்போன்சாவின் வாழ்க்கையில் மிக முக்கியமான காலம் சங்னாசேரியில் ஆரம்பமானது. கார்மேல் சபையைச் சார்ந்த அருட்திரு லுயீஸ் பெருமாலில் ஆன்ம குருவாகவும், பயிற்சிக் காலத்தில் வழிகாட்டியாக அருட்சகோதரி உருசலா அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். தாயின் அன்பை அல்போன்சாவுக்குக் காட்டிய அந்த அருட்சகோதரி, அல்போன்சாவின் புனித வாழ்க்கையில் பெரும்பங்கு வகித்தார். அல்போன்சாவின் தந்தை, மகளை இந்த சகோதரியிடம்தான் முதன்முதலில் ஒப்படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தன் பொறுப்பில் விடப்பட்ட கன்னியர்களைச் சபையின் விதிகளுக்கேற்ப வழிநடத்தத் தேவையான விவேகமும், பக்குவமும், விசாலமான இதயமும் உடைய ஒருவராக அவர் விளங்கினார். ஆன்மீக வாழ்வின் இனிமையை நன்கு சுவைத்தறிந்த அருட்திரு லுயீஸ் அவர்கள், ஆன்மீக ஞானம் நிறைந்தவராக விளங்கினார். அந்த இரண்டு வழிகாட்டிகளும் அல்போன்சம்மாவின் அர்ப்பண வாழ்க்கையில் என்றும் நினைக்கப்பட வேண்டிய வர்களாக இருந்தார்கள். அல்போன்சா இவர்களை என்றும் நன்றியுடன் போற்றினார்.

''பகுத்தறிவின் முதல் பாடத்தைக் கற்று, என் வாழ்க்கை முழுவதும் உண்ண வேண்டிய உணவுப்பொருட்களைப் பெற்று அவைகள் ஒவ்வொன்றையும் தேவைக்கேற்ப சமைத்து உண்ண எனக்குக் கற்பித்தது என்னுடைய மதிப்புக்குரிய ஆசான்கள்தான்'' என அல்போன்சா இந்த இரண்டு புனித ஆன்மாக்களைக் குறித்து சொல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதுண்டு.

சில வருடங்களுக்குப் பின் நோயுற்றுப் படுத்திருக்கும்பொழுது அருட்திரு. லுயீஸ் அவர்களுக்கு இவ்வாறு எழுதினார். "கடவுளின் தனிப்பட்ட அருளாலும், உங்களுடையவும், உரூசுலம்மாவுடையவும் உதவியாலும் என்னுடைய உள்மனதுக்கு வெளிச்சம் கிடைத்தது. புனித வாழ்க்கைக்குத் தேவையான வழிகளை எல்லாம் கற்றுக்கொண்டேன். தோல்வி அடைந்தால் என்னுடைய தவறுதான். எனக்காக நீங்கள் செய்த உதவிகளுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். இவ்வளவு நல்ல பிதாவையும், தாயாரையும் எனக்குக் கொடுத்தமைக்கு நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். இவ்வுலகப் பெற்றோரின் பாசத்தை நான் அனுபவித்ததில்லை. பிறந்த போதே என் அம்மா இறந்தார். பெரியம்மாவின் வீட்டில் வளர்ந்ததால் அப்பாவின் அன்பு கிடைக்கவில்லை. உங்களிடமிருந்துதான் அன்பின் சுவையை அறிந்தேன்".

## ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே, நீர் எனக்குப் பெரும் நன்மை செய்கின்றீர்

**உமக்கு நன்றி**

★ ஆண்டவரே, தடுக்கிவிழும் யாவரையும் நீர் தாங்குகின்றீர்

**உமக்கு நன்றி**

★ ஆண்டவரே, நீர் அனாதைப் பிள்ளைகளையும் பெண்களையும் ஆதரிக்கின்றீர்

**உமக்கு நன்றி**

அருட்திரு லுயீஸ் ஒரு வருடம்தான் அல்போன்சாவுக்கு ஆன்ம குருவாக இருந்தார். அதற்குப் பின் அவர்களுக்கிடையில் பரிமாறப்பட்ட அறிவுரைகள், ஆலோசனைகள் கடிதங்கள் வழி தொடர்ந்தது. அருட்தந்தையிடமிருந்து கேட்டவற்றைப் பிற்காலத்தில் பிறருக்குச் சொல்லிக்கொடுக்கக் கூடிய அளவுக்கு மனப்பாடமாக்கியிருந்தார். பரங்ஙானம் மடத்தில் வாழ்ந்த போதும் அருட்சகோதரி உரூசுலாவின் அன்புக்கும் நேசத்துக்கும் பாத்திரமானார்.

புனித வாழ்க்கையின் உயர்ந்த பாதைகள் கற்களாலும், முட்களாலும் வேயப்பட்டவை என்று அவருக்க நன்றாகத் தெரிந்திருந்தது. அந்த உன்னத லட்சியத்தை அடைய எப்படிப்பட்ட துன்பங்களையும் மேற்கொள்ளத் தயாராக இருந்தார். அதிக கடினமான ஒழுங்குகளையும், விதிகளையும் தன் பயிற்சிக் காலத்திலிருந்தே கவனமாகக் கடைப்பிடித்தார். ஆனால் இப்படிப்பட்ட கண்டிப்பான வாழ்க்கைப் பயிற்சி ஒருமாத காலம் தான் நீடித்தது. இதற்கு முன் அவரைத் துன்புறுத்திய இரத்தப்போக்கு மீண்டும் ஆரம்பித்தது. வாய் மூக்கு வழியாக இரத்தம் கசிந்தது. அபூர்வமான அந்த நோய் அதிகமாகிக் கொண்டிருந்தது. அல்போன் சாவின் நிலைமை மிக மோசமானது. இந்த நிலையில் அவருடைய பயிற்சியை அவர் பூர்த்தி செய்ய முடியாமல் போகும் என்று அதிகாரிகள் பயந்தார்கள். பிறநவகன்னியர்களுக்கும் அவர் இடையூறாக இருப்பதாகவும் கருதினார்கள். அவரைப் பரங்ஙானத்துக்கு அனுப்பத் தயார் செய்து, ஆயருக்குத் தெரியப்படுத்தவும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

எதிர்பாராமல் வந்த இந்நிகழ்ச்சிகளால் அல்போன்சா மனம் தளர்ந்தார். உடல் வியாதியுடன் மனமும் சோர்ந்துபோனது. செபம் மட்டும் தான் அவரைக் காப்பாற்றியது. ஆத்ம நாதன் இயேசுவிடம் மனமுருகி, தன் துன்பங்களை எடுத்துச் சொன்னார்.

ஆயர் ஜெயிம்ஸ் காளாசேரி வந்து அவர்களைப் பார்த்தார். அல்போன்சாம்மாவின் புனிதத்தன்மையும், கடவுளின் விருப்பத்திற்கு கீழ்ப்படிதலையும் கண்ட அவர் "இவரைப் பரங்ஙானத்திற்கு அனுப்ப வேண்டாம். இறப்பதாக இருந்தால் இங்கேயே இறக்கட்டும்" என்றார்.

ஆயரின் விருப்பம் அறிந்த அல்போன்சா ஆனந்தத்தால் நெகிழ்ந்தார். பிறர் உதவியின்றி எதுவும் செய்யமுடியாத நிலையில்தான் இருந்தார். முணுமுணுப்போ முறையீடோ இல்லாமல், துன்பத்திலும் பிறரோடு அன்பும் நன்றியும் கலந்த புன்னகையைப் பகிர்ந்து அமைதியாகப் படுத்திருந்தார்.

கேரள கார்மேல் சபையின் நிறுவனரும், புனித வாழ்க்கை வாழ்ந்தவருமான சாவற சூரியாக்கோஸ் ஏலியாஸ் அடிகளாரின் வழியாக நடந்த அற்புதச் செய்திகளை மக்கள் அறியத் தொடங்கிய காலம் அது.

ஆன்ம குருவான லுயீஸ் அடிகளார் அவர்கள், ஏலியாஸ் அடிகளார் அவர்களின் நவநாளில் அல்போன்சாவின் நோய் குணமாக செபிக்கச் சொன்னார். அவர் தனியாகவும், பிற சகோதரிகள் கூடியும் செபித்தார்கள். ஒன்பது நாட்கள் முடிந்தன. வியாதி சிறிதளவும் குறையவில்லை. அல்போன்சா் இறந்து போவார் என்று பிற நவகன்னியர்கள் அஞ்சினர்.

- தொடரும்

டோரா ஸி.பொரியத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்
எஸ்.ஜே.யோகராசா
உளநல ஆலோசகர்
(அன்பின் பரிணாமச் சங்கம்)

அங்கம் 01

## என் அன்பில் நிலைத்திருங்கள்

# உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறட்டும்

அனைவருமே மகிழ்ச்சியாக வாழ ஆசைப்படுகிறோம். மகிழ்ச்சியாக இருப்பது எப்படி? என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியாக இருக்கப் பல வழிகளை நாடுகின்றோம். முதலில் ஒரு மனிதன் சரீரத்தேவைகளான அடிப்படைத் தேவைகளைப் பெற இராப் பகலாக் கடுமையாக உழைக்கிறான். இருக்க வீடு, உடுக்க உடை, குடிக்கத் தண்ணீர், சாப்பிட உணவு, அதே போன்று காமத்தேவை போன்றவற்றைப் பூர்த்தி செய்யக் கஷ்டப்படுகிறான். இவைகள் கிடைத்தால் ஒரு மனிதன் முழுமையான மகிழ்ச்சியை அடைந்து விடுவானா? இல்லை அவனுடைய மனதின் தேவைகளும் நிறைவேற வேண்டுமே!

எல்லோரும் என்னை மதிக்க வேண்டும். அன்பு செய்ய வேண்டும். பாராட்ட வேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டும். இவை கிடைக்காத போது சரீரத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும் அவனுக்கு மகிழ்ச்சி கிடைக்காது. இன்று பலருக்கு இருக்க வீடு இருக்கிறது. உணவு, உடை, நீர் எல்லாமே கிடைக்கிறது. ஆனால் நிம்மதியில்லை. ஏன்? வீட்டில் மனத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் ஒரே சண்டை பிடித்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

எம்மைப் பார்த்து இயேசுநாதர் என்ன கூறுகிறார் தெரியுமா?

'என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும், உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்' (யோவான் 15/11)

இங்கு இயேசுநாதர் என்ன சொன்னார் என்பதை நாம் ஒவ்வொருவரும் கூர்ந்து கவனிக்க வேண்டும். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது. என் தந்தை என்மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள். நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்'. (யோவான் 15/7-10)

உண்மையான மகிழ்ச்சியைப் பெறும் வழியை இயேசு கூறுகிறார். நாம் முதலில் சரீர மனத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இராப்பகலாகக் கஷ்டப்படுகிறோம். கிடைக்கவில்லையேல் மன வேதனைப்படுகிறோம்.

'அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.' (மத்தேயு 6/33)

இங்கே இயேசு என்ன சொல்கிறார்? எல்லாவற்றையும் விட்டுவிட்டு, முயற்சி எடுக்காமல், உழைக்காமல் சோம்பேறியாக இருந்து கோயிலுக்குப் போனால் எல்லாம் சரி என்று சொல்கிறாரா? இன்று மக்கள் கூறுகின்ற வார்த்தைகள் எவை?

'குறுக்குவழியில் சம்பாதித்து கோடீஸ்வரராக வந்து இன்று பலர் வாழ்கிறார்கள். ஆனால் நாம் கடவுளே! கடவுளே! என்று எல்லாக் கோயில் குளங்களுக்கெல்லாம் போகிறோம். எமக்குத்தான் பிரச்சினை அதிகம். கடவுளைத் தேடத்தேடப் பிரச்சினை அதிகரிக்கிறதே தவிரக் குறையவில்லையே? அது ஏன்?'

இன்று நுகர்வுக் கலாச்சாரத்திலேயே நாம் எல்லோரும் வாழ்கிறோம். 1. போட்டி 2. பணத்துக்கு முதலிடம் 3. மனிதனைப் பொருளாகப் பாவித்து விட்டு எறியும் சுயநலப்போக்கு. இவற்றின் மத்தியிலேயே மதத்தையும் நோக்குகிறோம். மதங்களில் ஆன்மீகத்தைக் காணவில்லையேல் கலங்கித் தவிக்கிறோம். ஆயனில்லா ஆடுகளைப்போல் அங்கும் இங்கும் நிம்மதிக்காக அலைகிறோம்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணி தீர்க்கும் பனிமய மாதா!



## புறக்கோட்டை புனித பிலிப் நேரியர் ஆலயத்தில் அன்னையின் திருவிழா!

“பனிமய அன்னையின் புதுமை வரம்மிக்க சுரூபத்தின் பாதம் கழுவிய தண்ணீரை, ஆழ்ந்த நம்பிக்கையோடு மக்கள் குடிக்கிறார்கள். அன்னைக்கு எதிரே தொங்க விடப்பட்டுள்ள விளக்கிலிருந்து எண்ணெயை எடுத்துச் சென்று உடலில் பூசுகிறார்கள். பிணியுற்றோர் பக்தியோடு ஜெபமாலையை தலையில் வைத்து மன்றாடிக் குணம் பெறுகிறார்கள். குழந்தை வரம் எதிர்பார்க்கும் பெண்கள் கருத்தரிக்கின்றனர்.

பிரசவச் சிக்கலில் இருப்போர், சுகப்பிரசவம் அடைகிறார்கள். பனிமய அன்னையின் மீது வைத்துள்ள பக்தியினால் மக்கள் இப்படி பற்பல அற்புதங்களை, அனுபவங்களைப் பெற்று வருகிறார்கள்!' - தூத்துக்குடி நகரில் ஆட்சி செய்யும் தூய பனிமய மாதா பற்றி, கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்கு முன்பு சுவாமி பிரான்ஸிஸ் வைஸ் எனும் ஆங்கிலேயர் குறிப்பிட்டிருக்கும் செய்தி இது.

இன்று, அன்னையிடம் சரணடைந்து கொண்டிருக்கும் லட்சோப லட்சம் பக்தர்களின் அனுபவ மொழியும் இதுவே! இந்து, முஸ்லிம் என பிற மதங்களைச் சேர்ந்தவர்களில் பலரும் கூட, தங்களின் பாதுகாவல் தெய்வமாக பனிமய அன்னையின் பாதம் பணிகின்றனர்.

அதே போன்று , கொழும்பு புறக்கோட்டை புனித பிலிப் நேரியர் ஆலயத்திலும் பனிமய அன்னை அருள்பாலித்து வருகின்றார். இவ்வாலயத் திருவிழா எதிர்வரும் 5 ஆந் திகதி வெகு கோலாகலமாகக் கொண்டாடப் படுகின்றது.

இலங்கையில் வாழும் பரதர்குல மக்கள் அன்னையின் திருவிழாவை வருடந்தோறும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புரூஸ் ஓல்சன்
வாழ்க்கைச் சரிதம்
- தொடர்

# மோடிலோன் மக்களின் கடவுள் டிபோ-டிபோ !



கிராமத்தலைவர்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெறுவதற்கும் ஓல்சன் இதே முறையைத்தான் கையாண்டார்.

ஓல்சன் அந்தக் கிராமத்தாரோடு சேர்ந்து வாழ்ந்தபடியால் அவருக்கும் பயிரிடுவதற்கு ஒரு நிலம் கொடுக்கப் பட்டிருந்தது.

தென் அமெரிக்கப் பழங்குடிகளில் மோடி லோன் பழங்குடிகளைத் தவிர மற்றப் பழங்குடி கள் அனைவரும் மக்காச் சோளத்தைப் பயிரிட்டு உணவாக உட்கொண்டு வந்தார்கள்.

ஆனால் மோடிலோன் பழங்குடிகள் மக்காச் சோளத்தைக் கண்டதுமில்லை, அதைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. ஓல்சன் தான் கொண்டு வந்திருந்த மக்காச்சோள வித்துக் களைத் தனது நிலத்தில் பயிரிட்டார்.

கதிர் முற்றி அறுவடை செய்யும் வேளை வந்தது. இந்த விநோதமான பயிரைப் பார்க்கும்படி தலைவனே அங்கு வந்து விட்டான்.

ஓல்சன் மக்காச்சோளத்தை உரித்துத் தின் பதைக் கண்ட தலைவன் தானும் தின்று பார்க்க ஆசைப்பட்டான். ஓல்சன் அவனிடம் ஒரு கதிரை நீட்டி, அதை எப்படித் தின் பது என்று விளக்கினார்.

ஒன்றல்ல, அடுத்தடுத்து நான்கு கதிர்களை வாங்கி ஒரே வேளையில் தின்று தீர்த்துவிட்டான் தலைவன். அது மட்டுமல்ல, தான் அதுவரை அவ்வளவு சுவையான உணவைத் தின்றதே இல்லை என்று கூறினான்.

ஓல்சன் உடனே தன்னிடமிருந்த மக்காச் சோள வித்துக்களை அவனிடம் கொடுத்து, அதை எப்படிப் பயிரிட வேண்டும் என்று விளக்கினார்.

தலைவன் தானாகவே இவைகளைத் தனது குடிகளிடம் கொடுத்துப் பயிரிடும்படி செய்தார்.

மக்காச்சோளத்தின் சுவையைக் கண்ட மக்கள் தலைவனைப் போற்றிக் கொண்டாடினார்கள். மற்றக் கிராமங்களிலும் மக்காச்சோளம் பயிரிடப் பட்டது. தலைவனின் புகழ் பரவியது.

அந்தத் தலைவன் ஓல்சனின் நெருங்கிய நண்பனாகி விட்டான்.

ஒருநாள் தலைவனும் மருத்துவச்சியும் பேசிக் கொண்டிருந்ததை ஓல்சன் தற்செயலாகக் கேட்க நேர்ந்தது.

''யார் இந்த வெள்ளைத்தோல் மனிதன்? நமக்கு இவ்வளவு உதவிசெய்கிறானே! அவன் வந்தபோது நாம் அவனைக் கொல்ல முயன் றோம். ஆனால் அவனோ நமக்கு நல்லது செய்து வருகிறான். அவன் நோயில் சாகக் கிடந்தபோது அவனுடைய கடவுள் பெரிய கழுகை அனுப்பி அவனைத் தூக்கிக்கொண்டு போய் குணமாக்கி, அவனை மறுபடியும் நம்மிடமே கொண்டுவந்து சேர்த்து விட்டாரே! அவர் பெரிய கடவுள்தான்'' என்று அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதைக்கேட்ட ஓல்சன் அவர்களுக்கு மெய்யான தேவனைப் பற்றிச் சொல்ல வேண்டிய வேளை வந்துவிட்டது என்பதை உணர்ந்தார். அதற்காக ஆண்டவரைத் துதித்தார்.

அவர் அவர்களுடைய பழக்கவழக்கங்களை நன்கு அறிந்திருந்தார். அவர்களுடைய மொழியில் நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டிருந்தார். அவர்களது புராணக் கதைகளையும் கேட்டு வைத்திருந்தார்.

மோடிலோன் பழங்குடிகளுக்குத் தனித்தனி வீடு கிடையாது. கிராமம் முழுவதுமே 'சமூக வீடு' என்ற பெரிய குடிசையில்தான் குடியிருக்கும்.

மரக்கிளைகளையும் தளைகளையும் கொண்டு இந்தக் குடிசை கட்டப்பட்டிருக்கும். இதன் நீளம் 90 அடி, அடிப்பக்கம் குறுக்காக 55 அடி, உயரம் 40 அடி, காற்றும் மழையும் அவ்வளவு எளிதாக இந்தக் குடிசையைச் சிதைத்துவிட முடியாது.

இந்த மாபெரும் குடிசையினுள்ளே ஒவ்வொரு குடும்பத்தின் பகுதியும் தனித்தனியே தடுக்கப்பட்டிருக்கும். நீண்ட கொடிகளால் செய்யப்பட்ட தொட்டில்தான் இவர்களுடைய படுக்கை.

'டிபோ-டிபோ' என்று அவர்கள் பெயரிட்டு அழைத்த கடவுள் வானத்தில் நட்சத்திரங்களுக்குப் பின்னால் அமைக்கப்பட்ட ஒரு மாபெரும் குடிசையில் வாழ்கிறார் என்று அவர்கள் நம்பினார்கள். அந்தக் குடிசையை நோக்கிச் செல்லும் பாதை ஒருவருக்குமே தெரியாது. ஒருவருமே 'டிபோ-டிபோ'வைக் கண்டதில்லை என்று அவர்கள் நினைத்தார்கள்.

என்றாலும் 'இஸ்கோரிடா' என்று அழைக்கப்படும் இந்தப் பெரிய குடிசைக்குச் செல்ல ஒவ்வொரு பழங்குடிக்கும் ஆசை இருந்தது. ஆனால் வழிகாட்டி இல்லாத நிலையில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அவர்களது வாஞ்சையை உணர்ந்த ஓல்சன் அவர்களுக்கு வழிகாட்டும்படியே தேவன் தன்னை அழைத்திருக்கிறார் என்றும் உணர்ந்தார். அவர்களுக்குப் புரியும்படியாகக் கிறிஸ்துவைப் பற்றி எப்படிச் சொல்வது என்ற யோசனையுடன் தொடர்ந்து ஜெபித்து வந்தார்.

மோடிலோன் பழங்குடிகளின் புராணக் கதை ஒன்று அவருடைய கவனத்தைக் கவர்ந்தது.

பழங்குடிகளில் ஒருவன் காட்டுப் பாதையில் தனது நண்பர்களுக்காகக் காத்திருந்தான். அப்போது அங்கிருந்த ஒரு எறும்புப் புற்றைச் சுற்றி எறும்புகள் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டான். எந்தவித நோக்கமுமின்றி, பயனுமின்றி இங்குமங்கும் ஓடிக் கொண்டிருக்கும் அந்த எறும்புகளின் முட்டாள்தனத்தை எண்ணிச் சிரித்தான். அவற்றை நசுக்கிவிட எண்ணிக் காலைத் தூக்கினான்.

அப்போது அவனே ஓர் எறும்பாக மாறிவிட்டான். எறும்புகள் தங்களால் இயன்றவரையில் சுறுசுறுப்பாகச் செயல்படுவதை அவன் அறிந்தான். அது முட்டாள்தனமல்ல என்பதை உணர்ந்தான். இந்த நல்ல எண்ணத்தை எண்ணியவுடனே அவன் மறுபடியும் மனிதனாகி விட்டான்.

'டிபோ-டிபோ' என்ற கடவுளும் மனிதன் தன்னைப் போன்று நல்லவனாக இருக்க வேண்டுமென்றே விரும்பினார். எனவே அவரும் ஒரு மனிதனாகப் பிறந்து வழிக்காட்டினார்.

இதுவே அந்தப் புராணக் கதை.

### ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே, உம் மக்கள் மீது விருப்பம் கொள்கின்றீர்

உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, நான் நெருக்கடியில் இருந்தபோது எனக்குத் துணை புரிந்தீர்

உமக்கு நன்றி கூறுகிறேன்

★ ஆண்டவரே, நான் மன்றாடும் போது எனக்குச் செவிசாய்க்கின்றீர்

உமக்கு நன்றி கூறுகிறேன்

ஆண்டவரே பார்த்து இந்தப் பொருத்தமான கதையை எடுத்துக் காட்டியுள்ளதை உணர்ந்தார் ஓல்சன்.

ஒருநாள் இரவில் கிராம மக்கள் நெருப்பைச் சுற்றிக் குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது ஜெபத்தோடு பேசத் தொடங்கினார் ஓல்சன். புராணக் கதையை அப்படியே கூறிய ஓல்சன் மேலும் தொடர்ந்தார்.

''டிபோ-டிபோ மிகவும் அன்பானவர். அவர் மோடிலோன்கள் எல்லோரும் தன்னோடு பெரிய குடிசையில் இருக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் மோடிலோன்களோ திருடினார்கள், ஏமாற்றினார்கள், கொலை செய்தார் கள்.


**- தொடரும்**

– எச்.பி.ராஜ்குமார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தம்மை அறிந்தவர்களை திடப்படுத்தும் தேவன்!

"தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள்''

(தானியேல் 11:32).

நம் வாழ்க்கையிலே போராட்டங்களும், துன்பங்களும் சில நேரங்களில் அதற்கு நேர்மாறான காரியங்களும் மாறி மாறி வருவது இயற்கை தான். எனினும், மனிதன் இன்பமும், மகிழ்ச்சியும் நிறைந்த நாட்களிலே சந்தோஷமாய் இருக்கிறான்.

ஆனால் துன்பமும், உபத்திரவமும் வந்தவுடனே கலங்கிவிடுகிறான். இதுதான் நம் வாழ்க்கையிலே நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்கிற அனுபவம். ஆனால் தேவனை அறிகிற அறிவு நமக்குள் வரும்போதோ நன்மையிலும் சரி, தீமையிலும் சரி, வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் அவரையே நோக்கிப் பார்க்க நாம் கற்றுக்கொள்கிறோம் (எரே.33:3). அப்படி நோக்கிப் பார்க்கிற அவருடைய அடியார்களுக்கு அவர் தமது தெய்வீக பெலனை, திடமனதை கொடுக்கிறார் (தானி. 11:32). வேத வசனங்கள் மூலம், தேவ ஊழியர்கள் மூலம் மற்றும் பல்வேறு வகைகளிலே நம்மை உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்டினுக்கும் அவனது நண்பர்களுக்கும் கோடை விடுமுறை செம ஜாலி! முழுப் பரீட்சை முடிந்தது முதல், மே மாதம் கடைசி வரை இந்தக் குட்டீஸ் குழு தெருப்புழுதியில்தான் ஓடி ஆடிக்கொண்டிருந்தது. நீண்ட தூர இன்பச் சுற்றுலாவுக்காக நிறைய பணம் சேமித்திருந்தனர். மகிழ்ச்சியான இந்த விளையாட்டாலும் பயிற்சியாலும் நல்ல சில அனுபவங்களைக் கற்றுக்கொண்டனர். இது உண்மை.

# விளையாட்டும் படிப்பும்



ஜூன் மாதம் வந்தது. அடுத்த கல்வி ஆண்டு; பள்ளிக்கூடம் திறந்தது! மாகிக்கு காய்ச்சல் வருவதுபோல் இருந்தது; விக்கிக்கு வயிற்றுவலி வருவதுபோல் பாசாங்கு செய்தான். இந்தக் குட்டீஸ் குழுவில் பலருக்கும் பள்ளிக்குச் செல்ல பிரியமே இல்லை.

மார்டின் கொஞ்சம் வித்தியாசமானவன்; அறிவாளி! அவன் சொன்னான், "இங்க பாருங்க, மே மாசம் முழுசும் ஜாலியா சுத்துனோம், வெளயாண்டோம், நல்லதுதான்; நம்ம வாழ்க்கையில் முன்னேறனும்னா சீரியஸா, இன்னும் அதிகமா, உற்சாகமா உழைக்க வேணாமா?"

மற்றவர்கள் யோசித்தார்கள்; அவனது நியாயம் அவர்களுக்கு புரிந்தது; புத்தகப் பையை தூக்கி விட்டார்கள்.... பள்ளியை நோக்கிப் பறக்கிறார்கள்.

பாடம்: **விளையாடும்போது விளையாடு; படிக்கும்போது படி! வெற்றிக்கு இதுவே வேதம்.**

சாகப்படுத்துகிறார். நம்முடைய விசுவாசத்தை கனப்படுத்துகிறார்.

வேடிக்கையான ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன் பாருங்கள்.

பல வருடங்களுக்கு முன்பு ஒரு சமயம் என்னுடைய வீட்டுக்குச் சிலர் விருந்துக்கு வருவதாக கூறியிருந்தனர். ஆனால், ஐந்து பேர் தான் வருவார்கள் என்று எதிர்பார்த்த எங்களுக்கு திடீரென்று பதினைந்து பேராக வந்த பொழுது ஒரு பெரிய அதிர்ச்சி தான் ஏற்பட்டது. என் கணவர் அதைப் பற்றியெல்லாம் ஒன்றும் கவலைப்படமாட்டார். அது எவ்வளவு பெரிய கஷ்டமான காரியம் என்று அவர் அறிந்து கொள்ள மாட்டார். என்னுடைய சகோதரி அந்த சமயம் என்னோடு இருந்தார். இந்த நிலைமையை நீ எப்படி சமாளிக்கப் போகிறாய்? என்று அவரும் பயந்தார். அப்பொழுதெல்லாம் ஹோட்டலில் இருந்து சாப்பாடு தருவிக்கவோ வழியும் கிடையாது. கையில் பணமும் கிடையாது. இந்த நிலைமையில் என் சகோதரியிடம் "ஆண்டவர் நிச்சயம் வழிநடத்துவார்" என்று கூறிவிட்டு, ஆண்டவரிடம் இந்தப் பிரச்சினையை ஸ்தோத்திரத்துடன் சமர்ப்பித்தேன். ஆண்டவர் தன்னுடைய வல்லமையினால் அத்தனை பேரும் திருப்தியாக புசிக்கவும், மீதமும் ஆகும்படி அருள்புரிந்தார். நானும் என் சகோதரியும்கூட சாப்பிடுவதற்கு அதிகளவில் ஆகாரம் இருந்தது. இது ஒரு சாதாரண காரியம் தான். ஆனால் கர்த்தரை நம்பினவர்களை அவர் இப்படிப்பட்ட சிறு காரியங்களிலேயும்கூட திடப்படுத்தி வழிநடத்துகிறார். எல்லோரும் போன பிறகு என் கணவரிடம் இந்த அற்புதத்தை பகிர்ந்துகொண்டேன். அவரும் என்னோடு சேர்ந்து ஆண்டவரை ஸ்தோத்திரித்தார்.

எனக்கு அன்பானவர்களே, உங்களுக்கும் வாழ்க்கையில் பல குறைவுகள் ஏற்படலாம். இன்று நீங்களும் ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். உங்கள் தேவைகள், கண்ணீர், துன்பம், உபத்திரவம், சஞ்சலம் இவைகள் எல்லாவற்றையும் அவரிடம் சொல்லிவிடுங்கள். உங்களை அற்புதமாக வழிநடத்தி திடப்படுத்தி ஆசீர்வதிப்பார் (ஏசாயா 14:32).

ஜெபம்: "என் அன்பு தெய்வமே, உம்மை நம்பினவர்களை. உம்முடைய வல்லமையை அறிந்தவர்களை. நீர் எவ்வளவாய் திடப்படுத்தி வழிநடத்துகிறீர் என்பதை அறிந்து கொண்டேன். என்னையும் நீர் பலப்படுத்தும். தைரியப்படுத்தும். இன்று முதல் என் வாழ்வையும் செழிக்க செய்து நானும் ஒரு சாட்சியாக உம்மை மகிமைப்படுத்த அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

– சகோதரி மேரி தெரேசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமல உற்பவ மறையுண்மை

“எல்லாம் வல்ல இறைவன் தந்த தனி அருளாலும், சிறப்புரிமையாலும், மனிதகுல மீட்பர் இயேசுவின் பேறுபலன்களை முன்னிட்டும், தூய கன்னி மரியா கருவான முதல் கணத்திலிருந்தே ஜென்மப் பாவத்தின் மாசு எதுவுமின்றி காப்பாற்றப் பெற்றார் எனும் கோட்பாடு இறைவனால் வெளிப்படுத்தப்பட்டது. எனவே, இதை அனைத்து விசுவாசிகளும் உறுதியாகவும், முழுமையாகவும் விசுவாசிக்க வேண்டும் என வரையறுத்து அறிவிக்கிறோம்.''

1854 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாளில் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் மேற் கண்டவாறு அமல உற்பவ விசுவாசக் கோட்பாட்டை பிரகடனப்படுத்தினார்.

நாம் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 8ஆம் திகதியன்று 'மரியா அமல உற்பவி' என்ற விழாவை சிறப்பிக் கின்றோம். திருவருகைக் காலத்தில் இவ்விழா அமைந்திருப்பது மிகவும் பொருத்தம் என்று கூறலாம். மரியா இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்துக் காத்திருந்தார். நாமும் இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்திருந்து நம்மை தயாரிக்க வேண்டும். இதனால் திருவருகைக்கால தயாரிப்பின் போது நாம் மரியாவை நோக்கி செபிக்கவும், அவரது அருட்துணையை நாடவும் இவ்விழா உதவுகிறது.

மரியா- அமல உற்பவி என்று கிறிஸ்தவ திருமறையின் தொடக்க காலத்திலிருந்தே இறைமக்கள் விசுவாசித்து வந்திருந்தனர்.

மரியா கருவில் உருவான தருணம் முதல் பாவமாசு எதுவுமின்றி வாழ்ந்தார். ஆதிப் பெற்றோர் இழைத்த பாவத்தினால் மனுக்குலம் சாபத்திற்குள்ளானது. இதனால் மனித பிறப்பில் தோன்றும் யாவரும் இந்த பாவ நிலையில் / அருளிழந்த நிலையில் பிறக்கின்றனர். இந்த பாவ நிலையை அகற் றவே திருமுழுக்கு அளிக்கப்படுகிறது.

மனுக்குலம் அடைகின்ற சாபக் கேட்டிலிருந்து தூய மரியா விடுதலை பெற்றவராய், பாவ நிலை தீண்டாத விதிவிலக்காய் உற்பவித்தார்.

அவர் உற்ப வித்தது, வாழ்ந்தது இவை யாவும் அருளின் நிலையில்தான். இந்த தனி வரம் மரியாவுக்கு அருளப்பட்டது ஏன்?

அருளின் பிறப்பிடமாய் திகழும் இறைவனுக்கே தாயாகும் பேற்றினை அளித்த இறைவன் மரியாவைப் பாவமாசு அணுகாமல் பாதுகாத்தார் என்பதில் வியப்பொன்றும் இல்லை.

''உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும், நீ அதன் குதிக்காலை காயப்படுத்துவாய்'' என்றார் (தொநூ 3:15). இதில் கூறப்பட்ட பெண் மரியா என்றும், அவள் வித்து இயேசு என்றும் திருச்சபை எப்போதும் கருதியது.

அலகையை எதிர்த்து நிற்கும் அணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவும் மரியாவும் ஒருசேர இருப்பதை விளக்குகிறது இவ்வசனம். "அருள் மிகைப் பெற்றவரே வாழ்க!" (லூக் 1:28) என்ற வானதூதரின் வாழ்த்துரையும், "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே" என்ற எலிசபெத்தின் புகழ்மொழியும் மரியாவின் அமல உற்பவத்துக்கான விவிலிய ஆதாரங்கள் என லாம்.

தொடக்க காலத்திலிருந்தே மரியா அமல உற்பவி என்ற கோட்பாட்டில் திருச்சபை உறுதியாக இருந்தது. இது 11ஆம் நூற்றாண்டில் தெளிவான வடிவம் கொண்டிருந்தது. அமல உற்பவத் திருநாள் கொண்டாடப்பட்டது. 1497இல் திருத்தந்தை நான்காம் சிக்ஸ்டஸ் இத்திருவிழாவுக்கான தனிச் செபங்களைத் தொகுத்து வழங்கினார். 1546ஆம் ஆண்டில் திருத்தந்தைப் பொதுச்சங்கம் அமல உற்பவ மறையுண்மையை ஏற்றுக் கொண்டது. 1708ஆம் ஆண்டில் திருத்தந்தை ஒன்பதாம் கிளமெண்ட் அமல உற்பவத் திருநாளை கடன் திருநாளாக அறிவித்தார்.

19ஆம் நூற்றாண்டில் பல்வேறு பக்த சபைகளும், தனிநபர்களும் இதனை விசுவாசக் கோட்பாடாக அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்று 1854, டிசம்பர் 8ஆம் நாளில் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் மரியாவின் அமல உற்பவத்தை விசுவாசக் கோட்பாடாக பிரகடனம் செய்தார்.

திருச்சபையின் மத்திய காலத்தில் சில எதிர்ப்புகள் எழுந்தன. கிறிஸ்தவ சீர்திருத்தச் சபைகள் இக்கோட்பாட்டை ஏற்க மறுத்தன. கத்தோலிக்க திருச்சபையின் இறையியலாளர்களுள் சிலரும் எதிர்ப்பை தெரிவித்தது திருச்சபையில் திகைப்பை ஏற்படுத்தியது.

**எதிர்ப்புக்கு காரணங்கள்:**

1. ஜென்ம பாவம் என்பது மனித முறையில் ஏற்படும் உற்பவத்தால் வருகிறது. பெற்றோர்களின் இயல்பான உடல் உறவால் உருவானவர் மரியா என்றால் அவரும் ஜென்ம பாவத்தின் பிடியில்தான் இருக்க வேண்டும்.

2. ஜென்ம பாவத்தால் மரியா தீண்டப்படவில்லையென்றால், இயேசு கொணர்ந்த மீட்பு மரியாவுக்குத் தேவையில்லை என்றாகிவிடும். இயேசுவின் மீட்பு உலகம் முழுவதற்குமானது என்ற உண்மைக்கு இது குறைவைத் தரும்.

இதற்கு பதில் தரும் விதமாக பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த டன்ஸ் ஸ்காட்டஸ் கொடுத்த விளக்கம் பின்வருமாறு:

1. காக்கும் அருள், குணமாக்கும் அருள் என்று இருநிலைகள் உள்ளன. திருமுழுக்கினால் நமக்குக் குணமளிக்கும் அருள் வழங்கப்படுகிறது. இதனால் ஜென்மப்பாவம் கழுவப்படுகிறது.

மரியா உலக மீட்பரை ஈன்றெடுக்க வேண்டும் என்பதாலும், மரியாவைப் பாவ மாசிலிருந்து காப்பாற்ற வேண்டிய காரணத்தாலும் அவருக்கு காக்கும் அருள் வழங்கப்பட்டது.

2. இயேசு கிறிஸ்துவின் மீட்பின் பேறுபலன்கள் எல்லா மனித உயிர்களுக்கும் தேவை. இந்த மீட்பின் பேறுபலன் மரியாவுக்கு முன் கூட்டியே வழங்கப்பட்டது.

இவ்விளக்கத்தை திருச்சபை ஏற்றுக்கொண்டது. இதனால் மற்ற இறையியலாளர்கள் தெரிவித்த மறுப்பு மறைந்தது. "இயேசுவின் மகிமைக்காக மரியா பாவமற்றவராக உள்ளார் என்று ஏற்றுக்கொள்ள நமது விசுவாசம் நம்மை நிர்ப்பந்திக்கிறது.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் மரியா பாவத்தோடு தொடர்புடையவராக இருக்க இயலாது" என்ற புனித அகுஸ்தினாரின் சிந்தனையை விளக்கி டன்ஸ் ஸ்காட்டஸ் மத்திய கால எதிர்ப்பை எதிர்கொண்டார்.

புனித அகுஸ்தினாரின் பார்வையில் இயேசுவின் பேறுபலன்களை முன்னிட்டு அன்னை மரியாவுக்கு கொடுக்கப்பட்ட சிறப்புக் கொடை அவரது அமல உற்பவம். கருவானது முதல் இறப்பு வரை மரியா அருள்நிலையில் வாழ்ந்தார்.

தொடக்க நிலையில் மட்டுமல்லாமல் தொடர்ந்த வாழ்வு முழுவதும் அவர் அருள்நிலையில் வாழ்ந்தார். தொடக்க நிலை இறைவனின் சிறப்புக்கொடை. தொடர்வாழ்வு மரியாவின் முயற்சி.

– அருட்தந்தை ராஜ்ஆண்டனி

## பொன்மொழிகள்

★ இயேசு கிறிஸ்து நம்மில் நண்பராக வாழ்ந்தால் நாம் எல்லாவற்றையும் தாங்கி கொள்ள முடியும். ஏனெனில் இயேசுவே நம்மைப் பலப்படுத்துவார்.

*- புனித அவிலா தெரசா*

★ எல்லாவற்றையும் கடவுளின் இரக்கத்தில் நம்பு. ஏனெனில் அது அவருடைய வல்லமையைப் போல் எல்லையற்றது.

*புனித ரோமன் பிரான்சிஸ்*

★ உன்னைப் புனிதப்படுத்து. அப்போது உன் சமூகத்தையும் புனிதப்படுத்துவாய்.

*புனித அசிசி பிரான்சிஸ்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காயங்களால் உண்டான தழும்புகளில் உயிர்த்த இயேசு**

உயிர்த்த இயேசு தமது கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைக் காண்பித்து. "இதோ என் கைகள்; இங்கே உன் விரலை இடு; உன் கையை நீட்டி விலாவில் இடு; ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்" என்கிறார்.

இந்த இடத்தில் நம்மில் பெரும்பாலானோர் செயல்படும் விதம் இயேசுவின் அணுகுமுறை யிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். இயேசுவின் இடத்தில் நாம் இருந்திருந்தால் தோமாவை அழைத்து, "தோமா, இதோ இந்தக் காயத்தை ஏற்படுத்தியவன் அவன்; என் விலா வைக் குத்தியவன் இவன்; என் உடலைத் துளைத்தவன் அதோ அவன்" என்றெல்லாம் குற்றப் பட்டியலிட்டு ஆட்களைக் குறித்துக் காண்பித்து, பதிலுக்குப் பழிக்குப் பழி வாங்கச் சொல்லியிருப்போம். ஆனால் காயங்களால் ஏற்பட்ட தழும்பு களைச் சுட்டிக் காண்பித்து தம்மீது நம்பிக்கைக் கொள்ளும்படியாக உயிர்த்த இயேசு சொல்கிறார்.

உயிர்த்த இயேசுவின் இன்னொரு அடை யாளம் காயப்பட்ட தழும்புகளாகும். எங்கெங் கெல்லாம் காயப்பட்ட தழும்புகள் பழிவாங்கத்



# இன்றும் வாழ்கிறார் இயேசு



துடிக்காமல் மன்னிப்பை மனம் உருக வழங்கி தியாகத்தின் சின்னமாய் நிற்கின்றனவோ அங் கெல்லாம் உயிர்த்த இயேசு இன்றும் உயிர் வாழ் கிறார். நமது உறவுகளில், அன்பியங்களில், குடும்ப நட்புகளில், கொடுக்கல் வாங்கல்களில் உயிர்த்த இயேசுவை எண்பிக்கிறோமா?

**வழிப்போக்கனில் உயிர்த்த இயேசு**

லூக்கா நற்செய்தி 24:13-35-இல் எம்மாவு செல்லும் வழியில் சீடர் இருவரை இயேசு சந்திக்கும் நிகழ்வை வாசிக்கிறோம். எருசலேயிலிருந்து எம்மாவு ஏறக்குறைய 11 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

மாலை வேளையில் மேற்கு நோக்கிய இப்பயணத்தில் இயேசு ஒரு வழிப்போக்க ராய் உடன் நடந்தும் அந்த வழிப்போக்கர் தான் இயேசு என்று அச்சீடர்கள் அறிந்து கொள்ள வில்லை. இன்றும் நாம் அறியா வண்ணம் வழிப் போக்கராய் உயிர்த்த இயேசு நம் பாதைகளில், பயணங்களில், வாழ் வில் உடன் வருகிறார். ஆனால் அன்றையச் சீடர்களைப்போல நம்முடனே நடந்து வரும் இயேசுவை நாம்தான் அடையாளம் கண்டு கொள்வதில்லை.

1 சாமுவேல் 30:11-15-இல் பேரரசர் தாவீது மனம் உடைந்து தன் எதிரிகளைத் தேடும் பயணத்தில், வழிப் போக்கனாய், குற்றுயிராய் சாலை ஓரம் கிடந்த மனிதனுக்கு உணவும் மருந்தும் உதவியும் தருகிறார்.

இறுதியில் அம்மனிதன்தான் எதிரிகளைப் பிடிக்க துருப்புச் சீட்டாய் பயன்படுகிறான் என்று அந்நிகழ்வு சொல்கிறது. நாட்டு நடப்புகளை, அரசியல் நிகழ்வுகளை அலசிக்கொண்டே, அடுத்திருப்பவரிடம், வழிப்போக்கரிடம் உரை யாடி மகிழ்வோம். அவர்களிலும் இயேசு உடன் வருவதை அடையாளம் காண்போம்.

**இறைவார்த்தையில் உயிர்த்த இயேசு**

லூக்கா நற்செய்தி 24:4-45 முடிய உள்ள பகுதிகளில் எம்மாவு சென்ற சீடர்கள் வழி போக்கராய் வழிநெடுக வந்த இயேசுவோடு உரையாடி வருவதைப் படிக்கிறோம். இந்த உரை யாடலில் ஆண்டவர் இயேசு "அறிவி லிகளே இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற் றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சியடைவதற்கு முன் இத்துன்பங்களைப் படவேண்டுமல்லவா?" என்றார். மேலும் மோசே முதல் இறைவாக்கினர் வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார்" (24:25-27) என்று வாசிக்கிறோம்.


இந்த நிகழ்வை எம்மாவிலிருந்து எருசலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்குத் திரும்பிப் போகும்பொழுது சீடர்கள் ஒருவர் ஒருவரை நோக்கி ''வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?'' என்று பேசிக்கொண்டார்கள்'' (லூக் 24:32) என்றும் வாசிக்கின்றோம்.

இதிலிருந்தும் நாம் அறியும் பாடம் என்ன வெனில் மறைநூலில் உயிர்த்த இயேசு பிரசன்ன மாய் இருக்கிறார் என்பதாகும். புனித அகுஸ்தி னார் கூறுவார்: ''நான் மன்றாடும்பொழுது ஆண்டவர் என் குரலைக் கேட்கிறார். இறை



வார்த்தையை வாசிக்கும் பொழுதோ ஆண்ட வரின் குரலை நான் கேட்கிறேன்'' இந்தக் கூற் றில் எவ்வளவு உண்மை அடங்கியுள்ளது! உயிர்த்த இயேசுவை நாம் காண வேண்டுமெ னில் நம் உள்ளம் பற்றி எரியும் வண்ணம் மறை நூலை ஆழமாய் வாசித்துத் தியானிக்க வேண் டும்.

## பொன்மொழிகள்

★ ஒவ்வொரு நிமிடமும் நிகழ்வதை ஏற்று எப்போதுமே நன்மை செய்து கொண் டிருப்போம். - *புனித ஜெனோவா கத்தரீன்*

★ சுகத்தைப் பற்றிக் கவலைப்படுவது சுகத்தைக் கொடுக்காது.

- *புனித அவிலா தெரசா*

★ எல்லாம் நலமாகவே இருக்கும். எல்லாவித அனுபவங்களும் நல்லதாகவே விளையும் என நம்பு.

- *முத். நார்விச் ஜூலியானா*

மறைநூல் அறிவுக்கு விருந்து தரும் நூல் அன்று. அது உள்ளத்திற்கு மருந்து தரும் இறைவனின் வார்த்தையாகும். உயிர்த்த இயே சுவை அன்றாடம் சந்திக்க விரும்புவோர் நாள் தோறும் தவறாது இறைவார்த்தையை வாசிப்பர். நாம் எப்படி?

### அப்பம் பகிர்தலில் உயிர்த்த இயேசு

லூக்கா நற்செய்தி 24:30-31; யோவா 21:13; 1 கொரி 11:23; திப 2:42,46 ஆகிய பகுதிகளில் அப்பம் பகிரும் கொண்டாட்டங்களில் உயிர்த்த ஆண்டவரை சீடர்களும் தொடக்ககாலக் கிறிஸ்த வர்களும் கண்டு கொள் வதைப் பார்க்கிறோம்.

நம் உள்ளத்தை உருகி டச் செய்வதில் இறை வார்த்தைக்கு ஈடு இணை யில்லை. ஆனால் இறை வார்த்தை மட்டுமே போது மானது என்று விவிலிய முறைப்படி கருத இய லாது.

இறைவார்த்தை நம்மை கடவுளோடு ஒன் றிக்கின்ற மறைபொருள் அனுபவத்துக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் 2 அரசர்கள் 22, 23 அதிகாரங்களில் யோசியா என்னும் அரசர் கொண்டு வந்த சமயச் சீர்திருத்தத்தை வாசிக் கிறோம்.

இறைவார்த்தை ஒளியில் அனைத்தையும் சீரமைத்த யோசியா அதன் நிறை யில் பாஸ்கா கொண்டாட அழைப்பு விடுக்கின்றார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் இறை வார்த்தை விளக்கம் இறுதியாக பாஸ்காக் கொண்டாட்டத்துக்கு இட்டுச் சென்றுள்ளது. அதில்தான் வழிபாட்டின் முழுமை அடங்கி யுள்ளது.

புதிய ஏற்பாட்டு வழிபாடுகளும் இறைவார்த்தை வழிபாடுகளோடு நின்றுவிடக் கூடாது. அது புதிய ஏற்பாட்டுப் பாஸ்காவாகிய அப்பம் பகிரும் நிகழ்வுக்கு நிறைவாக இட்டுச் செல்ல வேண்டும்.

அதில்தான் வழிபாட்டின் முழுமை உள்ளது. ஆகவேதான் திருப்பலி கிறிஸ் தவ வழிபாடுகளின் ஊற்றும் உயிரும் உச்சமும் என்று நாம் சொல்கிறோம்.

- பேரருட்தந்தை. ஜோமிக்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளின் குரலுக்கு செவி மடுங்கள்!



விவிலிய வரலாறு ஒரு தனிப்பட்ட வரலாற்று மனிதனின் விசுவாச வாழ்வின் ஊற்றிலிருந்து தொடங்குவதை அறியமுடியும். விவிலியம் மட்டுமல்ல, உலகில் வெளிப்பாட்டு சமயங்கள் என்று போற்றப்படும் முப்பெரும் சமயங்களின் விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் மனிதர்தான் அவர். இவ்வாறு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நம்பிக்கையின் தந்தை எனப்படும் ஒரு வரின் குடும்பத்தைப் பற்றி இங்கு காண்போம். அவர் வேறு யாருமன்று, அவர்தான் ஆபிராகம் எனப்படும் நம்பிக்கையின் தந்தை. அவரது வாழ்வு எந்த அளவு இன்றைய குடும்பங்களுக்கு வழிகாட்டிட முடியும் என்பதை இங்கு காண்போம். இவரின் அழைப்பு, பயணங்கள், குடும்ப வாழ்வு பற்றிய குறிப்புகள் தொநூ 12:1-25:11 இல் காணப்படு கின்றன.

கடவுளின் அழைப்பு ஆபிராம் எனப்படும் ஆபிரகாமுக்கு வந்தது. அந்த அழைப்பில் 'புதிய நாடு கிடைப்பதாகவும் பெரிய இனமாக மாறப் போவதாகவும் கடவுளின் ஆசீருக்குரியவராக இருந்து மண்ணுலகம் அனைத்துக்கும் ஆசிராக இருக்கப் போவதாகவும்' வாக்குறுதி பெறுகின்றார் (தொநூ 12:1-3). கடவுளின் அழைப்பை உணர்ந்த ஆபிராம் தம்முடைய தந்தை மற்றும் உறவினர் வாழும் ஊர் எனப்படும் ஊரை விட்டுப் புறப்பட்டார். அப்போது அவருக்கு 75 வயது நடந் தது. கடவுளின் வாக்குறுதியை நம்பிப் புறப்படு கின்றார்.

அவருடன் அவர் சகோதரர் லோத்தும் புறப்பட்டுச் சென்றார். (தொநூ 12:4). கடவுளின் வாக்குறுதியை நம்பி கானான் நாட்டுக்கு நீண்ட பயணம் மேற்கொண்டு செக்கேமில் குடியேறினர்; அங்கு கடவுள் இரண்டாவது முறையாக காட்சி தந்து வாக்குறுதியை உறுதி செய்கின்றார். அதன்படி ஆபிராம் அங்கு பலிப்பீடம் ஒன்று கட்டுகின்றார். (தொநூ 12:6-8). ஆனால் பயணம் நெகேபு நோக்கிச் சென்றது (தொநூ 12:9).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களிக்கப்பட்ட நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் அவர் அங்கிருந்து புறப்பட்டு எகிப்துக்குச் சென்றார் (தொநூ 12:10). அங்கு தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற எண்ணிய ஆபிராம் தம்முடைய மனைவி சாராவிடம் மிகவும் கடினமான ஒன்றை நிறைவேற்ற வேண்டுகின்றார். "நீ கண்ணுக்கு அழகானவள்... எகிப்தியர் உன்னைக் காணும் பொழுது "இவள் அவனுடைய மனைவி" எனச் சொல்லி என்னைக் கொன்றுவிடுவர். உன்னையோ உயிரோடு விட்டுவிடுவர். உன் பொருட்டு எனக்கு நல்லது நடக்கவும் உன்னால் என் உயிர் காப்பாற்றப்படவும் நீ என் சகோதரி எனச் சொல்லி வீடு" (தொநூ 12:22-23). சாராவும் அதன்படி நடக்கிறார். ஆனால் சாராவின் பொருட்டு கடவுள் பார்வோனையும் அவன் வீட்டாரையும் தண்டித்தார் (தொநூ 12:17-18). அதன்பின்னர் கடவுள் அவரை மிகப்பெரும் செல்வராக்கி, கானான் நாட்டில் வாழ்வதற்கு வழி வகுத்தார்.

அவர்களின் பயணம் தொடர பெத்தேலுக்கும் ஆயிக்கும் இடைப்பட்ட இடத்தில் வந்து குடி யேறினர். அவர்களின் சொத்தும் ஆட்டு மந்தையும் மாட்டு மந்தையும் அதிகமாயின. இதனால் காலப்போக்கில் லோத்துவின் ஆட்களுக்கும் ஆபிராமின் வேலை ஆட்களுக்கும் தகராறு ஏற்பட்டது (தொநூ 13:7). சகோதரர் உறவில் நிலைத்திருக்க ஆபிராம் நல்ல ஆலோசனை ஒன்றை லோத்துவிடம் கூறுகின்றார். அதன்படி லோத்துவும் மிகவும் வளமான பூமியான கிழக்குப் பகுதியைத் தேர்ந்தெடுத்து சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்து வாழ்ந்து வந்தார் (தொநூ 13:13).

வளமான பூமியை இழந்த நிலையில் கடவுள் மூன்றாம் முறையாக ஆபிராமுக்குத் தோன்றி அவரை உறுதிப்படுத்தி தாம் ஏற்கனவே முன்பு தந்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதாகக் கூறுகின்றார். அதன்பின்னர், ஆபிராம் புறப்பட்டு எபிரோனிலிருந்த மம்ரே என்ற கருவாலி மரத்தோப்பருகில் வந்து வாழ்ந்தார் (தொநூ 13:14-18). அவரின் அனைத்துப் பயணத்திலும் வழிகாட்டிய ஆண்டவருக்குப் பலிப்பீடம் கட்டி வழிபட்டார்.

**கற்றுக் கொள்ள வேண்டிய குடும்ப மதிப்பீடுகள்**

**அ. கடவுளின் குரலுக்குச் செவிமடுங்கள்**

ஆபிராம் தம்முடைய எழுபத்தி ஐந்தாவது வயதிலும் கடவுளின் வாக்குறுதியை நம்பிப் புறப்பட்டார். அவர் கடவுளின் குரலுக்குச் செவி சாய்த்தார். அவர் மட்டுமல்ல அவருடைய மனைவி சாரா, அவருடன் இருந்த பணியாளர்கள். அத்தோடு நின்றுவிடாது அவரின் சகோதரர் லோத்துவும் அவரின் பணியாளர்களும் கடவுளின் குரலுக்குச் செவி சாய்த்தனர்.

எனவே தான் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் ஆபிரகாமைப் பற்றிய குறிப்பை இவ்வாறு காண்கிறோம். "ஆபிரகாம் அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து, உரிமைப்பேறாகப் பெறவிருந்த இடத்துக்குச் சென்றது நம்பிக்கையினால்தான். தாம் எங்கே போக வேண்டும் என்று தெரியாதிருந்தும் அவர் புறப்பட்டுச் சென்றார்" (எபி 11:8). கடவுள்மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த நம்பிக்கையால் பயணங்கள் பல மேற்கொண்டு சென்ற இடங்களில் எல்லாம் கடவுளின் குரலுக்குச் செவிசாய்க்கும் வகையில் கடவுள் கொடுத்திருந்த வாக்குறுதியில் நம்பிக்கைத் தளராது வாழ்ந்து வந்தார். எனவே, அருமையான குடும்ப நண்பர்களே, உங்கள் குடும்ப வாழ்வில் வெற்றி நடை போட வேண்டும் என்றால், கடவுளின் குரலுக்குச் செவி சாய்த்துப் பாருங்களேன்.

**ஆ. தனியாக இருக்கப் போவதில்லை**

கடவுளின் குரலுக்குச் செவிசாய்க்கும் எவரும் தனியாக விடப்படுவதில்லை. அதாவது கடவுளின் அழைப்பை ஏற்றுப் பயணித்த ஆபிரகாமுக்கு பயணம் நிறைவடையும் வரை லோத்து அவருடன் இருப்பதாக தொடக்க நூல் ஆசிரியர் எடுத்தி யம்புகிறார். இங்கு திபா 34:6இல் வரும் இறைவசனத்தை நினைவுகூர்வது நல்லது. "இந்த ஏழை கூவியழைத்தான். ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார். அவர் எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்துக் காத்தார்".

கடவுளை நம்பும் குடும்ப வாழ்க்கை தனிப்படுத்தப்பட்ட குடும்ப வாழ்க்கையாக அமையாது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. அதாவது, அருமையான குடும்பங்களே, உங்கள் வாழ்வில் இறைவனின் குரலுக்குச் செவி சாய்த்துப் பாருங்கள். உங்களின் எல்லாப் பிரச்சினைகளிலும் கடவுள் உங்களுடன் துணையிருப்பார்.

- அருட்தந்தை இரா. மரிய டெல்லஸ்

**பொன்மொழி**

★ சென்ற பாதையில் மட்டுமே செல்வது மனதின் பலவீனத்தைக் காண்பிக்கிறது. ஏனெனில் புதிய வழிகள் பற்றிய பயம் பழையதையே ஒட்டிக் கொள்ளச் செய்கிறது. காலம் மாறிக் கொண்டே இருக்கிறது. மாற்றங்களுக்கு ஏற்ப நமது வழிமுறைகளையும் மாற்றுவது கட்டாயமாகிறது.

*- புனித மதலேன் சோபி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றுபோல் இன்றும் அற்புத அதிசயங்கள் நிகழ்த்தும் ஆண்டவர்!

## தெய்வீக அதிசயங்கள்

இயேசுபிரான் இப்பூமியில் வாழ்ந்தவரை தம்மை அணுகிய அனைத்து மனிதர்களுக்கும், அவர்களின் துன்பங்களையும் நோய்களையும் போக்கி அதிசயப்படும் வகையில் அற்புத சுகங்களை அளித்தார். இயேசுபிரான் புவியில் வாழ்ந்த குறுகிய காலத்தில் சொஸ்தப்படுத்தப்பட்ட மனிதர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. சமுதாயத்தின் பார்வையில் சபிக்கப்பட்டவள் என ஒதுக்கி வைக்கப்பட்ட விலை மாதுவிற்கும்கூட மனம் இரங்கி மிகுந்த கருணையுடன் நோயை குணப்படுத்தினார். இறந்தோரை உயிர்ப்பித்தார், முடம் நீக்கி அருளினர், அந்தகருக்குப் பார்வை அளித்தார், தொழுநோயை சொஸ்தப்படுத்தினார். கானாவில் நடந்த ஒரு திருமணத்தில், வந்திருந்த மக்களின் நன்மைக்காக அன்னையின் உளம் அறிந்து சாதாரணத் தண் ணீரை திராட்சை ரசமாக மாற்றி அருள்புரிந்தார். மனிதர்களில் ஏழை தனவந்தர் என்ற தகுதியேதும் பாராமல் துயரத்தில் வருந்திய அனைவருக்கும் கருணைகாட்டி உடல் சுகத்தையும், மன அமைதியையும் அளித்தார். மனிதர்களுக்கு மனமிரங்கியதோடல்லாமல். அத்தியாவசியமான ஒருசில நேரங்களில் புயலைக் கட்டுப்படுத்துவது முதலிய செயல்களைப் புரிந்து இயற்கையையும் தன் கட்டளைக்குக் கீழ் கொண்டுவந்தார். நீரின் மேல் நடத்தல், ஒரே நேரத்தில் ஐயாயிரம் நபர்களுக்கு அப்பம் வழங்கி அவர்களின் பசியைப் போக்குதல் போன்ற அற்புதமான அதிசயங்களைச் செய்து தான் இறைமகன், தன்னால் விசுவாசிகளுக்குத் தேவையான எல்லாவற்றையும் அன்போடும் கருணையோடும் வழங்க முடியும் என்றும் நிரூபித்தார். கெட்ட ஆவியின் ஆக்ரமிப்பால் பதினெட்டு வருடங்கள் கூனிக்குறுகிப் போயிருந்த ஒரு பெண்ணைத் தனது நற்கருணையால் குணமாக்கினார். ஒருவரின் நோயை குணப்படுத்துவதற்காக எவ்விதப் பிரதியுபகாரமும் எதிர்பார்க்கக் கூடாது என வலியுறுத்தினார். தானும் அவ்வாறே இறுதிவரை கைமாறு கருதாத கருணையை நம்பிக்கையாளர்களிடத்தில் வெளிப்படுத்தினார். இவ்வுலகில் இயேசுவைப் போல் விசுவாசிகளுக்கு அன்பைப் பொழிந்து, தேவையறிந்து, சேவைகள் செய்த தேவபுருஷர்கள் மிகச் சிலரே இருந்துள்ளனர்.

கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் இயேசு இன்றும் நம்மோடு வாழ்கின்றார் என்று கூறுவதற்கு ஒரு அரிய காரணம் இருக்கவே செய்கின்றது. நான் மூன்றாம் நாள் உயர்ந்தெழுவேன் எனச் சொல்லி அவ்வாறே செய்த கர்த்தர், நான் மரித்தபின்பும் உங்களோடிருந்து உங்களுக் கானதைத் தருவேன் என்று வாக்குத்துத்தம் தந்தது போல், இன்றும் ஆண்டவர் உலகெங்கிலும் இருக்கின்ற உண்மை விசுவாசிகளுக்கு அவர்கள் வேண்டுவதை உணர்ந்து ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் அளப்பரிய அன்புடன் தந்தைப் பாசத்துடனும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வாசிப்பாளராக இருக்கும் ரோஜர் போல்டன், இயேசுவின் அதிசய குணப்படுத்தலைப்பற்றி விவரிக்கும் பொழுது, மனிதர்களாலும், மருத்து வர்களாலும் முற்றிலும் புரிந்து கொள்ளமுடியாத வகையில், ''சோரியாட்டிக் ஆர்த்ரிட்டிஸ்'' எனும் கொடிய நோயால் பாதிக்கப்பட்டிருந்த எஸக்ஸைச் சார்ந்த கட்டிபிரிங் என்னும் பெண் மணி பல ஆண்டுகளாக செய்த சிகிட்சைகளும் பயனின்றித் தவித்த போது, நோய் குணப்படுத்தல் மன்றாட்டுக் கூட்டத்துக்குச் சென்று மனமுருகி இயேசுவை வேண்டி ஜெபித்தபோது அவரது பதினொரு வருட வியாதி உடனடியாகக் குறைந்தது என்றும் பின்னர் அதிசயிக்கத்தக்க வகையில் முழுவதுமாகக் குணமடைந்துவிட்டது என்றும் கண்ணீர் மல்கக் கூறியதாகத் தெரிவிக்கின்றார். ''ஞாயிறுக் கிழமை காலை மருந்துகளின் மேல் நம்பிக்கையிழந்து, வாழ்க்கையில் பற்றே இன்றி இயேசுவே கடைசி வழி என குணப்படுத்தல் கூட்டத்துக்கு நடக்கமுடியாமல் சிரமப்பட்டுச் சென்றேன். ஆனால் அதே நாள் மதியத்தில் எனது கால்மூட்டு வீக்கங்களெல்லாம் குறைந்து நடக்க நன்றியுடன் முடிந்தது என்றார் அந்தப் பெண் மணி.

–அவி

### ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே, நீர் எனக்கு ஆதரவு அளிக்கின்றீர்.

உமக்கு நன்றி

★ நாள்தோறும் ஆண்டவரே, நீர் உமது பேரன்பைப் பொழிகின்றீர்.

உமக்கு நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பெண்மணி ஜோன் ஆஃப் ஆர்க்

சிறுவர் பகுதி



பிரான்ஸ் நாட்டில் எளிமையான ஒரு குடும்பத்தில் , பிறந்து வளர்ந்து ஆடு மேய்த்த ஒரு சாதாரண இளம்பெண் தான் ஜோன் ஆஃப் ஆர்க். இவள் கடவுளை மிகவும் அன்பு செய்தாள்.

தனது நாடு சுதந்திரமாக, வலிமையாகத் திகழவேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். அப்போது, பிரான்ஸ் நாடு ஆங்கிலேயரோடு போரிட்டுக் கொண்டிருந்தது. ஆங்கிலப் படை எங்கும் வெற்றிபெற்றுக் கொண்டேயிருந்தது.

அவ்வேளை வானதூதர்களும் புனிதர்களும் ஜோனிடம் ''நீ செல், உனது நாட்டைக் காப்பாற்று'' எனக் கட்டளையிட்டனர். ஆரம்பத்தில் அவளுக்கு அச்சமாக இருந்தது. ஆனால் ஆண்டவர் விரும்புகிறார் என்று ஜோனுக்குத் தோன்றியது.

எனவே படைவீரர் உடையை அணிந்தார்; குதிரை மீது ஏறினார்; போர்க்களத்துக்குள் பாய்ந்தார்.

பிரான்ஸ் நாட்டு அரசன் தன் கிரீடத்தைக்கூட இழந்திருந்தான். அவனது படைகள் பயந்து போயிருந்தன. ஆனால், ஜோன் அவர்களையெல்லாம் வெற்றியை நோக்கி வழி நடத்தினார்.

அரசனுக்கு அவனது அரண்மனையிலேயே மணிமுடி சூட்டினாள். ''எனது வேலை முடிந்து விட்டது; எனது ஆடுகளைத் தேடி நான் மீண்டும் செல்கிறேன்'' என்று சொன்னாள்.

ஆனால் அரசன் அவளைப் போகவிடவில்லை; அதற்கு மாறாக, அவளுக்கு எதிராக இருந்தவர்கள், அவளது பகைவர்கள் அவளைப் பிடித்துச் செல்ல வழிவகுத்தனர்.

அவளது எதிரிகளோ அவளைக் கூர்முனை கொண்ட ஒரு மரக்கழியில் வைத்து, உயிரோடு எரித்துக் கொன்றனர். ஜோனின் ஆன்மா நேரே ஆண்டவரிடம் பறந்தது.

**பாடம்: எனது தேசம் காக்க எந்த வயதிலும், எதற்கும் நான் தயாராக இருக்க வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறியவரான என் சகோதரர்!

சிறுவர் பகுதி

1984ஆம் ஆண்டு, ஆந்திராவில் உள்ள குண்டூர் பட்டணத்தில் நடந்த, ''இயேசு அழைக்கிறார்'' கூட்டத்தில் மேடையில் சாட்சி சொல்ல வருபவர்களை விசாரித்து, மேடைக்கு அனுப்பும் பணி எனக்குக் கொடுக்கப் பட்டது. முதல் நாள் மாலைக்கூட்டத் தில் சகோ. தினகரன் ஜெபித்து முடித்த உடனே, ஒரு வயதான பெரியவர் (ரங்காரெட்டி) நொண் டிக் கொண்டே, என்னிடம் வந்து,

''நைனா, எனக்காகப் பிரார்த்தனை செய்யுங் கள்'' என்றார்.

''நான் இங்கு ஜெபிக்க முடியாது, கூட்டத் திலுள்ள வேறு கவிசேஷகர்களிடம் சென்று ஜெபித்துக்கொள்'' என்று சொன்னேன்.

அவரோ விடாப்பிடியாய்,

''இல்லை, நீங்க நான் ஜெபிக்கணும், நான் வேறு யாரிடமும் போக மாட்டேன்'' என்றார்.

சரி போகட்டும் என்று நினைத்து, வேண்டா வெறுப்பாய் ஜெபித்து அனுப்பி னேன். மறு நாளும் வந்தார். அவரது கால்கள் வீங்கி, கோலை ஊன்றி நடந்து வந்தார்.

''அன்பும் மனவுருக்கமும்'' நிறைந்து ஜெபிக்க வேண்டிய ஊழியக்காரனாகிய நான், எரிச்சலோடும் ஏனோ தானோவென்றும் ஜெபித் தேன். இப்படியாக ஒவ்வொரு நாளும் வந்து என்னை ஜெபிக்கக் கேட்டார். சுகமாகவும் இல்லை. என்னை விடவும் இல்லை. கடைசி நாள் இரவும் என்னிடம் ரங்காரெட்டி வந்தார். நானும் வழக் கம்


## பொன்மொழிகள்

★ நாம் எதை அன்பு செய்கிறோமே அது வாக மாறுகிறோம். பொருட்களை அன்பு செய்தால் அப்பொருட்களாக ஆகிறோம். அதுபோல் இயேசுவை அன்பு செய்யும் போது இயேசுவாக மாறுவோம்.

- புனித கிளேர் அசிசி

★ நம்முடைய குற்றம் குறைகளையெல் லாம் சுத்திகரிக்கும் நெருப்பான அன்பில் போட்டு விட்டால் அவை எப்படிச் சாம்பலாக அழியாது இருக்கும்?

- புனித சிறுமலர் தெரசா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல விருப்பமில்லாமல் ஜெபிக்க, அவர் தலை மேல் கை வைத்தேன்.

ஒரு பெரிய ''ஷாக்'' அடித்தது. ரங்கா ரெட்டியை அந்த இடத்தில் காணோம். அவரது இடத்தில் ஆண்டவராகிய என் இயேசு பிரகாசமான ஒளியில் என் முன்னால் நின்றிருந்தார். என் கை ஆண்டவரின் தலை மேல் இருந்தது. என்னையறியாமல் கதறினேன். துடித்துப் போனேன்.

''ஆண்டவரே மன்னியும், மன்னியும் எனக் குமுறி அழுதேன்.'' மன்றாடினேன். அப்போது என் ஆண்டவர், மத்தேயு 25:40 இல் உள்ள வசனத்தைச் சொல்லி மறைந்தார். ''மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களின் ஒருவனுக்கு நீ எதைச் செய்தாயோ, அதை எனக்கே செய்தாய்.''

லூக்கா 16:19-31 இல் காணும் ஐசுவரியவான், தன் வாசலருகே கிடந்த லாசரை விசாரிக்கவில்லை. உலகப்பிரகாரமாக வாழ்ந்தான். பூமியிலே நன்மைகளை அனுபவித்தான். மறு உலகத்துக்கான கிரியைகளையொன்றும் செய்யவில்லை. வீட்டுக்கு உள்ளே செல்லும் போதும், வீட்டிலிருந்து வெளியே செல்லும் போதும், வாசலருகே கிடந்த தரித்திரன் லாசரின் பரிதாபமான நிலையை கண்டபொழுது, அவன் மனசாட்சி உறுத்தியது. மனச்சாட்சியை அவன் அடக்கிப் போட்டான். அதனால் அவனது முடிவு பாதாளத்தில் போய்விடிந்தது.

பசி, தாகமுள்ளோரும், அந்நியரும், ஆடையற்றோரும், நோயாளரும், காவலில் இருப்போரும் என் இயேசுவின் சகோதரர்கள். அவர்களை விசாரிக்கும்போது, உதவும் போது, கை

## பேசும் முகம்

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' இது பழமொழி. இதோ இங்கிருக்கிறது₹, பார், இயேசுவின் முகம்! இயேசுவின் எத்தனையோ முகங்களை நாம் பார்த்திருக்கிறோம். ஒவ்வொன்றும் ஆழமான ஒரு செய்தியை நமக்கு வழங்குகிறது.

இயேசுவின் இந்த முகம் உங்களுக்கு என்ன சொல்கிறது? 'சீரியசாக', உள்ளத்தை ஊடுருவுவதாக, இரக்கமுடையதாக, ஆறுதல் தருவதாக, ஏங்கிக்கொண்டிருப்பதாக, பாசமுள்ளதாக, எளிமையானதாக, சாந்தமுள்ளதாக.... எப்படி?

இம் முகம் என்னில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறதா?

உங்கள் முகம் இயேசுவின் இன்னொரு முகமாக மாறட்டும்!



அன்றிரவு ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்த முதல் நபர் இந்த ரங்காரெட்டி தான். கால் வீக்கம் நீங்கி, கைகளை வீசிக்கொண்டு வந்து, ''நமஸ்காரம் நைனா'' என்றார். ஆண்டவருக்கு நன்றி. கர்த்தரின் கிருபையால் பூரண சுகம் பெற்றிருந்தார். அன்று முதல் என் ஊழியப் பாதை மாறியது. எனது ஜெப வாழ்க்கை மாறியது. கற்றுக் கொடுத்தவருக்கு கோடான கோடி நன்றி. குடிசைப் பகுதியிலும், ஏழை எளிய மக்களிடமும், நோயாளியிடமும் சென்று ஜெபிக்கும்போது அந்த சிறியவராகிய என் இயேசுவின் சகோதரரிடம், இயேசுவின் முகத்தையே இன்றும் காண்கிறேன்.

கொடுத்து அரவணைக்கும்போது, கர்த்தர் மனமகிழ்வார். ''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' (மத்.25:34).

''சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்'' (சங்.41:1).

- கவி.தாமஸ் ஆதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வரலாறு



## கொழும்பு செக்கட்டித்தெரு

# புனித அன்னம்மாள் ஆலயம் !

சுவக்கீன் என்றால் 'ஆண்டவரது தயாரிப்பு' என்பது பொருள். அன்னா என்றால் 'இறைவனது அருள்' என்று பொருள்.

அன்னம்மாள் பெத்லகேமில் பிறந்தார். நாசரேத்தில் வாழ்ந்த சுவக்கீன் என்பவரை மணந்தார். இருவரும் தாவீது அரசருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நெடுங்காலமாக குழந்தை இல்லை. பிறகு மரியாள் பிறந்தார். மரியாளுக்கு மூன்று வயதானதும் தேவாலயத்துக்குச் செல்லும்படி அவரைக் கடவுள் அழைத்தார்.

சுவக்கீனும் அன்னம்மாளும் தியாக குணம் படைத்தவர்கள். நெடுங்காலமாய் தவம் இருந்து கடவுளை மன்றாடிப் பெற்றெடுத்த அழகிய குழந்தையைக் கடவுளுக்கு இவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

திருச்சபையில் பெருங்காலத்துக்கு முன்பிருந்தே புனித அன்னம்மாளை விசுவாசிகள் வணங்கி வந்திருக்கிறார்கள். இவரின் பெயரில் கோவில்கள் கட்டப்பட்டன. கிழக்கத்திய திருச்சபையின் பிதாப்பிதாக்கள் இவரது பரிசுத்த தனத்தைப் பற்றியும் இவர் பெற்ற வரங்கள் பற்றியும் அழகாகக் கூறியிருக்கிறார்கள். நான்காம் நூற்றாண்டில் புனித சுவக்கீன் பெயரில் எருசலேமில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.

புனித அன்னம்மாள், இறைவனின் தாயான அன்னை மரியாளின் தாயாராவார். இறைவனின் அன்னையை தன் வயிற்றில் சுமக்கும் பேறு பெற்றவர். இவர் அன்னையர்களுக்கும், குடும்பத்துக்கும் பாதுகாவலராக இருக்கிறார். உலகெங்கும் இவரது திருவிழா ஜூலை மாதம் 26 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

இலங்கையில் தலவில்லு புனித அன்னம்மாள் ஆலயம் பிரசித்தி பெற்றது. அது போலவே கொழும்பு, செக்கடித்தெரு புனித அன்னம்மாள் ஆலயமும் சிறப்பு வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று சிறப்பு வாய்ந்த இந்த ஆலயம், ஆரம்ப காலத்தில் கொழும்பு புறக்கோட்டைப் புனித பிலிப் நேரியார் ஆலய நிர்வாகத்தின் கீழ்தான் பரிபாலனம் செய்யப்பட்டது. அந்நாட்களில் அவ்வாலயத்தைச் சேர்ந்த அருதந்தையர்கள், பூசை பரிசாரகர்கள் அங்கிருந்து வந்து வழிபாடுகளை நடத்தி வந்தனர்.

பின்னர் இவ்வாலயம் கைவிடப்பட்டு, பாழடைந்த நிலையை அடைந்தது. அப்பொழுது கொட்டாஞ்சேனை மேற்றிராசனத்தின் பிரதம பங்குத்தந்தையாக அருட்பணியாற்றிய அருட்திரு லூசியன் சுமித் அடிகளார் ஆலயத்தை திருத்தியமைக்கத் தீர்மானித்தார்.

அதன்படி, அன்று பேராயராக இருந்த கருதினால் தோமஸ் குரே ஆண்டகையின் அனுமதியுடன் தன் சொந்த செலவில் அருட்தந்தை அவர்கள் ஆலயத்தைத் திருத்தியமைத்தார். 1967 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி, புனித அன்னம்மாள் திருநாள் தினத்தன்று அருட்தந்தை மைக்கல் சவரிமுத்து அடிகளாரிடம் ஆலயம் கையளிக்கப்பட்டது.

நாளடைவில் புனித அன்னம்மாள் ஆலயம், கொழும்பின் தனித் தமிழ் பங்காக மிளிர்ந்தது.

அதன் முதல் பங்குத் தந்தையாக அருட்திரு மைக்கல் சவரிமுத்து அடிகளார் அருட்பணியாற்றினார். சுமார் 15 வருடங்கள் இவரது அருட்பணி நீடித்தது. இவ்வாலயத்தில் கூடிய காலம் சேவையாற்றியவரும் இவரே.

இவரைத் தொடர்ந்து 1982ஆம் ஆண்டு அருட்தந்தை ஒகஸ்டின் பெர்னாண்டோ அடிகளார் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றார். தனது குரல் வளத்தினால் திருவழிபாடுகளுக்கு மெருகூட்டி செக்கடித் தெரு பங்கை பக்திமார்க்கத்தில் வளர்த்தெடுத்தார். அருட்தந்தை ஒகஸ்டின் அடிகளார் வெளிநாடு சென்றிருந்த சமயம் அருட்தந்தை சாந்திகுமார் அடிகளார் ஒரு சில மாதங்கள் பங்கை வழிநடத்தினார்.

தொடர்ந்து 10 வருடங்கள் அருட்தந்தை ஒகஸ்டின் பெர்னாண்டோ அடிகளார் அருட்பணியாற்றினார். அவரையடுத்து 1992 ஆம் ஆண்டு அருட்தந்தை மத்தேயு அடிகள் பங்கு தந்தையாகப் பொறுப்பேற்றார்.

அருட்தந்தை மத்தேயு அடிகளாரின் அருட்சேவை ஏழு ஆண்டுகளே நீடித்தது. 1999 ஆம் ஆண்டு அருட்தந்தை கிறிஸ்டி அடிகளார் ஆலயத்தின் பங்குத் தந்தையானார். ஒரு வருடம் மட்டுமே அவர் சேவையாற்றினார்.

அதன் பின்னர், அருட்தந்தை பீற்றர் சுபராஜ் அடிகளார் 2000 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றார். பங்கைச் சேர்ந்த இரண்டு ஆலயங்களையும் ( புனித அன்னம்மாள் - அன்னை வேளாங்கண்ணி) புதிதாக நிர்மாணம் செய்து, பங்கு மக்களுக்கு அர்ப்பணித்த பெருமை இவரையே சாரும். எமது முதல் பங்குத் தந்தை மறைந்த அருட்திரு மைக்கல் சவரிமுத்து அடிகளாரின் நினைவாக ஒரு மண்டபமும் அமைத்துக் கொடுத்தார்.



தொடர்ந்து 10 வருடங்கள் அருட்பணிபுரிந்த அருட்தந்தை பீற்றர் சுபராஜ் அவர்களைத் தொடர்ந்து, 2010 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி புதிய பங்குத் தந்தையாக அருட்தந்தை பிரகாஷ் பெர்னாண்டோ அடிகளார் பொறுப்பேற்று பங்கை வழிநடத்தி வருகின்றார்.

இவரது அருட்பணியில், புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழா கடந்த 29ஆந் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

**சிந்தனை** : புனிதர்களான சுவக்கீன் - அன்னம்மாளைப் போன்று கடவுளுக்காக, நாம் நேசிக்கும் இடம், பொருள், ஆட்களைத் தியாகம் செய்வதற்கான தைரியத்தைக் கேட்டு மன்றாடுவோம்.


**செபம்** : ஆண்டவரே, தியாக மனப் பான்மையை எங்கள் அனைவருக்கும் தாரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ஆரோக்கிய அன்னையின் மோட்சத் திருநாள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேளாங்கண்ணி அன்னையின் மிகப் பெரும் சிறப்பு என்ன தெரியுமா? கத்தோலிக்க ஆலயங்களில், மாதாவுக்கு மேனாட்டு முறையின் படியான ஆடை தான் அணிவித்திருப்பார்கள், இல்லை அப்படித் தான் திருச்சுரூபமும் வடிக்கப்பட்டு இருக்கும்!

தமிழ் முறையின்படி, சேலை அணிவித்துக் காட்சி தரும் மாதாவின் உருவம் வேளாங்கண்ணி அன்னை!

முகம் பொழி கருணை! அப்படி ஒரு கருணைக் கடாட்சமான கண்கள் அன்னையின் கண்கள்!

வேளாங்கண்ணிக்கு வரும் பக்தர்களில், மாற்று மதத்தினர் தான் அதிகம்! எல்லா மதத்தினரும் உள்ளன்போடு வந்து பிரார்த்திக்கும் இடம் வேளாங்கண்ணியின் ஆரோக்கிய மாதா ஆலயம்தான்.

அமைதி அமைந்தாலே போதும், தானாகவே சேவிக்க வருவார்கள் என்பதற்கு வேளாங்கண்ணியே சாட்சி! திருமுகத்தின் அமைதி ஒன்றே அன்னையை ஆயிரம் முறை காணச் சொல்லும்!

அன்னையின் திருப்பெயர் என்னவோ ஆரோக்கிய மாதா (Our Lady of Good Health) என்பது தான்! ஊரின் பெயரால் வேளாங்கண்ணி மாதா என்றே ஆகி விட்டது!

அன்னையின் முதல் தோற்றத்துக்கும் காரணம் ஒரு இந்துச் சிறுவன் தான்.

ஆயர்குலச் சிறுவன் (பால்காரப் பையன்) ஒருவன், குளக் கரையில் உள்ள ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருக்க, அவன் முன் அன்னை தோன்றினாள்!



தன் கைக்குழந்தைக்குக் கொஞ்சம் பால் தர முடியுமா என்று அவனைக் கேட்க, அவனும் தயங்காது கொடுத்து விட்டான்! பின்னர் பால் கொடுக்கும் வீட்டுக்குச் சென்று பால் ஊற்றிவிட்டு, பால் குறைந்ததற்கான காரணத்தையும் அந்த இந்து முதலாளியிடம் சொன்னான். ஆனால் பானையில் எட்டிப் பார்த்தாலோ, பால் பொங்கித் தளும்பிக் கொண்டிருந்தது!

இருவரும் விடுவிடுவென்று மீண்டும் ஆலமரத்துக்கு வந்து பார்க்க, அங்கே அன்னை மீண்டும் தோன்றினாள்! அவள் தோன்றிய மாதா குளம் இன்றும் உள்ளது!

போர்த்துகீசிய மாலுமிகள் சிலர் கடல் சூறாவளியில் இருந்து காப்பாற்றப்பட்டு, அன்னைக்கு நிரந்தரமான ஆலயம் எழுப்பினர் என்பது தான் தல வரலாறு!

தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், கொங்கனி என்று ஏழு மொழிகளில் திருப்பலி ஒப்புக்கொடுக்க ஒரே ஆலயம் இது மட்டுமாகத்தான் இருக்க வேண்டும்!

மாரியம்மனுக்குச் செய்யும் வழிபாடுகள் - மொட்டை போடுதல், கண்மலர் சார்த்தல், உடல்மலர் சார்த்தல், அங்கப் பிரதட்சிணம் செய்தல், முட்டிபோட்டு நடத்தல் - இவை அத்தனையும் அன்னை வேளாங்கண்ணிக்கும் செய்யப்படுகின்றன!

தேவமாதா மோட்சத்துக்கான திருநாள் இவ்வாண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதியில் அமையப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விசுவாச ஜெபத்தால் பிசாசுகளைத் துரத்தலாம் (மத்.17:14-21). ஒரு வாலிபன் பிசாசினால் ஆட்கொள்ளப் பட்டு வேதனைப்பட்டான். இயேசு வின் சீடர்களால் அந்தப் பிசாசைத் துரத்த முடிய வில்லை. பின்பு இயேசு அந்தப் பிசாசை அதட்டினார். உடனே அது அவனைவிட்டுப் புறப்பட்டுப் போயிற்று. எங்களால் ஏன் அதைத் துரத்த முடியவில்லை என்று இயேசுவிடம் கேட்டபோது... இயேசு இரண்டு காரியங்களைக் குறிப்பிட்டார்.

**1) விசுவாசம் 2) உபவாச ஜெபம்**

அதற்கு இயேசு: ''உங்கள் அவிசுவா சத்தி னாலே தான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலை யைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத் தினாலுமேயன்றி மற்றொரு விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது'' என்றார் (மத்.17:20, 21)

**விசுவாசத்தால் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளலாம்**

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு; ''ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக் கடவன்.

வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத் தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன் னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்பட வில்லை (யோவான் 7:37-39).

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வது பெரிய சிலாக்கியம். அநே கர் இதன் மேன்மையை, அவசியத்தை உணர் வதில்லை. ஏதோ பல பாஷைகளைப் பேசுவதற் காகத் தானே இது என்று அலட்சியமாய் எண்ணி விடுகின்றனர்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எண்ணெ யால் அபிஷேகம் பண்ணப்படுதல் என்பது ஒரு பெரிய சிலாக்கியம். தேவனுடைய ஊழியத் தைச் செய்த ஆசாரியர்கள், தேவனுடைய வார்த் தையைப் பிரகடனப்படுத்திய தீர்க்கதரிசி கள், தேவனுடைய அதிகாரத்தைப் பெற்று ஆட்சி செய்த அரசர்கள் மட்டுமே எண்ணெயால் அபி ஷேகம் பண்ணப்பட்டு அந்த உத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்டனர். புதிய ஏற்பாட்டுக் காலத் திலே பெறும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிசாசுகளைத் துரத்தும் விசுவாச ஜெபம்...



துக்கு முன்னடையாளமாகத் தான் பழைய ஏற்பாட்டுக் காலத்திலே எண்ணெய் அபிஷேகம் கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் ஒருவர் ஆவியான வரின் பெலனைப் பெற்று கர்த்தருக்கு வல்லமை யான சாட்சியாக விளங்குகிறார் (அப்.1:8), இந்த அனுபவத்தை விசுவாசத்தின் மூலமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

**விசுவாசத்தினாலே பிள்ளைப் பாக்கியம் பெறுதல்**

'விசுவாசிகளின் தகப்பன்' என்று அழைக்கப்படும் ஆபிரகாம் தேவன் வாக்குப்பண்ணிய குமாரனை 100 வயதில் பெற்றுக்கொண்டார். அப்போது சாராளின் வயது 90. வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் உன் சந்ததி பெருகும் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்று நீண்ட ஆண்டுகள் அதன் நிறைவேறுதலுக்காகக் காத்திருந்தார்கள்.

பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டிராத காலத்திலே வாழ்ந்தவர் பரிசுத்தவான் ஆபிரகாம். இன்றிலிருந்து சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த இந்த விசுவாச வீரன் கர்த்தர் தனக்கு வாக்குப் பண்ணினதை விசுவாசிப்பதற்கு எத்தனையோ தடைகள் ஏற்பட்டபோதிலும் சோர்ந்து போகவில்லை. விசுவாசத்தில் தளர்ந்து போகவில்லை, கர்த்தரை சந்தேகிக்கவில்லை.

அவர் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (ஆதி. 15:6)

விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்ற வளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்.

ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலே பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள் (எபி.11:11, 12).

ஒரு விசுவாசியினுடைய வாழ்வில் விசுவாசம் கனியாக வெளிப்பட்டு கர்த்தரிடம் நன்மைகளைப் பெற்று வாழும் வாழ்க்கையைக் குறித்துப் பார்த்தோம். நாமும் விசுவாசத்துடன் வாழ்வோம்.

– பி.எஸ். ராஜமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயப்படுத்தாதீர் அடுத்தவர் இதயத்தை!



பர்னபாஸ் இல்லத்தில் இன்று திரு இருதய படஸ்தாபகம் புதுப்பிக்கப்படு கிறது. எளிமையான விதத்தில் வீடு அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளே பத்து பேர் அமரலாம். இடமில்லாத வர்கள் அமர வராந்தாவில் பாய் விரிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியின் அன்பியப் பொறுப்பில் உள்ள நால்வர் வந்திருந்தனர். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பங்குத்தந்தை உள்ளே வந்தார். பர்னபாஸ் அவரை வர வேற்றார். அவர் மனைவி குருவான வர் முன் முழந்தாளிட்டு சிலுவை வாங்கிக்கொண் டார்.

''பத்து நிமிடத்தில் பிள்ளைகள் வந்து விடுவார்கள்... டியூசன் வகுப்பில் இருந்து சீக்கிரமாக இன்று திரும்பி விடுவார்கள். நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். அலுவலகத்திலுள்ள ஒருவரிடம் செல்லில் பேசி விட்டு வருகிறேன்'' என்ற பர்னபாஸ் மொட்டை மாடிக்குப் போனார்.

பர்னபாஸின் பிள்ளைகள் டியூசன் வகுப்பிலி ருந்து வந்து முகம் கழுவி பவுடர் போட்டு, அறைக்குள் வந்து அமர்ந்தனர்.

அன்றைய நற்செய்தி, திரு இருதய மன்றாட்டு செபங்களை வாசிப்பதற்கு பிள்ளை களுக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார் குருவான வர். போன் பேசி முடித்த பர்னபாஸ் மன்னிப்புக் கேட்டபடி உள்ளே வந்தார்.

''சாமியார் காத்துக்கிட்டு இருக்கார்ல? அப் படி என்ன தலைபோற காரியம்? அப்புறமாப் பேசலாம்ல!''

''ஆஃபீசுக்கு நாளைக்கு ஆடிட்டர் வருவார். கணக்கு வழக்குகளை சரிபார்த்து வைக்கும்படி அக்கவுண்டண்ட் அம்மாவிடம் சொல்லியிருந் தோம். நேற்று ஏதோ அவசரம்னு சொல்லி லீவு எடுத்தாங்க. வேலையை முடிச்சுக் குடுக்க ணும்னு அக்கறை வேணுமில்லை? இதனால் மத் தவங்களுக்கும் வேலைக்குத் தடங்கல்... மத்தி யானம் அவங்களை தனியே வரவைச்சு கடு மையா திட்டினேன். வேலையை முடிச்சுக் கொடுத்திட்டு வீட்டுக்குப் போனாப் போதும்னு சொல்லிட்டேன்.

வீட்டுக்கு வந்தபிறகு யோசிச்சுப் பார்த்தேன். வீட்டிலேயும் குடும்பத் தலைவி என்கிற நிலை யில் அவங்களுக்குப் பல வேலைகள் இருக் கலாம்... இரண்டு பக்கமும் அவங்களுக்கு வேலைச்சுமை! வேலை முடியலையேங்கிற கோபத்தில் நானும் அவங்க நிலையை சரியா புரிஞ்சுக்காமப் பேசிட்டேன்.

இப்ப அவங்களுக்குப் போன் போட்டு, மன்னிப்புக் கேட்டேன். ஆஃபீசில் மத்தவங் களை நாளை காலையில் கொஞ்சம் சீக்கிரமா வரச் சொல்லி, பத்து மணிக்குள் வேலையை முடிக்க உதவி செய்றதாகச் சொன்னேன். பாவம் அவங்க... ஆயிரம் தடவை நன்றி சொல்லியிருப் பாங்க. எனக்கும் இப்பதான் நிம்மதி'' என்றார்.

''ரொம்ப நல்ல காரியம் செஞ்சீங்க பர்ன பாஸ். கடமையைச் செய்யாதவங்கள்ட்ட கடு மையா நடந்துக்கிறதுல தப்பில்லைதான்.

## சிறுவர் பகுதி

### ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே. என்றென்றும் பேரன்பு காட்டுபவர் நீரே

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, என் பாத்திரம் நிரம்பி வழிகிறது

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, நீர் போற்றி போற்றி!

உமக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரே உமக்கு நன்றி !

★ ஆண்டவரே, நீர் என்னைக் கைதூக்கிவிட்டீர்

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, நீர் என்னைக் குணப்படுத்தினீர்

உமக்கு நன்றி

★ ஆண்டவரே, மலையென என்னை உறுதியாக நிலைநிற்கச் செய்தீர்

உமக்கு நன்றி

ஆனாலும் அவங்களுக்கும் இதயம்னு ஒண்ணு இருக்கு, அதைக் காயப்படுத்திடக் கூடாது என்கிற நல்ல மனம் ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் இருக்கு. உங்களைப் பத்தி நான் ரொம்பப் பெருமைப்படுகிறேன்'' என்றார் குருவானவர்.

இருதய படஸ்தாபகத்தைப் புதுப்பிப்பதற்கான செபங்கள் சொல்லப்பட்டன. நற்செய்தி வாசிப்புக்குப் பின் சிறிய விளக்கவுரையில் 'நமது இதயங்களைத் தூய்மையாக வைப்பது, அடுத்தவர் இதயங்களைக் காயப்படுத்தாமல் இருப்பது பற்றிச் சொன்ன குருவானவர், பர்னபாஸின் அலுவலக நிகழ்வைப் பாராட்டினார். மனச்சுமை நீங்கி வழிபாட்டில் பங்கேற்பதுதான் உண்மையான வழிபாடு' என்று உணர்த்தினார்.

இருதய படம் புதுப்பிக்கும் நிகழ்ச்சியில் அன்பிய உறுப்பினர்கள் மட்டுமின்றி, அண்டை வீடுகளைச் சேர்ந்த பிற மத அன்பர்களும் நட்புடன் வந்து பங்கேற்றனர். பிற இனத்தாருக்கும் நற்செய்தி அறிவித்த மனநிறைவு குருவானவருக்கு ஏற்பட்டது.

வந்திருந்த அனைவருக்கும் பர்னபாஸ் குடும்பத்தினர் தேநீர், பிஸ்கெட் வழங்கினர். குழந்தையைத் தொட்டு ஆசீர்வதிக்கும்படி அன்னையர்கள் குருவானவரை வேண்டினர்.

அன்பியத் தலைவர் வந்திருந்த அனைவருக்கும் ஆளுக்கொரு படம் வழங்கினார்.

''என்ன படம் சார் இது?'' குருவானவர் கேட்டார்.

''பாருங்க சாமி, அழகான இருதய ஆண்டவர் படம்...'' பின்பக்கத்தில் இயேசுவின் திரு இருதயத்துக்கு குடும்பங்களை ஒப்புக் கொடுக்கும் செபம் அச்சிடப்பட்டிருந்தது.

''எங்க அன்பியம் சார்பாக அன்பியத்திலுள்ள எல்லா வீடுகளுக்கும் இந்தச் செப அட்டையைக் கொடுத்திருக்கிறோம் சாமி. தினமும் வீட்டில் இந்தச் செபத்தைச் சொல்லணும். மனப்பாடமா ஒப்புவிக்கிற பிள்ளைகளுக்கு... எத்தனை பேர் ஆனாலும் சரி, அவங்களுக்கு நல்ல பரிசு, அன்பிய விழாவில் கொடுக்க



முடிவு செய்திருக்கிறோம் சாமி'' என்றார் பர்னபாஸ்.

''வருகிற ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் உங்கள் திட்டத்தை எல்லாருக்கும் சொல்வேன்.

உங்களை முன்மாதிரியாகக் கொண்டு நம் பங்கில் திரு இருதய பக்தி வளரணும்னு ஆசீர்வதிக்கிறேன்'' என்றார்.

எல்லாருக்குமே அது இதயம் நிறைந்த நாளாக அமைந்தது.

- ஜெனி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்காயங்களை ஆற்றுகின்ற மன்னிப்பு



கடந்த கால கசப்புகள் நம் வாழ்வை சீரழிப்பதில், மகிழ்ச்சியற்ற ஒன்றாக மாற்றுவதில் இவற்றுக்கு நிறைய பங்கு உண்டு. இப்படிப்பட்ட கசப்புகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள எல்லா மதங்களுமே மன்னிப்பு என்கின்ற வழியை நமக்கு முன் வைக்கின்றன. அதாவது மன்னிப்பின் மூலம் நம் கடந்தகால கசப்புகளை வெற்றி கொண்டு, புதிய மனிதர்களாக வாழ முடியும்.

மன்னிப்பு நம் கடந்த கால காயங்களைக் காணாமல் போகச்செய்து விடுகிறது என்பது நூறு சதவிகிதம் உண்மை. இதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும். 1981இல் தன்னைச் சுட்டவனையே மன்னித்த மறைந்த திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் ஒரு நல்ல உதாரணம். அடுத்ததாக தன் நாட்டு விடுதலைக்காக போராடிய தென் ஆபிரிக்காவின் மாபெரும் தலைவர் நெல்சன் மண்டேலாவை உதாரணமாகச் சொல்லலாம். சிறைச்சாலையில் 27 ஆண்டுகள் வாடியபின், அங்கிருந்து வெளியேறி நாட்டின் அதிபராக பொறுப்பெடுத்த போது, அவர் தன் பதவியேற்பு விழாவுக்கு அழைத்து, முன் வரிசையில் அமரச்செய்தது, தன்னை சிறைச்சாலைக்குள் தள்ளி கொடுமைப்படுத்தச் செய்த முன்னாள் அதிபர்களையும் அதிகாரிகளையும் தான். அதே போல, தான் தொழுவதற்காக பள்ளிவாசல் செல்லும் போது ஏதோ கோபத்தின் காரணமாக, ஒவ்வொரு நாளும் தன்மீது குப்பை கொட்டிய பெண்மணி நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அப்பெண்ணைச் சந்தித்து ஆறுதல் கூறியவர் நபிகள் நாயகம். இப்படி எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். ஏன் நமது மத்தியில் கூட, பிறரை மன்னித்து வாழும் உயர்ந்த உள்ளங்கள் இல்லாமல் இல்லை.

நாம் மன்னிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பழிவாங்கத் துடிப்பதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று பழிவாங்குதலை வலிமையின் அடையாளமாகக் கருதுவது. பல வேளைகளில் துரதிஷ்டவசமாக, பழிவாங்குவதை வலிமையின் அடையாளம் என்றும், மன்னிப்பதைக் கோழைத்தனமான செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் எண்ணுகின்றோம். எனவே நாம் யார் (நான் யாருங்கிறதை அவனுக்குக் காட்டு றேன்) என்பதை நிரூபிப்பதற்காகவும் நாம் பிறரை விட வலிமையானவர்கள் என்பதைப் பிறருக்கு எடுத்துக் காட்டுவதற்காகவும் பழி வாங்க முற்படுகின்றோம்.

ஆனால் உண்மையில் மன்னிப்பு என்பது பலவீனமான காரியம் அல்ல. அது நமது இயலாமையின் வெளிப்பாடும் அல்ல. மாறாக, நாம் பலமுள்ளவர்கள் என்பதற்கான அடையாளம் அது. எனவே தான் மகாத்மா காந்தி "மன வலிமையுள்ளவர்கள் மன்னிப் பார்கள், கோழைகள் பழிவாங்குவார்கள்" என் கிறார். அதாவது ஒருவரால் பழிவாங்குவதற் கான வாய்ப்பு இருந்தாலும், அவ்வாறு செய்யாமல், மன்னித்தார் என்றால் அவர் மனவலிமையும், மனமுதிர்ச்சியும் உடையவர் என்று பொருள். மேற்சொல்லப்பட்ட அனை வருமே இந்த மன முதிர்ச்சியையும், மன வலிமையையும் தன்னகத்தே கொண்டி ருந்தவர்கள்.

இரண்டாம் காரணம் மன்னிப்பின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளாதது. நாம் மன்னிக்க மறுக்கும்போது, பிறரைப் பற்றிய எண்ணம் நம்மை எப்பொழுதுமே துரத்திக் கொண்டு இருக்கிறது. அவர்களை எப்படி பழி வாங்குவது, அவர்கள் வாழ்வைச் சீரழிப்பது எவ்வாறு என்றெல்லாம் சிந்தனை ஓடிக் கொண்டிருப்பதன் காரணமாக, நாம் முதலில் நம் மன அமைதியை இழக்கின்றோம். மன் னிக்க மறுத்து எதிரியை வழிவாங்க முயற்சிப் பவர்கள், கையில் நெருப்புத் தணலை ஏந்திக் கொண்டு எதிரிமீது எறிய, அவனைத் தேடி அலைகின்ற மூடர்களுக்கு ஒப்பாவார்கள். எதிரியை அது சுட்டெரிப்பதற்கு முன்னால், அதைச் சுமந்து செல்லும் நம்மை அது பலமடங்கு காயப்படுத்தி விடுகிறது. இன் றைய மருத்துவத்துறையின் கருத்துப்படி நம் உடலில் உள்ள இரத்த அழுத்தம், குடல்புண், புற்றுநோய், கவனத்தை ஒரு முகப்படுத்த முடியாத்தன்மை, மன அழுத்தம், மன விரக்தி போன்ற பல நோய்களுக்கு முக்கியமான காரணமாக இருப்பது மன்னிப்பின் மூலம் வெளியே கொண்டு வரப்படாத மனக் காயங்களே.

வகுப்பறை ஒன்றில் ஆசிரியர் ஒருவர் மாணவன் ஒருவனை நடுவில் நிறுத்தி அவன் கையில் ஒரு நீர் நிரம்பிய குவளையைக் கொடுத்து பிடித்திருக்கச் சொன்னார். பின்பு மாணவர்களைப் பார்த்து இம்மாணவன் ஐந்து நிமிடங்கள் இக்குவளையை பிடித்து கொண் டிருந்தால் இவனுக்கு என்ன ஆகும்? என்று கேட்க மாணவர்களோ கை வலிக்க ஆரம்பிக்கும் என்றனர். பத்து நிமிடங்கள் பிடித்திருந்தால்? என்று கேட்ட போது கை அதிகமாக வலிக்கும் என்று பதில் வந்தது. ஒரு மணிநேரம் பிடித்திருந்தால்? என்று கேட்க அவனது கை மட்டுமல்ல, உடல் முழுவதுமே வலுவிழந்து விடும் என்றனர். ஆசிரியர் தொடர்ந்து பேசினார். இதுதான் நீங்கள் ஒரு கசப்பான அனுபவத்தை உங்களுக்குள்ளே வைத்திருந்து அசை போடும்போது நடப்பது! அதை நீங்கள் அதிகமாக உங்களுக்குள் வைத்திருக்க அது உங்களை பாதிக்க ஆரம்பிக்கிறது. உங்களது வாழ்வின் சக்தியை செயலிழக்கச் செய்து விடுகிறது. எனவே மன்னிப்பின் மூலம் அக்கசப்பான அனுபவங்களை நீங்கள் வெளியேற்றாவிட்டால், அவை உங்களைக் காயப்படுத்துவது மட்டுமல்லாமல், உங்களை முழுமையாக வலுவிழக்கவும் செய்து விடுகின்றன.

காயம்பட்ட எல்லா மனிதர்களுமே பழி வாங்கத் துடிப்பதில்லை. நிச்சயமாக ஒரு சிலர் தங்களைக் காயப்படுத்திய நபர்களை மன்னிக்கவே விரும்புகிறார்கள். ஆனால் அவர்களால் மன்னிக்க முடியவில்லை. இதற்கான காரணம் என்னவென்றால் மன்னிப்பதற்கு 'மன்னிக்க வேண்டும்' என்ற ஆர்வம் அவர்களுக்குள் நிபந் தனையற்ற முறையில் இருக்க வேண்டி யது அவசியமாகிறது.

**- அருட்தந்தை ஜெ. மரிய அந்தோனி**

## ஆண்டவரே உமக்கு நன்றி கூறுகிறேன்!

★ ஆண்டவரே, அழிவின் குழியிலிருந்து என்னை வெளிக் கொண்ர்ந்தீர்

**உமக்கு நன்றி கூறுகிறேன்**

★ ஆண்டவரே, நீர் என்னைப் பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர்

**உமக்கு நன்றி கூறுகிறேன்**

★ ஆண்டவரே, நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்.

**உமக்கு நன்றி கூறுகிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சீயோனின் உதவியை ஏற்ற இறைமகன் இயேசு

முதல்: இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு 'நன்றியும் புகழை யும் செலுத்துகின்றோம்.

ஏனென்றால் உம்முடைய திருச் சிலுவையைக் கொண்டு உலகை மீட் டீரே.

இயேசுவின் தியாகத்தின் ஐந்தாம் நிலை இது. இயேசு சீரேன் ஊரைச் சார்ந்த சிமி யோனின் உதவியைப் பெறுகிறார். தன் தியாக வாழ்க்கையின் போராட்டத்தில் கௌரவத்தை யும் இழந்து முன்பின் தெரியாத நபரின் உத வியை ஏற்கிறார் இயேசு.

தன் நண்பர்கள் அனைவரும் ஓடி விட் டார்கள். அவரை வேடிக்கை பார்ப்பதற்கு இங்கே கூட்டம் அதிகம். தனிமையையும், போராட்டத்தையும் சந்திப்பது தியாக வாழ்க்கையில் ஏற்படும் என்பதை இயேசு உணர்கின்றாரோ? தனிநபராக நின்று சமாளிக்காமல், தன் கௌரவத்தை தியாகம் செய்து அடுத்த நபரின் உதவியை ஏற்கிறார் இறைமகன் இயேசு.





### தியானிப்போம்

★ தன் கௌரவத்தை இழந்து, மற்றவரின் முன்னிலையில் உதவியை ஏற்கும் இயேசு ஏன் தன் இறையியல்பை இப்போதுகூட வெளிப்படுத்தவில்லை?

★ வெட்கத்தை ஏன் இயேசு தியாகம் செய்கின்றார்?

★ இப்படி இகழ்வுகளை ஏன் இயேசு ஏற்க வேண்டும்?

எவரையும் சார்ந்து வாழாது, சுதந்திரமாக அடுத்தவர்களின் உதவியின்றி வாழ்வது எல்லோரும் விரும்புவர்.

இது தனி நபரின் வளர்ச்சியையும் குறிக் கின்றது. ஆனால் மற்றவர்களின் வளர்ச்சிக்காக அடுத்தவரின் உதவியை நாடுவது மிக முக்கியமானதுமாகும்.

பொதுநோக்குக்காக வெட்கத்தைவிட்டு, கௌரவம் பாராமல் அடுத்தவரின் உதவியை நாடும் எத்தனையோ நல்லவர்கள் நம் அன்றாட வாழ்வில் சந்திக்கின்றோம்.

தங்கள் இயலாமையை ஏற்றுக்கொண்டு, ஆனால் பிற சிநேகத்தால் தூண்டப்பெற்று, மற்றவர்களின் உதவியை நாடுபவர்கள் நம் வரலாற்றிலும் நம் மத்தியிலும் இருக்கத்தானே செய்கின்றார்கள்?

அவர்களோடு இணைந்து நாமும் நம் கோட் டைகளைவிட்டு இறங்கி அடுத்தவருக்கு உதவ முன் வர சேர்ந்து செபிப்போம்.

### மன்றாடுவோம்

தியாகத்தின் வடிவமே இயேசுவே, எங்கள் கௌரவம் எங்களுக்குத் தடையாக வரும்போது அதனை தியாகம் செய்யும் மனப்பக்குவத்தை வளர்த்தருளும். அடுத்தவருக்குத் தானாக முன் வந்து உதவிடவும், அன்பை வளர்க்கும் பணி யில் அடுத்தவரின் உதவியை நாடவும் தேவை யான ஆற்றலைத் தரவேண்டுமென்று உம்மை இறைஞ்சுகின்றோம். ஆமென்.

– ச.சீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIRAKESARI

# வீரகேசரி

e-Paper

இப்பொழுது சந்தா சேவையாக அறிமுகமாகின்றது..!





ஒரு வருட சந்தாவிற்கு
25%
கழிவு

ஒரு மாதத்திற்கு
மட்டும்
பிரதிகள் இலவசம்..!

epaper.virakesari.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி,
[illegible] ஆம் இலக்கத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org